# காட்டாறு

அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

ஜூன்-2016
பருவம் 2 புனல் -21

தனிச்சுற்று
நன்கொடை ரூ 20

## கண்டி மன்னர்கள் தமிழர்களே !



# தமிழர்களின் நட்பு–பகை–துரோகம்



# மதவெறியர்களுக்கு எதிரான 'மார்த்தாண்டம் மாலை' தோழர் பேபி ஜெபக்குமார் அவர்களுடன் நேர்காணல்

சி.இராவணன், கொடுமுடி ஆ.பாண்டியன்

கன்னியாகுமரி மாவட்டம். இந்து மத வெறி அமைப்புகளும், கிறிஸ்தவ மத நிறுவனங்களும் நிறைந்துள்ள மாவட்டம். மத நம்பிக்கை என்ற நிலையைத் தாண்டி மதவெறி என்ற நிலையில் வாழும் மனிதர்கள் ஆயிரக்கணக்கில் வாழும் இடம். அப்படிப்பட்ட பகுதியில் தெளிந்த அறிவோடும், திடமான துணிவோடும் ஒரு பகுத்தறிவு ஏட்டை நடத்திவருகிறார் தோழர் பேபி ஜெபக்குமார். பெரியார் காலத்தில் மாவட்டத்திற்கு ஒன்று அல்லது இரண்டு பகுத்தறிவு ஏடுகள் வெளியாகிக் கொண்டிருந்தன. பெரியாரின் கருத்துக்களை இந்தச் சமுதாயத்தின் பண்பாடாக மாற்றியவை அவை.

நமது காலத்தில் சமூக வலைத்தளங்கள் சிற்றிதழ்களின் இடத்தைப் பிடித்துக்கொண்டன. ஆனால் பெரியார் காலச் சிற்றிதழ்களின் வீச்சோடு பொருத்திப் பார்த்தால் இந்த சமூக வலைத்தளங்களின் பணி மிக மிகக் குறைவுதான். இந்தச் சூழலில், எந்த ஒரு இயக்கத்தின் பின்புலமும் இல்லாமல், பொருளாதார ரீதியாகவும் பெரும் சிக்கலில் தள்ளும் சிற்றிதழ் என்ற தளத்தில், சிறிய அளவிலான தோழர்கள், நண்பர்களின் தோழமையோடு 'மார்த்தாண்டம் மாலை' என்ற ஒரு பகுத்தறிவு ஏட்டை நடத்தி வருகிறார் தோழர் பேபி ஜெபக்குமார். அவரையும், அவரது 'மார்த்தாண்டம் மாலை' ஏட்டையும் 'காட்டாறு' ஏட்டைப் படிப்பவர்களுக்கும், தமிழ்நாட்டின் மற்ற சில மாவட்டங்களுக்கும் அறிமுகப்படுத்துவது நமது கடமை நோக்கில் இந்த நேர்காணல்.

நீங்கள் எப்படி பெரியார் கொள்கையால் ஈர்க்கப்பட்டீர்கள்?

எங்கள் அப்பா ஒரு கிறிஸ்தவ மத போதகர். சிறு வயதிலே மனநோய் பாதிக்கப்பட்டு இறந்தார். அப்போது எனக்கு ஐந்து வயது இருக்கும். அப்போதே எனக்குச் சில சந்தேகங்கள் கிளம்ப ஆரம்பித்தன. ஒரு மதபோதகர் எப்படி மனநோய் வந்து இறக்கலாம் என்ற கேள்வி வந்தது. பத்தாம் வகுப்பு படிக்கும் போது மண்டைக்காடு கலவரம். குலசேகரம் என்ற ஊரில் உடன் படிக்கும் மாணவர்களுடன் சுற்றுலா சென்ற போது, ஒரு 50க்கு மேற்பட்டோர் கத்தி அரிவாளுடன் நின்று கொண்டு நீ இந்துவா, கிறிஸ்த்துவனா? என்று கேட்டார்கள். எனக்கு ஒன்றும் புரியவில்லை. எனக்குமே யார் என்று தெரியாது. நான் மாணவன் சுற்றுலா செல்ல வந்தேன் என்றேன். அவர்கள் ஒன்றும் சொல்லவில்லை.

இந்து, கிறிஸ்த்துவர்கள் என்ற பிரச்சனை எனக்குள் பல சந்தேகங்களை உருவாக்கியது. அதன் பிறகு கல்லூரிப் படிப்புக்குச் சென்னை சென்றபோது, அங்கு அறையில் நண்பர்களுடன் நாத்திகம், பெரியார் சார்ந்த விவாதங்கள் நடக்கும். அந்தக் காலகட்டத்தில் மதுரைக்குச் சென்ற போது, ஒரு சுவற்றில் "அறிவாளி கண்டது அணுசக்தி! அடிமுட்டாள் கண்டது ஓம்சக்தி! கடவுள் இல்லை, கடவுள் இல்லவேஇல்லை, கடவுளை கற்பித்தவன் முட்டாள் என சுவர் விளம்பரம் எனக்குள் பெரிய விவாதங்களை ஏற்படுத்தியது.

வீட்டில் கடவுள் பற்றி அதிகம் பேசப் படுவதால் எதிர்க்கருத்து பெரிய ஈர்ப்புகளை ஏற்படுத்தியது. எங்கள் பகுதியைத் தாண்டி, தனியாக காலனி என சொல்லி தாழ்த்தப்பட்ட மக்களைப் பிரித்து வைத்திருந்தார்கள். என் அம்மாவிடம் கேட்டேன். அதற்கு அவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் அவர்கள் ஊருக்கு வெளியே தான் இருப்பார்கள் என்று சொன்னார்கள். அது எனக்குள் பல விவாதங்களைக் கிளப்பியது. எனக்குப் பல குழப்பங்களை ஏற்படுத்தியது. ஒருபக்கம் மத்தின்

பெயரால் சண்டை, தாழ்த்தப்பட்டவர் என்று சக மனிதனை ஒதுக்கி வைப்பது, இது மட்டுமல்லாமல் பெந்தகோஸ் போன்ற அமைப்புகளில் உள்ள மூடநம்பிக்கை ஆகியவை இந்த மன நோய் பிடித்த சமூகத்தோடு நாம் வாழ முடியாது என முடிவு செய்து நான் ஒதுங்க ஆரம்பித்தேன். அய்யாவின் கொள்கையை ஏற்றுக்கொண்ட பகுத்தறிவாளர்கள் கூட்டத்தை உருவாக்குவது என முடிவு செய்தேன்.

**பெரியார் கொள்கைகளை ஏற்றுக் கொண்ட நீங்கள் கொள்கையைப் பரப்ப என்ன மாதிரி வேலைகளைச் செய்தீர்கள்?**

நாங்கள் நான்கு ஐந்து பேர் சேர்ந்து ஒரு நூலகத்தை ஆரம்பித்தோம். அதற்கு 'அறிவுக் களஞ்சியம் நூலகம்' எனப் பெயர் வைத்து, ஒரு அறையில் நடத்த ஆரம்பித்தோம். சிலர் வர ஆரம்பித்தார்கள். ஆனால் நூலகத்திற்கு வருபவர்கள் எண்ணிக்கை குறைவாக இருந்தது. இளைஞர்கள் அதிகம் இணையதளங்களில் படித்து விடுவதால் நூலகம் பெரிய அளவிற்கு வரவேற்பு இல்லை. அதனால் நாங்கள் வேறு ஒரு முடிவு செய்தோம். சென்னை அண்ணா நூலகம், பாவாணர் நூலகம் போன்றவைகளில் வாரந்திர கூட்டம் தலைப்புகளில் நடத்துவார்கள். அதனைப் பின்பற்றி நாங்களும் மாதம் ஒரு தலைப்பில் அரங்க நிகழ்வு நடத்த ஆரம்பித்தோம்.

சென்னையில் நான் பத்திரிக்கைத் துறையில் இருந்த அனுபவங்களை வைத்துப் பத்திரிக்கை நடத்தவும் ஆரம்பித்தோம். நல்ல வரவேற்பு இருந்தது. மாதந்திரக் கூட்டத்திற்கு நல்ல வரவேற்பு வர ஆரம்பித்தது. 30 முதல் 70 பேர் வரை வர ஆரம்பித்தார்கள். இளைஞர்கள் வர ஆரம்பித்தனர். கருத்துக்களைக் கேட்டு கைகளில் கட்டியிருந்த கயிறுகளை வெட்டி எரிந்தனர். ஆன்மீகவாதிகளோடு நேரடி விவாதங்களும் நடைபெறும். சுழற்சி முறையில் 300 க்கு மேற்பட்டோர் வருகின்றனர்.

**உங்கள் இதழியல் பணி பற்றி சொல்லுங்கள்**

சென்னையில் பத்திரிக்கையில் பணி செய்த அனுபவத்தின் அடிப்படையில் இந்த இதழை ஆரம்பித்தோம். பகுத்தறிவுக் கண்ணோட்டத்தில் இந்த மாவட்டத்திற்கு மதம் சார்ந்த பகுத்தறிவு தேவைப்படுகிறது. இங்கு இந்துவா? கிறித்துவனா என்ற வேறுபாடு அதிகம். உங்கள் பகுதியில் ஜாதி போல இங்கு மதம் செயல்படுகிறது. இங்கு ஒரு மதமறுப்புத் திருமணம் நடந்தது. அதை ஒட்டி ஒரு கொலை நடை பெற்று பதற்றமானது. அப்படி மத ரீதியான பதற்றம் உள்ள பகுதி ஆகும். ஆர்.எஸ்.எஸ். தமிழ்நாட்டிலே இங்கு தான் அதிகம். பிஜேபி இங்கு தான் வெற்றி பெறும். எங்கள் இதழின் நோக்கம் தமிழ்நாட்டில் பகுத்தறிவு சார்ந்த நுடகங்கள் பரவலாக இல்லை. நீங்க காட்டாறு வெளியிடு கிறீர்கள். சென்னையில் இருந்து அறிவு வழி, உண்மை என வருகிறது. எந்தப் பத்திரிக்கைக்கும் ஜனரஞ்சகமாக ஆனந்த விகடன், குமுதம் மாதிரி இலட்சக்கணக்கான வாசகர் இல்லை.

நகைச்சுவை கலந்து பகுத்தறிவுக் கருத்துக்கள் சொன்னால் அதிக மக்களைச் சென்றடையும். அந்த மாதிரி எங்கள் பத்திரிக்கை குமரி மாவட்டத்தில் அதிகமாகச் செல்கிறது. செலவுகளைத் தோழர்கள் பகிர்ந்து கொள்கிறார்கள். மாதம் 2000 பிரதி அச்சடிக்கிறோம். பத்திரிக்கைக்கு விளம்பரம் பிடித்து இலவசமாகக் கொடுக்கவேண்டும். வெளிநாடுகளில் அப்படித்தான் செய்கிறார்கள்.

**உங்கள் குடும்பத்தில் பெரியார் கருத்துக்களை எப்படி ஏற்றுக்கொண்டார்கள்?**

என்னுடைய திருமணம் சர்ச்லதான் நடந்தது. என்னுடைய துணைவியார் கொஞ்சம் படித்தவர், ஆதலால் புரிந்து கொண்டார்கள். இருந்தாலும் அவர்களால் அதில் இருந்து வெளியே வர முடியவில்லை. குழந்தைகள் பிறந்தது. அவர்களுக்குத் தமிழ் பற்றோடு அறிவுநிதி, அன்பரசி என்று பெயர் வைத்தேன். அப்போது நான் கலைஞர் பற்றாளர். என் குழந்தைகளை திராவிடர் கழகம், திராவிடர் விடுதலைக்கழகம் போன்ற அமைப்புகளில் நடந்த குழந்தை முகாம்களுக்கு அனுப்பி அவர்களை பகுத்தறிவுக் கருத்துக்கு மாற்றினோம்.

எங்கு பகுத்தறிவு விழாக்கள் கூட்டங்கள் நடந்தாலும், அங்கு என் துணைவியாரை அழைத்துச் செல்வேன். அதனால் அவர்கள் ஒரு 75 சதவீதம் மாறிவிட்டார்கள். என் கருத்துக்களைக் கேட்ட என் துணைவியார் உங்கள் பிள்ளைகளுக்கு ஜாதி மறுப்புச் செய்வீர்களா என கேட்பார்கள். நான் அவர்கள் விரும்பி யாரை ஏற்றுக்கொண்டாலும் ஜாதி, மதம் மாறித் திருமணம் செய்யத் தயார் என சொன்னேன். என் கருத்துக்களைக் கொஞ்சம் கொஞ்சமாக ஏற்றுக்கொண்ட என் துணைவியார், இன்று ஜாதி மறுப்புக்குத் தயாராகிவிட்டார். இப்போது அவர்கள் என் கொள்கைக்கு 95 சதம் ஆதரவு. என் மகன் NIT ல படிக்கிறார். அங்கேவும் தன்னை நாத்திகராகத்தான் அறிமுகம் செய்கிறார். என் மகள் 11 வகுப்பு படிக்கிறார். இருவருமே பெரியார் கருத்தை உள்வாங்கியுள்ளனர். என் குடும்பத்தில் நான் எப்போதும் பகுத்தறிவு அறிவியல் கருத்துக்களை பேசிக்கொண்டே இருப்போம்.

**கிறித்துவ மதத்தில் ஜாதி வேறுபாடு, மூடநம்பிக்கை எப்படி உள்ளது?**

இந்த மாவட்டத்தில் கிறிஸ்துவம் இவ்வளவு இருந்தும் ஜாதி வேறுபாடு இருக்கத்தான் செய்கிறது. சமத்துவத்தைப் போதித்த இந்தமதத்திலும் ஜாதி வேறுபாடும், மூடநம்பிக்கையும் இருக்கிறது. நாத்திகம் வளராமல் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை, ஜாதியை, பெண்ணடிமை ஒழிப்பு வளராது, எனவே நாங்கள் கடவுள் மறுப்பை முக்கியக் கொள்கையாகக் கொண்டுள்ளோம். கடவுள் குணமளிப்பார் என நம்பி பலர் மருத்துவமனைக்குச் செல்லாமல் நோய் வந்து இறந்துவிடுகிறார்கள். மேலும் இந்து மதத்தோட தாக்கத்தால் அங்குள்ள அனைத்து மூட நம்பிக்கைகளும் இதிலும் உள்ளது.

**உங்கள் செயல்பாடுகள் பற்றிக் கூறுங்கள்**

என்னிடம் நிறைய பேர் கேட்பார்கள். பெரியார் கிறிஸ்துவ மதத்தை எதிர்க்கவில்லை, நீ ஏன் இப்படி என்று. நான் சொல்லுவேன், பெரியார் ஜாதிகளை ஒழிக்க இந்து மதத்தை ஒழிக்கவேண்டும் என்றார். நாங்கள் எங்கள் கிறிஸ்துவ மதத்தை விமர்சிக்கிறோம் என்பேன். அதனால் நாங்கள் நாத்திகக் கருத்துக்களைப் பேசுகிறோம். கேரளாவில் உள்ள நாத்திக அமைப்போடு சேர்ந்து மந்திரமா? தந்திரமா? என அறிவியல் விளக்க நிகழ்ச்சிகள் செய்கிறோம். வரும் ஜூலை 14 கூட குடும்பங்கள் பங்கேற்கும் ஒரு நாத்திக விழாக் கருத்தரங்கம் நடக்கிறது. நாங்கள் ஒரு சமுதாயமாகச் செயல்பட முடிவு செய்துள்ளோம். அதன் ஒருகட்டமாக சமத்துவச்சுடுகாடு நிறுவ முயற்சி செய்தோம். சில எதிர்ப்புகளால் நடைபெறவில்லை. முதற்கட்டமாக உடல் தானம் செய்கிறோம். இறப்புக்குப் பின்பு சடங்கு செய்வதும், சொர்க்கம், நரகம் ஆகியவற்றின் மீது நம்பிக்கை வைப்பதும் மதவாதிகளுக்கு இருக்கிறது. அதற்கு மாற்றாக இறப்பிற்குப் பின்பு உடல் தானம் என்பது சமுகத்திற்கு பயன்படும்.

**மதவெறியர்களின் எதிர்ப்பு எப்படி உள்ளது?**

எங்கள் சுவரொட்டிகளைப் பார்த்துவிட்டு தொலைபேசி மூலம் மிரட்டுவார்கள். அவர்கள் இரண்டு மதங்களைச் சேர்ந்தவர்களாகவும் இருப்பார்கள். அதிகமாக ஆர்.எஸ்.எஸ். சார்பாக மிரட்டல் வரும். உன்னை வெட்டிவிடுவோம். குத்தி விடுவோம். என மிரட்டுவார்கள். என்னைப் பொறுத்தவரை மதவாதிகள் என்றாலே மனநோயாளிகள்தான். அதனால் அதற்குப் பயப்படத் தேவை இல்லை. விளம்பரம் தருபவர்களைத் தரவிடாமல் தடுப்பது என பல நெருக்கடிகளைத் தந்தாலும், அதற்கு நாம் பயப்படத் தேவை இல்லை.

நாம் வைக்கும் அறிவியல் கருத்துக்களை மறுக்க முடியாமல் மிரட்டுகிறார்கள். நாம் இதை எதிர்கொள்ள அனைவரையும் ஒன்றிணைத்து உழைக்க வேண்டும். சங்கராச்சாரி பற்றிப் பேச சங்கரா டிவி, பி.ஜே.பிக்கு லோடஸ் எனவும் கிறிஸ்தவத்துக்கும், இஸ்லாமுக்கும் தனித்தனி டிவிக்கள் இருக்கும் போது பெரியார் கொள்கைகளைப் பரப்ப ஒரு தொலைக்காட்சி ஆரம்பிக்க வேண்டும். அதற்கு பெரியார் இயக்க தலைவர்கள் அனைவரும் முயற்சி எடுக்க வேண்டும்.

**இந்து மதத்தால் இழிவுபடுத்தப்பட்ட சமூகமான நாடார் சமுகம் எப்படி இந்து இயக்கங்களில் அதிகமாக இருக்கிறார்கள்?**

பார்ப்பனியத்தின் சதிதான். இங்கு மாராப்பு அணியக்கூட மறுக்கப்பட்ட சமூகங்கள் இந்துமதத்தை விட்டு வெளியேறத் துவங்கினர். அவர்களுக்கு கிறிஸ்த்துவம் ஒரு வாய்ப்பாக இருந்தது. அதற்கு எதிராகப் பார்ப்பனியம் பிற்படுத்தப் பட்டோரையும், தாழ்த்தப்பட்டோரையும் பிரித்து வைத்து அதில் சில சமூகங்களை விலைக்கு வாங்கி வேலை செய்கிறார்கள். மேலும் கார்ப்ரேட் சாமியார்கள் யோகா என்ற பெயரில் மக்களை ஏமாற்றுவது போன்ற வேலைகளைச் செய்கிறார்கள். ஆனால் இன்று மாற்றம் வருகிறது. பழைய காட்டுமிராண்டித்தனம் எடுபட முடியவில்லை. பார்ப்பனியம் அதற்கான வாய்ப்பை எதிர்பார்க்கிறது. அனால் பெரியார் மண் என்பதால் இங்கே அவர்கள் நினைத்ததைச் செய்ய முடிய வில்லை. இந்தத் தேர்தலில்கூட ஒரு இடம் கூட வரவில்லை. பொன். இராதாகிருஷ்ணன் வெற்றி பெறுகிறார்கள் என்றால் அது அவரின் தனிப்பட்ட செல்வாக்கு, மனித நேயம் அனைவரிடம் பழகும் தன்மை ஆகும்.

**இலக்கியம் சார்ந்த சிற்றிதழ்கள் மட்டும் வரும் சூழலில் பகுத்தறிவைப் பரப்பும் சிற்றிதழை எப்படி உங்களால் நடத்த முடிகிறது?**

நாங்கள் 40 மேற்பட்ட இதழ்கள் கொண்டு வந்திருக்கிறோம். இப்படிபட்ட இதழ்கள் மாவட்டம் தோறும் வரவேண்டும். அப்போதுதான் பெரியார் கொள்கை மக்களிடம் போய்ச் சேரும். மேலும் நாம் அமைப்பாக விலகி நின்றாலும் பெரியாரியச் சமூகமாக இனைந்தால்தான் நாம் வெற்றி பெற முடியும். மூத்த பெரியார் தொண்டர்கள் வீடுகளில் அவர்கள் கொள்கைக்கு எதிர்ப்பு இருந்தால் நாம் ஒருவருக்கு ஒருவர் ஆதரவாக இருந்து செயல் படவேண்டும். இல்லை என்றால் தனிமைப்படுத்தப் படுவோம். இறப்பு நிகழ்வுகளில் நாம் அமைப்புகளைக் கடந்து இணைந்து நின்றால் நமது கருத்து வலுப்படும். அவர்கள் நம்மைக் கண்டு பயப்படுவார்கள். எனவே அமைப்பைக் கடந்து நாம் ஒருவருக்கொருவர் ஆதரவாக பெரியாரியச் சமூகமாக மாறவேண்டும்.

**நூலகம், சிற்றிதழ் என செயல்படுவதால் சொந்தத் தொழிலில் ஏற்படும் பாதிப்புகள் என்ன?**

முதலில் இருந்தது. பின்பு சரியாகிவிட்டது. ஆரம்பத்தில் ஆர்வத்தில் 4000 பிரதிகள் அடித்து அனைத்து பகுதிக்கும் அனுப்பியதில் சிக்கலாகியது. 4 ஏக்கர் இரப்பர் தோட்டம் விற்றுவிட்டேன். அதில் இழப்புதான் அதன் பிறகு வேறு தொழில் செய்து தயாராகிவிட்டேன். இப்போது இதழ் நடத்த தோழர்கள் நன்கொடை கிடைக்கிறது. பெரியார் கருத்துக்கு மக்களிடம் ஆதரவு உள்ளது. எனது தொழிலும் சரியாகிவிட்டது. எங்கள் நூலகத்தில் சில தோழர்கள் பிரிந்து சென்ற போது வெள்ளிமலைச் சாமியார் என்ற பி.ஜே.பிக்காரர் போன் செய்து என்ன அறிவுக்களஞ்சியம் உடைந்துவிட்டதாம் என மகிழ்ச்சியாகக் கேட்டார். அப்போதுதான் நினைத்தேன், இந்த இதழை எப்படியாவது நடத்தவேண்டும் என்று. எனவே பெரியார் கருத்தை தொடர்ந்து பரப்புவோம்.

# விடுதலைச் சிந்தனைகளை விவாதிக்கும் இறைவி

இராயல் சேலஞ்ச்

எண்ணற்ற கனவுகளோடு மண வாழ்வில் நுழையும் பெண்கள், அவர்கள் கனவு கண்ட வாழ்க்கைக்கு நேர் எதிராகப் பொசுங்கிப் போய் விடுகின்றனர். கணவனின் விருப்பத்திற்கு உட்பட்ட - கணவன் நிர்ணயிக்கும் செக்ஸ், அவனுக்குப் பிள்ளை பெற்றுப் போடுவது, அந்தப் பிள்ளையை வளர்ப்பது, குடும்பத்தைக் கவனித்துக்கொள்வது என்ற மனுசாஸ்திரம் நிர்ணயித்த வாழ்க்கையைக் கேள்விக் குள்ளாக்குகிறது இறைவி. திருமண முறையைக் கிரிமினல் குற்றமாக அறிவிக்கக் கோரியவர் பெரியார். அவரது கருத்துக்கு வலு சேர்க்கிறது இறைவி.

அஞ்சலி - விஜய்சேதுபதி, கமலினி - எஸ்.ஜே.சூர்யா, வடிவுக்கரசி - இராதாரவி என இப்படத்தில் காட்டப்படும் அனைத்துத் திருமண உறவுகளிலும், திருமணம் என்ற முறை பெண்களின் வாழ்க்கையை எப்படியெல்லாம் சின்னா பின்ன மாக்குகிறது என்பதைத் தெளிவாக விளக்குகிறது.



"மனிதன் மிருக பிராயத்திலிருந்தபோது - காட்டு மிராண்டியாக இருந்த காலத்தில் மனிதன் தன் மூர்க்கத்தனத்தைக் காட்டப் பெண்ணை அடக்கியாள, பெண்ணைத் தனக்கு அடிமை யாக்கிக் கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டது தான் இந்தக் கல்யாணம், புருஷன் - மனைவி தன்மையே தவிர, மனிதன் சுதந்திரமாக இருந்தபோது ஏற்பட்டதல்ல. நம் மதம் பெண்களை அடிமையாக்குவது போல, நம் கடவுளும் பெண்களை அடிமையாக்கு வதாகவே இருக்கிறது. நம் இலக்கியங்கள் புராணங்கள் எல்லாம் அப்படித்தான் பெண்ணடிமையை நிலைநிறுத்தக் கூடியதாக இருக்கிறது.

*தோழர் பெரியார், விடுதலை 10.08.1968*

"கோவலனைப் போல, கண்ணகி வேறு ஒருவனைக் காதலித்து, சில நாட்கள் அவனோடு குடும்பம் நடத்திவிட்டு, மீண்டும் மனம் மாறி கோவலனிடம் வந்தால், ஏற்றுக் கொள்வோமா?"

என சிலப்பதிகாரத்தைக் கேள்வி கேட்கிறார் பாபிசிம்ஹா. இப்படிக் கேட்பது மட்டுமல்ல, விஜய் சேதுபதியின் மனைவியான அஞ்சலியைக் காதலிக்கவும் செய்கிறார். அஞ்சலியும் தனது கணவனிடம் தனது காதலை வெளிப்படையாகத் தெரிவிக்கிறார். அப்படி வேறு ஒருவரைக் காதலித் தாலும், சமுதாயத்திற்குப் பயந்து - சமுதாயம் நிர்ணயித்த அந்தத் திருமண வாழ்க்கையைத் தொடர்கிறார்.

திருமண உறவைக் கேள்விக்குள்ளாக்கும் அதே நேரத்தில், ஒருவனுக்கு ஒருத்தி என்ற முறையையும் விவாதத்திற்கு உட்படுத்தியிருக்கிறார்கள்.

"மக்களின் அன்பும் காதலும் ஒரு கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு அது இன்ன விதமாக இன்னாரோடு மாத்திரம்தான் இருக்க வேண்டும் என்பதாக நிர்ப்பந்திக்க எவ்வித நியாயமும் இருப்பதாக நமக்குத் தோன்ற வில்லை. ஏனெனில் காதல் என்பது ஜீவசுபாவமானது. அதை ஏதோ ஒரு நிர்பந்தத்திற்காகத் தடுத்து வைப்பது என்பது ஒரு வகையான அடிமைத்தனமேயாகும். அன்பு, காதல் ஆகியவைகள் ஏற்படுவது ஜீவனுக்கு இயற்கை சுபாவம் என்றும் அது சுதந்திர முடையதாயும் உண்மையுடையதாயும் இருக்க வேண்டுமென்றும் அதை ஒரு இடத்திலாவது ஒரு அளவிலாவது கட்டுப்படுத்துவது என்பது ஜீவ சுபாவத்திற்கும் இயற்கைத் தத்துவத்திற்கும் மீறினதென்றும் ஒப்புக் கொள்ளுகின்ற மக்கள் அன்பு ஒருவரிடம் தான் இருக்க வேண்டும்; காதல் ஒருவரிடம்தான் இருக்கவேண்டும் என்று சொல்ல முன் வருவது முன்னுக்குப் பின் முரண் என்றே சொல்லுவோம்." - தோழர் பெரியார், குடி அரசு - 12.10.1930

என்று பெரியார் அறிவுரைத்தது போல, அஞ்சலி திருமணத்திற்குப் பிறகு பாபி சிம்ஹாவைக் காதலிப்பது, விஜய் சேதுபதி திருமணத்திற்கு முன்பே பூஜாவுடன் உறவு, பூஜாவும் காதல் திருமணத்திற்குப் பிறகு விஜய் சேதுபதியுடன் மறு காதல், விவாகரத்து வாங்குவதற்கு முன்பே, கமலினிக்கு மறுமண ஏற்பாடு என அதிரடிக் காட்சிகள் அடுத்தடுத்து வந்து ஆண்களை அதிர வைக்கின்றன. இவையெல்லாம் நாம் அன்றாட வாழ்வில் சந்தித்து வருபவைதான். ஆனால் அவை எல்லாமே கிசுகிசுக்களாக - பொறணிகளாக, பெண்களை ஒழுக்கம் என்ற ஒருதலைப்பட்சமான சாட்டையைக் கொண்டு ஒடுக்கியே வந்துள்ளன.

இரண்டாம் உறவில் இருப்பதோ, ஒரே நேரத்தில் இரண்டு உறவில் இருப்பதோ, சமுதாயம் ஆண் என்றால் அவனைப் பெருமையாகவும், 'மச்சக்காரனாக'வும் பார்க்கிறது. அதுவே பெண் என்றால் 'ஐட்டமாக'ப் பார்க்கிறது. இறைவி இவற்றை இயல்பாகக் காட்சிப்படுத்துகிறது.

தமிழ்சினிமாவுக்கு முற்றிலும் புதிய கேரக்டர் என்றால் அது பூஜா தேவரியாவின் கேரக்டர்தான். உருகி, உருகிக் காதலித்துத் திருமணம் செய்த பூஜா, தனது கணவரின் மரணத்திற்குப் பிறகு, மறுமணம் என்ற உறவும் இல்லாமல் மனதளவிலும், உடல்அளவிலும் விஜய் சேதுபதியுடன் வாழ்கிறார். சில நேரங்களில் செக்ஸ்க்காகத்தான் இந்த உறவு என்றும் வெளிப்படையாகக் கூறுகிறார்.

"இயற்கை உணர்ச்சியைக் கட்டுப்படுத்தும் படியான எந்தக் கொள்கைகளும், சட்டங்களும் ஒரு நாளும் சரியாக நடைபெறவே நடைபெறாது. அப்படி எங்காவது நடைபெற்றாலும் அது நிலைத்திருக்கவே முடியாது. இந்தக் கொடுமைகள் இப்படி இருக்குமானால் 4 பெண்கள் 5 பெண்கள் கூடி ஒரு ஆணைத் தங்கள் இன்பத்திற்கென்று ஏற்படுத்தி அவனுக்கு நல்ல போஷணையும், அழகும் செய்து அடைத்து வைத்து அவனைத் தங்களது காம இச்சைத் தீர்க்கும் இன்பப் பொருளாய் அனுபவிக்கும் காலமும், வீட்டு அடிமையாய் நடத்தப்படும் காலமும் வந்துவிடும் என்றுதான் கருதுகிறேன்."

தோழர் பெரியார்,

குடி அரசு - சொற்பொழிவு - 28.09.1930

என்ற பெரியாரின் கருத்தை செயலில் காட்டுகிறது பூஜா கேரக்டர்.

பெண் விடுதலையைப் பேசும் இயக்கங்கள், ஏடுகள், புரட்சிகர அமைப்புகள்கூட விவாதிக்கத் தயங்கும் கருத்துக்களை அடிப்படையாக வைத்து எடுக்கப்பட்டுள்ள இறைவி, ஆண்களின் மனதில் பெரும் தாக்கத்தை உருவாக்கும் என்பது உறுதி. ஆனால் சில அய்யப்பாடுகளும் உள்ளன.

திருமணத்திற்குப் பிறகும் வேறொருவனைக் காதலித்தேன் என அஞ்சலி வெளிப்படையாகக் கூறிவிட்டபிறகும், ஆணின் மனது அதாவது விஜய் சேதுபதியின் மனது "அவனோடு படுத்தாளோ?" என்று சந்தேகப்பட்டு அதிர்ச்சியில் உறைந்து போகிறது.

ஒரு சராசரி ஆணைப் பொறுத்தவரை 'கற்பு' என்பது இன்னும் பெண்ணுக்கு மட்டுமே என நினைக்கிறான். கூடுதலாக 'உடலால்' வேறொருவனுடன் தொடர்பு இருந்தால்தான் கற்பிழந்தவள் என எண்ணுகிறான். அஞ்சலி அப்படி வேறு ஒருவனுடன் உடல்தொடர்பு இல்லாதவள் என்பதை உறுதிப்படுத்தும் விதமாகவே காட்சிகள் நகருகின்றன. உடல் தொடர்பு வைத்திருந்தாலும் என்ன குடிமுழுகிப்போய்விடும் என்பது போல காட்சிகளை வைத்திருக்கலாம். அல்லது காதலித்த வனோடு வாழ்க்கையைத் தொடர்வதாக வைத்திருக்கலாம். அப்படி எதுவும் வைக்கப்பட வில்லை. என்னதான் வேரு ஒருவனைக் காதலித்தாலும் கணவனோடுதான் வாழ வேண்டும் என்பதைத்தான் அஞ்சலியின் வழியாக இறைவி கூறுகிறது.

கணவனுடன் வாழும் போதே அவனது மனைவியைக் காதலித்த பாபி சிம்ஹாவை, பெரும் தவறு செய்துவிட்டவனாகவே பார்க்க வைக்கிறது இறைவி. பாபி சிம்ஹாவின் கொலை மூலம் அவரது பாத்திரம் தவறாகவே சித்தரிக்கப்படுகிறது. பாபி

சிம்ஹா கொலை செய்யப்படும்போது திரையரங்கில் எழும் கைதட்டல்கள் சமுதாயத்தின் இயல்பான போக்கை நமக்கு உணர்த்துகின்றன. இறைவியும் அதைத்தான் உணர வைக்க முயற்சிக்கிறது.

பூஜாவின் கேரக்டரும் விடுதலைச் சிந்தனைகளை விதைக்கிறது என்றாலும், அவரும் தனது வாழ்க்கையை - தனது காதலை அஞ்சலிக்காக விட்டுக்கொடுக்கிறார். பூஜா - விஜய் சேதுபதியின் அழகான காதல் வாழ்க்கை முடிவதற்கு வேறு எந்த அழுத்தமான காரணங்களும் காட்டப்படவில்லை. அவசியமே இன்றி அந்தக் காதல் பிரிக்கப்படுகிறது. கமலினியின் வாழ்க்கையும் மறுமணம் இல்லாமல் முடிகிறது. எஸ்.ஜே.சூர்யாவே கமலினியை நிம்மதியாக வாழ விடலாம்; நாம் ஒதுங்கி விடலாம் என நினைக்கிறார். ஆனால் கமலினிக்கு மறுமணம் நடக்கவில்லை.

இறைவி, பாலச்சந்தர் படங்களின் தாக்கமாகவே இருக்கிறது. எடுத்துக்காட்டாக, 1989 ல் வந்த புதுப்புது அர்த்தங்கள் படத்திலும் இப்படித்தான், ஏற்கனவே திருமணமான இரகுமான் - சித்தாரா இருவரும் ஒருவருக்கொருவர் காதலிப்பார்கள். என்னதான் காதலித்தாலும் இறுதியில் தங்களது முதன் இணையுடனேயே வாழ்க்கையைத் தொடருவார்கள். அந்த முதல் திருமணமே சரி என்றே படம் முடியும்.

1981 ல் பாக்கியராஜ் இயக்கத்தில் வெளியான அந்த 7 நாட்கள் படமும் இப்படித்தான். ‘தாலி’ என்ற ஒன்றைக் கட்டியதற்காகவே தனது நெடுநாள் காதலை அழித்துக்கொண்டு, தாலி கட்டிய கணவனுக்குக் கட்டுப்பட்ட மனைவியாக அம்பிகா மாறுவார். “எனது காதலி உங்கள் மனைவி யாகலாம்; ஆனால் உங்கள் மனைவி எனது காதலியாக முடியாது. இதுதான் இந்த மண்ணின் கலாச்சாரம்” என க்ளைமாக்ஸில் பாக்கியராஜ் நீட்டி முழக்குவார். தமிழ்ப்பண்பாட்டின் அடையாளமாக ‘வசந்தி’ காட்டப்படுவாள்.

கிட்டத்தட்ட இதுபோன்ற பிற்போக்குப் படங்களின் முடிவையே இறைவியும் தனது முடிவாக நிறுவுகிறதோ என்ற கேள்வியும் எழுகிறது. இவ்வளவு நீளமான படத்திலும் தெளிவாக ஒரு முடிவைக் கூறவில்லை. ஒருவேளை மிக உயர்ந்த கலைப் படைப்புகள் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில்கூட பாடமாக்கியிருக்கலாம். படம் பார்ப்பவர்கள் இலக்கியவாதிகளோ, வேலை வெட்டி இல்லாத மிக நுணுக்கமான இரசனைக்காரர்களோ அல்ல. நம்மைப் போன்ற சராசரி மக்கள். அவர்களுக்கு ஒரு கருத்தைத் தெளிவாகக் கூறுவதே சிறந்த படைப்பாக இருக்க முடியும்.

எதை நினைத்து, எப்படிப் படம் எடுத்திருந்தாலும், இறைவியின் பெரும்பாலான காட்சிகள், பெரும்பாலான வசனங்கள் பாலின சமத்துவத்திற்கு அடிப்படையானவையே. ஆண்கள் அவசியம் காண வேண்டிய படம். பார்ப்பது மட்டுமல்ல; இப்படம் குறித்த விவாத அரங்கங்களை ஆங்காங்கே நடத்த வேண்டும். பள்ளி, கல்லூரி மாணவர்கள், இளைஞர்கள் இப்படத்தை அவசியம் பார்க்க வேண்டும்.

கருத்துக்களைத் தாண்டி இப்படம் குறித்துச் சொல்ல வேண்டுமானால் முக்கியமாக எஸ்.ஜே.சூர்யாவைப் பற்றித்தான் குறிப்பிட வேண்டும். கார்த்திக் சுப்புராஜ் ஜிகர்தண்டாவில் பாபிசிம்ஹா என்ற கலைஞனை முழுமையாக வெளிக்காட்டினார். அதுபோல இறைவியில் எஸ்.ஜே.சூர்யா என்ற ஒரு சிறந்த நடிகனை நமக்கு அறிமுகப்படுத்தியுள்ளார்.

இறைவி விவாதிக்கும் கருத்துக்களை 85 ஆண்டுகளுக்கு முன்பே 1930 களில் கிராமம் கிராமமாகப் பேசியவர் தோழர் பெரியார். இன்று மிகச்சிறந்த கலை நுட்பத்தோடு, உயர்ந்த தொழில்நுட்பத்தோடு ஒரு திரைப்பட வடிவத்தில் விவாதிக்கப்படும் கருத்துக்களை - எந்தப் பூச்சு வேலையும், எந்த மழுப்பல்களும் - வெண்டைக்காய், வெளக்கெண்ணெய்த்தனங்களும் இல்லாமல் வெட்டு ஒண்ணு, துண்டு ரெண்டாகப் பேசியவர் பெரியார். அதுவும் படிப்பறிவே இல்லாத மக்களிடம் பேசியுள்ளார் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

அவரது பெண்விடுதலைக் கருத்துக்கள் ‘பெண் ஏன் அடிமையானாள்?’ என்ற நூலாகத் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. www.periyarwritings.org என்ற இணையதளத்தில் இலவசமாகவே அக்கட்டுரைகள் கிடைக்கின்றன. இறைவியைப் பார்த்துவிட்டு இந்த இணைய தளத்திலும் பெண்விடுதலைக் கட்டுரைகளைப் படியுங்கள்.

**கற்பு 1** - http://periyarwritings.org/index.php/2015-08-03-06-51-06/2015-09-16-07-11-35/29839-2015-10-05-07-24-49

**கற்பு 2** - http://periyarwritings.org/index.php/2015-08-03-06-51-06/2015-09-16-07-11-35/29818-2015-10-05-07-07-51

**காதல்** - http://periyarwritings.org/index.php/2015-08-03-06-51-06/2015-08-03-06-51-58/30395-2015-10-08-08-17-29


**ஒழுக்கம்** - http://periyarwritings.org/index.php/2015-08-03-06-51-06/2015-09-16-07-15-27/31695-2015-10-20-14-17-37



# 'முகிலினி'
## நூல் அறிமுகம்

தோழர் இரா.முருகவேள் அவர்களின் இரண்டாவது நாவல். அவரின் முந்தைய நாவலான 'மிளிர்கல்' மற்றும் மொழிபெயர்ப்பு நாவலான 'எரியும் பனிக்காடு' போன்ற படைப்புகளை படித்ததின் வாயிலாக, இந்நாவல் எனக்குள் ஒரு எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது. அதனால் நாவல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு எஸ்.இராமகிருஷ்ணனின் அறிமுக உரையைக் கேட்டபின் அதைவாங்கி படிக்கத் தொடங்கினேன்.

நாவல் தொடங்கும் காலம் சுதந்திரம் அடைந்த 1947ஆம் ஆண்டுக்கு பின் ஆரம்பித்து இன்றைய சமகாலம் வரை முடிகிறது.நாவல் குறிப்பிடும் விசயம் கோவையில் மிகப்பெரிய அளவில் செயல் பட்ட 'விஸ்கோஸ்' என்னும் செயற்கை நூலிழை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை உருவானவிதம் மற்றும் அதன் முதலாளிகளின் செயல்பாடுகள் மற்றும் அதிகப்படியான உற்பத்தியால் பவானி ஆறு மாசடைந்தது அதையொட்டி அந்த பகுதி மக்களின் விவசாயம் மற்றும் கால்நடைகள் பாதிப்படைந்தது என்று விளக்குகிறது நாவல்.




எனக்குத் தெரிந்து தமிழகத்தில் நடந்த சூழலியல் போராட்டம் என்றால் கூடங் குளம் அணு உலை எதிர்ப்பு போராட்டம் என்றுதான் நினைத் திருந்தேன். ஆனால் அதற்கு முன்னரே பவானி நதி மீட்புப் போராட்டம் இந்த விஸ்கோஸ் ஆலையை எதிர்த்துப் போராடி கோவை, ஈரோடு மக்கள் வென்றதை இந்த நாவலின் வாயிலாக நான் அறிந்துக் கொண்டேன். இன்று இந்த ஆலை முற்றிலும் தரை மட்டமாக்கப் பட்டிருக்கிறது மக்கள் போராட் டத்தால்.

அதற்குப் பிறகு இந்நாவல் இயற்கைவழி விவசாயத்தைப் பேசுகிறது. ஆனால் இதை ஏன் இதில் சேர்த்தார் எனத் தெரியவில்லை. இந்த ஆர்கானிக் சந்தையை முதலாளிகள் எப்படி அபகரிக்கிறார்கள் அதற்கு என்.ஜி.ஓ மற்றும் கார்ப்பரேட் சாமியார்கள் எப்படி உதவி புரிகிறார்கள் என்றும் விவரிக்கிறது.

இந்நாவலில் ராஜி என்கிற முக்கியக் கதாபாத்திரத்தின் வழியாகக் கதையைக் கொண்டு செல்கிறார் நாவலாசிரியர். இந்த ராஜி ஒரு தலித். ஆனால் தம் அடையாளத்தை மாற்றி வாழ்கிறார். இவரின் வாயிலாகக் கோவை பகுதியின் சாதியச் சிக்கல்ளை அவலங்களை விளக்குகிறார் முருகவேள். அதன் கூடவே கோவை மில் தொழிலாளர்களின் 50 ஆண்டுகால போராட்டம் மற்றும் வாழ்க்கை முறையையும் தொட்டுச் செல்கிறார்.

இதில் ராஜி கதாப்பாத்திரப்படைப்பில் எனக்கு சில முரண்பாடுகள் தென்படுகின்றன. இவர் திமுக ஆதரவாளராகவும் தமிழ் ஆர்வலராகவும் இருக்கிறார். சுதந்திரத்திற்கு பின்னராக காலத்தில் ஒரு இளைஞர் திமுக, தமிழ் ஆர்வலராக இருப்பவர் நிச்சயம் பெரியாரைத் தெரிந்தவராக அவர் கொள்கையைக் கொஞ்சமேனும் அறிந்தவராக இருப்பார். ஆனால் இந்த ராஜி தொழிலாளர் போராட்டம் உள்ளிட்ட விசயங்களில் இருந்து விலகியே இருக்கிறார். மற்றும் சிறுவயதில் சினிமா ஆர்வலராகவும் தியாகராஜ பாகவதர் ரசிகர், பிற்காலத்தில் தமிழ் மற்றும் வெறும் முருக பக்தராக இருந்தார் என்று சொல்கிறார். மேற்சொன்ன இவைகளைதான் என்னால் ஏற்க இயலவில்லை.

இந்நாவல் பல்வேறுப் பட்ட விசயங்களைப் பேசுகிறது. பருத்தித் தட்டுபாடு, இடையில் வரும் மொழிப்போராட்டம், பஞ்சம் மற்றும் திமுக மற்றும் கம்யூனிஸ்டுகளின் செயல் பாடுகள், எதிர்பார்த்த மாற்றம் நடக்கவில்லையே என்று தி.மு.க. காரர் ஏங்குவது என்று அன்றைய அரசியலையும் பேசுகிறது. முக்கியமாகக் கோவை பகுதியின் தகவல் களஞ்சியமாக இந்நாவல் இருக்கிறது.

"இனி ஆற்றங்கரையோரம் எந்தத் தொழிற்சாலையையும் அமைக்கக்கூடாது" என்கிற முக்கியமான தீர்ப்பை, இந்த விஸ்கோஸ் ஆலை எதிர்ப்புப் போராட்டத்தின் வாயிலாகவே உச்சநீதிமன்றத்தில் வென்றெடுக்கப்பட்டது.

கடந்த நூற்றாண்டில் தமிழகத்தில் நடந்த மிகப்பெரிய ஒரு சூழலியல் போராட்டத்தின் வரலாற்றையும், அதன் பின்னணியில் கோவைப் பகுதி குறித்த மிகப்பெரிய தகவல் களஞ்சியமாகவும், இந்த நாவலைப் படைத்திருக்கும் இரா.முருகவேளுக்கும், இந்நாவலை வெளியிட்ட பொன்னுலகம் பதிப்பகத்தாருக்கும் நன்றியும் வாழ்த்துக்களும்.

அரசூர் அ.ப.சிவா

5

# நாலு பேரு நாலு விதமாப் பேசியது

**எது தரமான பள்ளி?**

சென்ற மாதம் முழுவதும் நம் கவனத்தை முழுமையாக ஈர்த்தவை இரண்டு முடிவுகள். ஒன்று தேர்தல் முடிவுகள், மற்றது தேர்வு முடிவுகள். தேர்தல் முடிவுகளைப் பற்றி பலர் பிரித்து மேய்ந்து விட்டதால், நாம் தேர்வு முடிவுகளைப் பற்றிப் பார்ப்போம் என அலசினால் தலை சுத்தி வராத குறைதான்.

ஒவ்வொரு தனியார் பள்ளியின் முன்பும் பெரிய அளவுகளில் பிரமாண்டமாய் நின்ற வினைல் ஒட்டிகளில் அரசியல்வாதிகள் தோர்த்துப் போகும் அளவுக்கு மாணவர்கள் படங்கள்.

*1175 க்கு மேல் வாங்கியவர்கள் இத்தனை பேர் .*

*1150 க்கு மேல் வாங்கியவர்கள் இத்தனை பேர்*

*490 க்கு மேல் வாங்கியவர்கள் இத்தனை பேர்*

*475 க்கு மேல் வாங்கியவர்கள் இத்தனை பேர் என ஒரே களோபரம் தான் அதிக மதிப்பெண் எடுப்பது எங்களுடைய பயிற்சியில் தான் எங்கள் பள்ளிதான் நல்ல பள்ளி என்ற ரீதியில் கூவிக் கூவி விற்கிறார்கள்.*

*எனக்குத் தெரிந்த தனியார் பள்ளி ஆசிரியர் ஒருவர் சொன்ன செய்தி, அவரது பள்ளியில் 10 ம் வகுப்பு எழுதியவர்கள் எண்ணிக்கை மொத்தம் 130 அதில் 60 பேர் தான் 400 க்கும் மேல் மதிப்பெண் வாங்கியவர்கள் மற்ற 70 பேர் 400 க்கும் கீழாகவே மதிப்பெண் பெற்று தேர்ச்சி அடைந்து உள்ளனர். ஏறக்குறைய 50 சதவிகிதம் மாணவர்கள் சுமாராக தேர்வாகி உள்ளதை அப்பள்ளி வெளிப்படுத்துமா? அப்பள்ளியின் குறைந்த மதிப்பெண் பெற்ற மாணவரின் மதிப்பெண் வெளியிடப்படுமா? அது தான் பள்ளியின் தரம். எல்லா வசதிகளும் மேலுள்ளவர்களுக்கே கிடைக்க வேண்டும் என்ற வர்ணாசிரம முறை தானே இது?*

இச் செய்திகளிடையே மனதுக்கு மகிழ்வான செய்தியாக வந்தது மதுரை மாவட்டம் வன்னிவேலம்பட்டி அரசு பள்ளி தனியார் பள்ளிகளால் தேறாது எனக் கைவிடப்பட்ட 14 மாணவர்களைத் தேர்ச்சி பெற வைத்துள்ளது. அதுதான் தரமான பள்ளி. ஏனென்றால் ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் வேலை செய்வது இம்மாதிரி பள்ளிகளில் தான். அப்புறம் தேர்வு பெறாத அதாவது பெயிலான வாத்தியார்கள் வேலை செய்வது எந்தப் பள்ளிகள் என நான் சொல்ல வேண்டியதில்லை.

எங்கள் ஊருக்குப் பக்கத்தில் பிரம்மாண்டமாய் ஒரு தனியார் பள்ளி வேலை நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. அது ஏற்கனவே பக்கத்து மாவட்டத்தில் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கும் பள்ளியாம். அதைக் கேட்டு பக்கத்து வீட்டுக்காரர் அவர் பிள்ளைகளை அங்கே சேர்க்கப் போனார், உடன் நானும் சென்றேன். அப்பள்ளி வராண்டாவில் செய்தித்தாளை புரட்டியபோது தட்டுப்பட்டது அந்த விளம்பரம் .

அது அந்தப் பள்ளிக்கூடத்துக்கு முதல்வர் முதல் ஆய்வக உதவியாளர் வரை வேலைக்கு ஆட்கள் தேவை என்ற விளம்பரம்.

**நிம்மதியாத் தூங்க முடியாது!**

என்ன இருந்தாலும் அவரிடமிருந்து இப்படி ஒரு அறிக்கையை யாரும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். எல்லோரையும் அதிர வைத்துள்ளது அவ்வறிக்கை. அடுத்த விமானத்தில் விஜய் மல்லையா இந்தியாவிற்கு வந்து தனது 9000 கோடி கடனையும் ஒரே நாளில் செலுத்தி விடுவது மட்டும் உண்மை.

அப்புறம் இந்தியாவில் எந்த நகரங்களுக்கு இரவு நேரங்களில் நீங்கள் சென்றால் அங்கு தூக்கம் வராமல் அலைந்து கொண்டிருக்கும் யாராக இருந்தாலும் அவர்கள் கடன் வாங்கிக் கொண்டு வங்கியை ஏமாற்றியவர்களாக இருப்பார்கள். அது மட்டும் நிச்சயம். இரவு ரோந்து போகும் காவலர்கள் சாலையில் அலைந்து திரிந்து கொண்டிருப்பவர்கள் மேல் எல்லாம் இனி சந்தேக கேஸ் போட்டு உள்ளே தள்ள முடியவே முடியாது ஏனெனில் அவர்களுக்கு நாலு மில் ஓடிக் கொண்டிருக்கும்.

எப்படி இதெல்லாம் சாத்தியம் இப்படிப்பட்ட அறிக்கையை யார் தந்தது? யாருக்கு இப்படிப்பட்ட அதிகாரம் இருக்கு என நீங்கள் ஆச்சரியத்தோடு கேட்டால் அவர் வேறு யாருமல்ல மோடி அமைச்சரவையின் நிதி அமைச்சர் அருன் ஜெட்லியே ஆவார். அவரின் அந்த அறிக்கை .

நாட்டில் 10 பொதுத்துறை வங்கிகள் மார்ச் மாதத்துடன் முடிந்த காலாண்டில் 15 ஆயிரம் கோடி ரூபாய் நஷ்டத்தைச் சந்தித்து உள்ளன. வங்கிகளின் வராக்கடன் அதிகரித்து உள்ளதால் அதில் ஈடு செய்வதால் ஏற்பட்ட நஷ்டம். இது மோசடி அல்ல. குறிப்பிட்ட சில தொழில்கள் மற்றும் நிறுவனங்கள் முடங்கியதால் வராக்கடன் அதிகரித்து உள்ளது. (அதெப்படி வராதுவந்த மாமணி மோடியின் ஆட்சியில் தொழில்கள் முடங்கும் என நீங்கள் கேட்டால் அதை விளக்கும் அளவுக்கு நமக்கு படிப்பு பத்தாதுங்கோ) அக்கடன்களை வசூலிக்கப் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. வங்கியில் கடன் வாங்கி விட்டு ஏமாற்ற நினைப்பவர்கள் இனி நிம்மதியாகத் தூங்க முடியாது.

நிதியமைச்சரின் அவ்வறிக்கையைப் படித்து விட்டு தூங்கப் போனால் இரவு 12 மணிக்கு கைப்பேசிக்கு குறுந்தகவல் வருது உங்க வீட்டுக் கடன் கட்ட வேண்டிய நாள் இன்று என. அரசாங்கம் வேகமாத்தான் இயங்குது.

**காட்சிப்பொருளா அம்பாள்?**

இதுவும் இன்னொரு அறிக்கை சமாச்சாரம் தான். இந்து முன்னணி தலைவரிடமிருந்து இப்படி ஒரு அறிக்கையா? என ஆச்சரியப்பட வைத்தது. கடந்த ஜீன் 3 ம் தேதி அவர் சொன்னதாக வாட்ஸ் அப்பில் வலம் வந்தது, ரமலான் நோன்புக் கஞ்சிக்காக 4600 மெட்ரிக் டன் அரிசியை வழங்கியுள்ளது தமிழக அரசு அதை கண்டித்து வெளியிட்ட அறிக்கையில், ஓரிரண்டு முத்துகளை உதிர்த்து இருக்கிறார் அவர். அம்முத்துக்கள் இதோ .

இந்துக்கள் ஏமாளிகள் அவர்களை எப்படி வேண்டுமானாலும் ஏமாற்றலாம் என்பதைத் திராவிடக் கட்சிகள் நன்கு தெரிந்து வைத்துள்ளன. ஆனால் இந்து மக்கள் விழிப்படைந்து வருகிறார்கள் தங்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக அவர்கள் போராடவும் தயங்குவதில்லை. இது இந்து முன்னணி தொடங்கி இந்து விழிப்புணர்வை 36 ஆண்டுகளாகப் பிரச்சாரம் செய்ததன் பயனாக முடிந்திருக்கிறது.

ஆக இந்துக்கள் ஏமாளிகள் அவர்களை நாத்திகத்தை அடிப்படையாகக் கொண்டதாகச் சொல்பவர்கள் வழி வந்த திராவிட அரசுகள் ஏமாற்றின. அவர்களைக் காப்பாற்றக் கடவுள்கள் ஏதுமில்லை அதனால் இந்து முன்னணி தொடங்கி அதுவும் 36 ஆண்டுகள் போராடி விழிப்புணர்ச்சி ஏற்படுத்தியதாக இராம கோபாலன் தெரிவித்து உள்ளார்..

இப்ப இந்துக்கள் எனச் சொல்லப்படுபவர்கள் ஏமாற்றப்படுகிறார்கள் எனவும் அதிலிருந்து மீள போராட்டம் ஒன்றே வழி எனவும் ஒப்புக் கொண்டுள்ளார் இராம கோபாலன். அப்புறம் எதுக்கு பூஜை புனஸ்கரம் இந்த இழவெல்லாம் என்பதையும் சொல்லி விட்டால் இன்னும் தெளிவாக இருக்கும். மற்றோர் முத்து அவர் உதித்தது .

கோவிலுக்கு வரும் அப்பாவி பக்தர்களிடம் சுவாமி அம்பாளைக் காட்சி பொருளாக்கி தரிசனம் செய்ய பல வழிகளிலும் கட்டண கொள்ளை நடைபெறுகிறது..

இருந்தாலும் இராமகோபாலன் இந்தளவுக்கு நாத்திகம் பேசக் கூடாது அப்புறம் என்னங்க? அவரே அம்பாள் காட்சிப் பொருள் என்பதையும், அவர் அப்படி காட்சிப் பொருளாக ஆக்கப்பட்டு இருக்கிறார் என்பதையும் தன் வாயால் ஒப்புக் கொண்டுள்ளார் வீரத்துறவி. இப்ப நமக்கு ஒரு சந்தேகம் தீர்ந்து மற்றோர் சந்தேகம் பிறந்திருக்கிறது.

தீர்ந்த சந்தேகம். அம்பாள் காட்சிப் பொருள் என்பது, புதிதாக எழுந்துள்ள சந்தேகம் அம்பாளைக் காட்சிப் பொருளாக்கியது யார்? அரசாங்கமா? அய்யர்களா? தீர்த்து வைப்பீர்களா? வீரத்துறவி அவர்களே ..

**ஏதோ ஆட்டோக்காரர் மகனாம்?**

ஆனாலும் பாருங்க நம்ம மக்களுக்குத் தொலைநோக்கு பார்வையே கொஞ்சம் கூடத் கிடையாதுங்க எதுக்கெடுத்தாலும் குத்தம் கண்டுபிடிச்சா எப்படி? அப்படி என்ன பெரிய குத்தம் மகாராஷ்டிரா கிரிக்கெட் சங்கம் செய்தது? நம்மூர் பழமொழி அடிப்படையில் ஒரு முடிவு எடுத்தா அதை இப்படியா விமர்சிப்பது?

அட, ஆமாங்க நம்மூர் பக்கம் சொல்லுவாங்க இல்லையா "தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறடி பாயும்" அப்படின்னு. அதை மனதில் வைத்துத் தான் நம்ம மாஸ்டர் பிளாஸ்டர் மகனை 16 வயதுக்காரர்களுக்கான அணியில் தேர்ந்தெடுத்து உள்ளார்கள். இதில் போய் எல்லோரும் அரசியல் செய்து கொண்டு ஏதோ ஒரு ஆட்டோ டிரைவர் மகனாம். அவரு பெயர் கூட ஏதோ பிரவின் தண்டவே யாம் வெறும் 327 பந்துகளில் 1009 ரன் அடிச்சு ஏதோ ஒலக சாதனை எல்லாம் செஞ்சு இருக்கிறாராம். அவருக்கு அணியில் இடம் இல்லையாம்.

இதெல்லாம் ஒரு செய்தியா அந்த பையனோட அப்பா யாரு வெறும் ஆட்டோ டிரைவர். ஆனால் அர்ஜூனின் அப்பா யாரு? அவர் நாட்டுக்காகச் செஞ்ச தியாகங்கள் கொஞ்சமா? நாளைக்கு அவரு மகன் பதினாறடி தாண்டினா யாருக்கு பெருமை? இதெல்லாம் கொஞ்சம் கூடப் புரியமா ஜீவா படத்தப் பார்த்துக் கெட்டுப் போயிருக்காங்க இந்தச் சமூகவலைவாசிகள். நமக்கு இந்த அரசியல் எல்லாம் தெரியாதுங்க அதனால் நாம் அர்ஜூன் டெண்டுல்கரை வாழ்த்துவோம்.

ஏற்கனவே பதினாறடி பாய்ந்த குட்டிகள் ரோகன் கவாஸ்கர் போல, அனிருத் ஸ்ரீகாந்த் போல உங்கள் கிரிக்கெட் வாழ்க்கையும் பிரகாசிக்க வாழ்த்துகள் தம்பி ..

அதி அசுரன்

1

# தமிழர்களின் நட்பு-பகை-துரோகம்.

## துட்டகாமினி தொடங்கிய போர்

தமிழீழ விடுதலைப்போராட்ட வரலாறு பற்றி நாம் பேசும் போதும், எழுதும் போதும் கி.பி.1956 ல் S.W.R.D.பண்டாரநாயகாவின் ஆட்சி காலத்தில் கொண்டு வரப்பட்ட 'தனிச்சிங்களச் சட்டத்தி'லிருந்துதான் தொடங்கு கிறோம்.


ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் இலங்கையில் கொண்டுவரப்பட்ட, 1931 முதல் 1947 வரை நடைமுறையில் இருந்த 'டொனமூர் ஆணைக்குழு'வின் புதிய அரசியலமைப்புச் சட்டம், இந்த அரசியலமைப்பையும் திருத்தி வெளியான சோல்பரி அரசியலமைப்புச்சட்டம் ஆகிய ஆங்கிலேய அரசியல் அமைப்புச்சட்டங்களே தமிழர் - சிங்களர் இனப்பகையை உருவாக்கி வளர்த்தன என்று சில அமைப்புகள் பதிவுசெய்கின்றன.

நாம் தமிழர் கட்சி இன்னும் கொஞ்சம் பின்னோக்கிப் போனது. இலங்கையில் இருந்த பல்வேறு அரசுகளில் ஒன்றான கண்டி அரசை 1739 - 1815 வரை ஆண்ட தமிழ்நாட்டு மன்னர்களே தமிழர் - சிங்களர் இன மோதலைத் தொடங்கி வைத்தனர் என நம்பவைக்க முயற்சி எடுத்துள்ளது.

**சிங்கள ஆதிக்கத்துக்கு ஆதரவு**

தமிழ்நாட்டின் ஆதிக்கச்சக்திகள் பார்ப்பனர்கள். அந்த ஆதிக்கநிலையை அடைய அவர்களுக்கு உதவியவை கடவுள், வேதங்கள், புராணங்கள், சாஸ்திரங்கள் போன்றவை. இந்த உண்மைகளை ஒடுக்கப்படும் தமிழ்மக்கள் அறிந்துவிடக் கூடாது என்பதற்காக -ஆதிக்கச்சக்திகளான பார்ப்பனர்களைக் காப்பாற்ற - பார்ப்பன எதிர்ப்பைத் திசைதிருப்பத் திட்டமிட்டு - தெலுங்கர், மலையாளி, கன்னடர் எதிர்ப்புக்கள் உருவாக்கப் பட்டன.

அப்படிப் பார்ப்பன நலன்களுக்காகப் பாடுபடும் முக்கிய அமைப்பு நாம் தமிழர் கட்சி. 2015 வரை தமிழ்நாட்டு அளவில் இயங்கிவந்த இந்த அமைப்பு, 2016 ல் தமது துரோக எல்லையை தமிழீழம் வரை விரிவாக்கியுள்ளது. அக்கட்சியின் துணை அமைப்பான 'வீரத்தமிழர் முன்னணி' அண்மையில் வெளியிட்டுள்ள கண்டி நாயக்கர் ஆவணப்படத்தில்,




**"சிங்களர்களின் போர்வையில் காட்டுமிராண்டித் தெலுங்கர்கள் இருப்பதால், தமிழர்களுக்கு எதிராகத் தாக்குதல் நடத்துவது பவுத்த வெறிபிடித்த சிங்களர்கள் என வெளிஉலகத்தை நம்ப வைத்துள்ளனர்"**

– கண்டி நாயக்கர் ஆவணப்படம் நேரம் 0.27.07

அதாவது, இலங்கையில் 18 நூற்றாண்டுகளாகத் தமிழர்களைக் கொன்று அழிப்பவர்கள், பல நூற்றாண்டுகளாகத் தொடர் இனப்படுகொலையை நடத்துபவர்கள் சிங்களர்கள் அல்ல; ஆந்திர தேசத்துத் தெலுங்கர்கள் என்பதைத்தான் நாம் தமிழர் கட்சி வெளிப்படையாக அறிவித்துள்ளது. அதுமட்டுமல்ல,

“இலங்கையில் வாழும் உண்மையான சிங்கள மக்களுக்கு இலங்கையில் பிரதமராகும் வாய்ப்பு ஒருமுறைகூடக் கிடைக்காமல் பார்த்துக் கொண்டனர் சிங்களப் போர்வையில் இருக்கும் தெலுங்கர்கள்.”

எனச் சிங்கள இன மக்களின் உரிமைக்காகவும் குரல் எழுப்பியுள்ளனர். இலங்கையை ஒரு பௌத்தவெறி நாடாக மாற்றியுள்ள பொதுபல சேனாக்காரர்களும், முள்ளிவாய்க்கால் இனப் படுகொலையை நடத்திய சிங்கள – இந்திய – பன்னாட்டு அதிகார மய்யங்களும் பொறாமைப்படும் அளவுக்கு – அவர்களுக்குப் போட்டியாகச் சிங்கள வெறியர்களைக் காப்பாற்றுகிறது இந்த அமைப்பு.

**கண்டி அரசு**

இலங்கையின் மத்திய மலைப்பகுதியில் இருந்த ‘கோட்டே’ அரசுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து, அதிலிருந்து பிரிக்கப்பட்டுத் தனி அரசாக உருவானதுதான் ‘கண்டி அரசு’. கி.பி.1469ல் சேனா சம்மத விக்கிரபாகு என்ற சிங்கள மன்னன்தான் இந்தக் கண்டி அரசை உருவாக்கினார். இலங்கையில் இருந்த பல அரசுகளில் ஒன்று கண்டி அரசு. கண்டியை கி.பி.1739 முதல் கி.பி.1815 வரை ஆண்டவர்கள் நாயக்க மன்னர்கள். கண்டி நாயக்க அரசின் கடைசி மன்னர் ஸ்ரீ விக்கிரமராஜ சிங்கன் ஆவார். 1815ல் கண்டி அரசு ஆங்கிலேயப் படையெடுப்பில் சிக்கியது. கண்டி அரசர் சிறை பிடிக்கப்பட்டு, 1832 ல் தமிழ்நாட்டில் வேலூரில் மறைந்தார்.

இது உண்மை வரலாறு தான். இந்த உண்மையோடு ஒரு வரலாற்றுப் பொய்யை இணைத்தனர் நாம் தமிழர் கட்சியினர். அதாவது, 1739 – 1815 வரையான 76 ஆண்டுகளில் கண்டியை ஆண்ட நாயக்கர்களின் வாரிசுதான் 1947 ல் இலங்கையின் முதல் பிரதமர் டான் ஸ்டீபன் சேனாநாயகா. நாயக்கர்களின் வாரிசுகள் தான் இன்று வரை இலங்கையை ஆண்டு வருகின்றனர். இலங்கையின் பிரதமர்கள், அதிபர்கள் அனைவரும் சிங்களர்கள் அல்ல; தெலுங்கர்கள். இதுதான் அவர்களின் வாதம்.

வெறும் 76 ஆண்டுகள் இலங்கையின் ஒரு சிறு பகுதியான – ஒரு குறுநில அரசில் வாழ்ந்த நாயக்கர்கள் – ஏற்கனவே அங்கு வாழ்ந்த சிங்களர்களின் மொழியைப்பேசி, பௌத்தமதத்தில் நுழைந்து அதன்வழியே இன்றுவரை அரசுகளையும் கைப்பற்றினர் என்கின்றனர்.

அடிப்படையாக நாம் அறிந்துகொள்ள வேண்டிய வரலாறு,‘சிங்களர்’ என்ற இனம் எப்படித் தோன்றியது? அதையும் கண்டி நாயக்கர் ஆவணப்படத்திலேயே மகாவம்சத்தைச் சான்றாக வைத்துக் கூறுகிறார்கள்.

**தமிழ்ச்சிங்களர்கள்**

வடஇந்திய, கலிங்கப் பகுதியிலிருந்து வந்தவர்களும், பாண்டியர்களும் இணைந்ததால் – கலந்ததால் உருவான வர்களே ‘சிங்களர்’ என்ற இனம். கலிங்கர்களும், தமிழர்களும் இணைந்து தான் சிங்கள இனம் உண்டானது என்பதற்குச் சான்றாக மயிலை. சீனி.வேங்கடசாமி அவர்கள் கூறுவதைப் பார்ப்போம்.

“கி.மு. 5ஆம் நூற்றாண்டில் இலங்கைக்கு வந்த விசயனும் அவனுடைய எழுநூறு தோழர்களும் தமிழகத்திலிருந்து பாண்டிய நாட்டு மகளிரை மணஞ்செய்து கொண்டதை முன்னமே அறிந்தோம். பாண்டி நாட்டிலிருந்து இலங்கைக்குச் சென்ற எழுநூறு மணமகளிரோடு அவர்களைச் சேர்ந்த பரிவாரங்களும், பதினெட்டு வகையான தமிழத் தொழிலாளர் குடும்பங்கள் ஆயிரமும் இலங்கைக்குப் போனார்கள் என்பதையும் அறிந்தோம். அவர்கள் எல்லோரும் தமிழ்மொழி பேசியவர்கள். அதனால், காலப்போக்கில் தமிழ்மொழியும் வட இந்திய மொழியும் சேர்ந்து புதுவைகையான பழைய சிங்கள மொழி (ஈளுமொழி) தோன்றிற்று.

இந்தக் கலப்புத் திருமணத்தின் காரணமாகத் தோன்றிய சந்ததியார் சிங்களவர் அல்லது ஈழவர் என்று பெயர் பெற்றனர். தமிழ் – சிங்கள உறவு அந்தப் பழங்காலத் தோடு நின்றுவிடவில்லை. இடையிடையே அவ்வக் காலங்களில் தமிழகத்திலிருந்து சில தலைவர்கள் தமிழ்ச்சேனையை அழைத்துக் கொண்டுபோய் இலங்கையாட்சியைக் கைப்பற்றிச் சில பல காலம் அரசாண்டதையும் வரலாற்றில் கண்டோம். அந்தத் தமிழர் ஆட்சிக் காலத்தில் தமிழக வீரர்களும் தமிழகக் குடும்பங்களும் இலங்கையில் தங்கி வாழ்ந்தனர். அவர் களில் சிலர் சிங்களவர்களாக மாறியிருக்கக்கூடும். (1)

**தமிழர் – சிங்களர் பண்பாட்டு ஒற்றுமை**

இரண்டு இனங்களும் கலந்து உருவானதே சிங்களர் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் பண்பாட்டு அளவிலும் தமிழர் – சிங்களர் இரு இனங்களுக்கும் இடையேயுள்ள பொதுவான கூறுகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவர் கலாநிதி சி.க.சிற்றம்பலம் ‘ஈழத்தமிழர் வரலாறு – கி.பி 1000 வரை’ என்ற வரலாற்று ஆய்வு நூலில் விளக்குகிறார்.

“தமிழ், சிங்கள மொழிகளுக்கிடையே காணப்பட்ட அடிப்படை ஒற்றுமை – பௌத்த மதத்தோடு வந்த பாலி மொழியின் செல்வாக்கால் சிங்களம் என்ற தனியான ஒரு போக்கில் செல்லுமுன்னர் அது திராவிட மொழிக்குரிய பண்புகளுடன் விளங்கியதை எடுத்துக் காட்டியுள்ளது. அத்துடன் சிங்கள –தமிழ்ச்சமூகங்களிடையே நிலவும் உறவு முறைப் பெயர்கள், பண்பாட்டு அம்சங்கள் ஆகியனவும் இதனை உறுதிப்படுத்துகின்றன. பௌத்தத்தைத் தழுவும் முன்னர் சிங்கள மக்களின் மூதாதையர் இந்துக்களாகவே விளங்கினர். இதனை ஈழத்தின் மிகப்பழைய கல்வெட்டுக்களாகிய பிராமிக் கல்வெட்டுக்களே எடுத்தியம்புகின்றன...” என்று கூறியுள்ளார். (2)

மயிலை வேங்கடசாமி அவர்களும் இந்தப்பண்பாட்டு ஒற்றுமையை விளக்கியுள்ளார். அவரது பண்டைத் தமிழக வரலாறு – கொங்குநாடு – பல்லவர் – இலங்கை வரலாறு என்ற நூலில்,

“இலங்கையில் வாழ்கிற தமிழர்களால் முருகனும் திருமாலும் வழிபடப்படுகின்றனர் என்பது மட்டும்

அல்ல; தமிழரல்லாத பௌத்தராகிய சிங்கள மக்களாலும் முருகனும் திருமாலும் தொன்று தொட்டு இன்றுகாறும் வழிபடப்படுகின்றனர். முருகன் சிங்களவர்களால் ஸ்கந்தன் என்றும் கந்தன் என்றும் வழிபடப்படுகிறார். திருமால், விஷ்ணு என்றும் மாவிஸ் உன்னானே என்றும் வருணன் (உபுல்வன்) என்றும் சிங்களவர்களால் வழிப்படப்படுகிறார்.

ஸ்கந்தனாகிய முருகனை (இலங்கைத் தமிழர் வழிபடுவது மட்டுமல்லாமல்) சிங்களவரும், இலங்கைக் காட்டில் வாழும் வேடர்களும் வழிபடுகின்றனர். ஸ்கந்தனைக் கெலெதெவியோ (கல்தெய்வம், கல்-மலை, தெவியோ - தெய்வம்) என்றும் கலெ இயக்க (கலெ - மலை, இயக்க - சிறுதெய்வம்) என்றும் கூறுகிறார்கள்.''(3)

இன்றும் சிங்களர்களிடையே, சேர, சோழ, பாண்டிய நாட்டு மக்களின் பண்பாடுகள் நிலவுவதை இந்நூல் விரிவாக விளக்கியுள்ளது. கி.மு 5 ஆம் நூற்றாண்டில் விஜயன் வந்ததாக மகாவம்சம் கூறுகிறது. அப்படியானால் தமிழர் - பாண்டியர் இணைப்பு ஏற்பட்டு, சிங்களர் என்ற இனம் உருவாகி ஏறத்தாழ 2500 ஆண்டுகள் ஆகிவிட்டது. கண்டி நாயக்கர் ஆவணப்படமும் இந்த வரலாறுகளை ஏற்றுக் கொள்கிறது.

வெறும் 76 ஆண்டுகள் நாயக்கர் மன்னர்களில் சிலர் சிங்களர்களோடு கலந்தனர் என்பது போன்ற கற்பனையான கதைகளைக் கொண்டு, சிங்கள இனத்தையே நாயக்கர் ஜாதியாகக் காட்ட முடியுமானால் - 2500 ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்நாட்டுப் பாண்டியர்களால் உருவானதே சிங்கள இனம் என்ற வரலாற்று உண்மைகளை அடிப்படையாக வைத்து 'பாண்டியர்கள் தான் சிங்களர்கள்' என்று நம்மாலும் கூறமுடியும்.

நாம் தமிழர் கட்சியினரின் ஆய்வுகளின் அடிப்படையில் நாமும் அவர்களைப் போலவே பிறப்பு ஆராய்ச்சி செய்தால், தற்போது 'ஈழத்தமிழர்கள் மீது இனப்படுகொலையைக் கட்டவிழ்த்து விடுபவர்கள் தமிழ்நாட்டுப் பாண்டியர்கள்' என்று தான் பேச முடியும். இப்படிப்பட்ட இழிவான ஆய்வுகள் எதற்குப் பயன்படும்? ஈழத்தமிழர்களின் உண்மையான எதிரியான சிங்கள இனவெறியர் களைக் காப்பாற்றவே பயன்படும்.

## இனத்தை அறிவது எப்படி?

உலகில் எந்த இனத்தையும் அது, வேறு ஒரு இனத்தோடு கலக்காத தனித்துவமான இனம் என்று அறிவியல்பூர்வமாக உறுதிப்படுத்த முடியாது. எல்லா தேசிய இனங்களும் கலப்படமானவையே. அப்படியானால் எந்த அடிப்படையில் ஒடுக்கும் இனத்தையும், ஒடுக்கப்படும் இனத்தையும் பிரித்து அறிவது? தோழர் பெரியார் தமிழ்நாட்டுச் சூழலில் இருந்து விளக்குகிறார்.

''இந்நாட்டில் வாழும் தற்காலப் பார்ப்பனர்கள் மத்திய ஆசியாவில் இருந்து குடியேறிய ஆரியர்களின் நேரான சுத்தமான சந்ததியர்கள் அல்ல என்பது உண்மையே. ஆனாலும் அவர்களையும் திராவிடர்கள் என்று ஒப்புக்கொள்ளாமைக்குக் காரணம், அவர்களுக்கும் நமக்கும் உள்ள பல்வேறு பண்பு, கலை, ஆசாரம், நடப்பு ஆகிய பல வேறுபாடுகள் தாம்.

நம் கழகத்தில் யாரையும் பிறவி காரணமாக வேறினத்தவர் என்று ஒதுக்கவில்லை. பழக்க வழக்கங்களையும் பார்த்துத்தான் அவர்களுக்கும் நமக்கும் இருந்து வரும் அடிப்படை பேதத்தைக் கருதித்தான் பிரிவினை செய்கிறோம். அவர்கள் எப்போதுமே திராவிடர்களை ஒதுக்கி வைத்துத்தான் வந்திருக் கிறார்கள். ஒதுக்கி வைத்திருக்கும்படியான கலாச்சாரத்தைத் தான் பின்பற்றி நடந்து வருகிறார்கள். அதாவது தாம் உயர்ந்தவர்கள் திராவிடர்கள் தாழ்ந்தவர்கள் இருவருமே தனித்தனிப் பிறப்பு என்கிற உணர்ச்சி அவர்களை விட்டு எப்போதும் நீங்கியதில்லை. (4)

பார்ப்பனர்களுக்குக் கூறும் வரையறையை அப்படியே சிங்களர்களுக்குப் பொருத்திப் பார்க்க வேண்டும். சிங்களர் என்ற இனம், தமிழர்களும் இணைந்து உருவான இனமாக இருந்தாலும், காலப்போக்கில் சிங்களர்கள் தமிழர்களை ஒடுக்கியே வந்துள்ளார்கள். எதிர் இனமாகவே கருதி இயங்கி யுள்ளார்கள். கி.மு 3 நூற்றாண்டில் தொடங்கிய இனமோதல் இன்று வரை தொடர்கிறது.

தமிழர்களும், எதிர் இனமான சிங்களர்களும், கண்டி நாயக்க அரசர்களை எந்த இனமாகப் பார்த்தார்கள்? கண்டி அரசர்களை யாருக்கான அரசர்களாகப் புரிந்து கொண்டார்கள்? என்பது தான் வரலாற்றில் மிக முக்கியமானதாகும். கண்டி நாயக்க அரசர்களை, குறிப்பாகக் கடைசி மன்னர் ஸ்ரீவிக்கிரம ராஜ சிங்கனின் ஆட்சியைச் சிங்கள மக்கள், தமிழர்களின் ஆட்சியாகவே பார்த்தனர். தமிழர்கள் தங்களின் மன்னராகவே அவரைக் கருதினர். மிக முக்கியமாக, விடுதலைப்புலிகள் அமைப்பு கண்டி நாயக்க மன்னர்களைத் தமிழ் அரசர்களாகவே கருதியுள்ளது.

## கண்டி மன்னர்கள் தமிழர்களே

கிளிநொச்சியைத் தலைநகராகக் கொண்டு, தமிழீழ விடுதலைப்புலிகளின் தனிஅரசு நடந்த காலங்களில் புலிகள் அரசின் கல்வித்துறை, 'தமிழீழக் கல்விக்கழகம்' என்ற பெயரில் இயங்கியது. அந்தத்துறையின் சார்பில் 'வரலாறு சொல்லும் பாடம்' என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட நூல் கண்டி மன்னர்களைத் தமிழர்கள் என்றே பதிவு செய்துள்ளது.

''கண்டி அரசு ஒரு சிங்கள பௌத்த அரசாக இருந்த போதும், அதனை கி.பி.1739 முதல் கி.பி 1815 வரை 76 ஆண்டுகளாக ஆண்டவர்கள் தமிழ்மன்னர்கள் தான்.

அவர்களது வீரான ஆட்சியில் கண்டி அரசைக் கைப்பற்றப் பலதடவை ஒல்லாந்த

ராலும், ஆங்கிலேயராலும் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டாலும் அவர்கள் கேவலமான தோல்விகளையே எதிர்கொண்டனர். அந்தத் தமிழ் அரசர்களது அரண்மனைக்குள்ளேயே பௌத்த சிங்களவெறி நுழையத் தொடங்கிய தானது, இலங்கை வரலாற்றில் துயர் மிகுந்த வரிகளாகும்.

தனது அரசின் மன்னனாக ஒரு தமிழன் எப்படி இருக்கமுடியும் என்ற சிங்களப் பெருங்குடிச் சிந்தனையும் கண்டி அரசின் மீளமுடியாத சறுக்கலுக்குக் காரணங்களாயின .

கடைசியாகக் கண்டி அரசை ஆண்ட தஞ்சை புதுக்கோட்டை பூலாம்பட்டியைச் சேர்ந்த தமிழ் மன்னன் கண்ணுச்சாமி என்ற சிறீ விக்கிரம ராச சிங்கன் ஆங்கிலேயரால் தமிழ்நாட்டின் வேலூருக்குக் கொண்டு சென்று சிறை வைக்கப்பட்டு, 1832 ல் அங்கு இயற்கைச் சாவடைந்தான்.'' (5)

### விக்கிரம ராஜ சிங்கனைத் தங்களது மன்னராகப் புகழும் தமிழ் நூல்கள், தமிழ் நாடகங்கள்

ஈழத்தமிழர்கள் கண்டி அரசரைத் தங்களின் மன்னராக எண்ணி, அவரைநாயகராக வைத்து, விக்கிரம ராஜ சிங்கனின் வரலாற்றை நாடகமாகவும், தெருக்கூத்தாகவும் நடத்தி வருகின்றனர். 1887 ல் திரிகோணமலையில் வாழ்ந்த வே.அகிலேசம்பிள்ளை எழுதிய 'கண்டிநாடகம்', 1908 ல் பருத்தித்துறையில் 'கண்டிராசன் கதை', 1910 ல் எம்.என்.பாவா எழுதிய 'கடைசிக் கண்டி மன்னன் வாழ்க்கையில் நடந்த சம்பவம்', 1928 ல் ஏகை.சிவ.சண்முகம்பிள்ளை எழுதிய 'கண்டி ராஜா நாடகம்', 1934 ல் பி.கே.எம் ஹசன் எழுதிய ' கண்ணுச்சாமி அல்லது ஸ்ரீ விக்கிரம ராஜ சிங்கம்' எனப் பல்வேறு நூல்கள் விக்கிரம ராஜ சிங்கனைப் புகழும் நூற்களாகும். (6)

இலங்கையில் இனப்படுகொலை உச்சத்தை அடைவதற்கு முன்பு வரை ஈழத்தமிழர்களின் கிராமங்களில், திருவிழாக்களில் 'கண்டிராசன் கதை' என்ற என்ற பெயரில் நாடகங்களும், கூத்துக்களும் ஏராளமாக நடந்துள்ளன. இவ்வாறு தமிழர்கள் போற்றும் மன்னரை 'தெலுங்கன்' என்று அந்நியப்படுத்த முயற்சிப்பது மிகப்பெரும் தமிழினத் துரோகச் செயலாகும்.

ஈழத்தமிழர்களும், இன்றை நிலையில் ஈழத்தமிழர்களின் குரலாகத் திகழும் விடுதலைப்புலிகள் அமைப்பும் கண்டி அரசர்களைத் தமிழர் அரசர்கள் என்று அறிந்து, உரிமை கொண்டாடுவதைப் பார்த்தோம். அதே நேரத்தில் சிங்களர்களும், சிங்கள அரசுகளும் கண்டி அரசர்களைத் தமிழர்களாகவே கருதியுள்ளனர் என்பதையும் பார்ப்போம்.

### கண்டி அரசர்களை வீழ்த்திய சிங்கள இன, மதவெறி

கண்டித்தமிழ்அரசர்களின் ஆட்சியின் இரண்டாவது மன்னர் கீர்த்தி ஸ்ரீ ராஜ சிங்கன் ஆவார். இவரது ஆட்சியில் பௌத்த மதத்துக்கும், சிங்களர்களுக்கும் ஏராளமான நன்மைகளைச் செய்தார். இருந்தாலும் அவர் தனிப்பட்ட முறையில் திருநீறு அணியும் வழக்கத்தைக் கைவிடவில்லை. இந்து மதத்திற்கும் தேவயானவைகளைச் செய்தார். எனவே அவரைக் கொன்று ஆட்சியைக்கைப்பற்ற அவரது ஆட்சியிலேயே இருந்த சிங்களத் தளபதிகளும், புத்த பிக்குகளும் முடிவு செய்து, அதற்கான முயற்சியில் இறங்கினர். தற்செயலாக மன்னர் காப்பாற்றப்பட்டார். சதிச்செயலுக்குக் காரணமான சிங்கள அதிகாரிகளான சமணக்கொடி அதிகாரி, மொலதந்த ரட்டராலே, கடுவெனராலே, மதினப்பொல திசாவ ஆகியோர் சிரச்சேதம் செய்யப்பட்டனர்.

### 'பிலிமத்தலாவ'க்கு மரணதண்டனை

அதுபோலவே, கடைசி மன்னரான ஸ்ரீ விக்கிர ராஜ சிங்கனையும் சிங்களர்கள் தமிழ் மன்னனாகவே பார்த்தனர். அவரது முதல் அமைச்சராக இருந்த 'பிலிமத்தலாவ' என்பவர் சிங்களத் தளபதிகளைத் திரட்டி, கண்டி அரசரை வீழ்த்த நேரம் பார்த்துக்கொண்டிருந்தார். மூன்று முறை படையெடுப்பு முயற்சிகளைச் செய்தார். அரசரைக் கொல்லும் முயற்சியிலும் இறங்கினார். அனைத்திலும் தோற்று விட்டார். பிலிமத்தலா வையின் சதிச்செயல்களை இனியும் மன்னிக்க இயலாது என முடிவு செய்த கண்டி அரசர் 1811 ல் பிலிமத்தலாவைக்கு மரண தண்டனை விதித்தார்.

### 'எகலப்பொல மகா நிலம்' குடும்பம் அழிப்பு

பிலிமத்தலாவையின் படை வீரர்கள் ஆங்கிலேய மேஜர் ஜெனரல் வில்சனின் படைகளோடு இணைந்து கொண்டு மீண்டும் விக்கிரமராஜ சிங்கனை அகற்றும் பணியைத் தொடர்ந்தனர். பிலிமத்தலாவைக்குப் பிறகு அவரது பதவியில் பிலிமத்தலாவயின் மருமகன் 'எகலப்பொல மகா நிலம்' நியமிக்கப்படுகிறார். எகலப்பொலவும் சிங்களத் தளபதி களுடனும், புத்தப் பிக்குகளுடனும் இணைந்து கண்டி அரசனின் ஆட்சியை அகற்றப் பலமுறை முயற்சி செய்கிறார். அனைத்திலும் தோல்வியுறுகிறார்.

ஒரு புறம் படையெடுப்பு முயற்சியையும் மறுபுறம் சிங்கள மக்களைத் திரட்டும் வேலையையும் செய்து வந்தார். அவற்றை அறிந்த கண்டி மன்னர், எகலப்பொலவின் சதிக்கு உடந்தையாக இருந்த, பௌத்தப் பிக்குகள் பரந்தர உனான்சே, சூரியகொட உனான்சே, மொர தொட குட உனான்சே, புசவெள திசா ஆகியோருக்கு மரண தண்டனை விதித்துக் கொலை செய்தார். எகலப்பொல தலைமறைவாகி விட்டார்.

1814 ஆண்டு மே மாதத்தில், கண்டி அரண்மனைக்கு எதிரே ஆயிரக்கணக்கான பொதுமக்கள் முன்னிலையில் எகலப்பொலவின் மனைவி குமாரிஹாமியும், 11 வயதுக்குக்கும் குறைவான அவர்களது நான்கு சிறு குழந்தைகளும் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டனர். இந்தச் செயல் ஏற்கனவே வெறுப்பில் இருந்த சிங்கள மக்களுக்கு விக்கிரம ராஜ சிங்கன் மீது கடும் கோபத்தை உண்டாக்கியது.

இந்தச்சூழலை எகலப்பொலவும், ஆங்கிலேய அதிகாரி இராபர்ட் ப்ரவுன் ரிக்கும் சரியாகப் பயன்படுத்திக் கொண்டனர். கண்டி அரசு மீது படையெடுத்துச் சென்றனர். சிங்கள மக்களி டையே ஒரு முக்கியப் பிரச்சாரத்தைக் கையிலெடுத்தனர்.

> ''சிங்கள மக்களையும், பௌத்த மதத்தையும் அந்நிய மன்னனிடமிருந்து காப்பாற்றவே இந்த யுத்தம் நடைபெறப்போகிறது.''(7)

என்று சிங்கள இனவெறியையும், மத வெறியையும் தூண்டிவிட்டனர். இந்தக் காலத்தில், விக்கிரம ராஜ சிங்கனிடம் நீண்ட நெடுங்காலமாக மிகவும் விசுவாசமாக இருந்த படைவீரர்கள் தமிழர்கள் மட்டுமே என்பதைக் குறிப்பாகக் கவனிக்க வேண்டும்.

சிங்கள இனவெறியும், பௌத்த மதவெறியும், ஆங்கிலேய ஆதிக்க வெறியும் இணைந்து ஈழத்தமிழர்களின் நம்பிக்கையைப் பெற்ற கண்டி அரசன் ஸ்ரீ விக்கிரம ராஜ சிங்கனை வீழ்த்தின.

**துரோகியின் பெயரில் நகரம்**

கண்டி அரசருக்கு எதிராகச் சிங்களத்தளபதிகளைக் கொண்டு சதி செய்து மாட்டிக் கொண்டவர் பிலிமத்தலாவ என்ற சிங்கள முதல் அமைச்சர். ஆங்கிலேய ஆட்சியிலிருந்து இலங்கை விடுதலை பெற்ற பிறகு, கண்டிக்கு அருகிலுள்ள ஒரு நகருக்கு 'பிலிமத்தலாவ' என்று பெயர் சூட்டப்பட்டது.

'எகலப்பொல மகா நிலம' என்ற தமிழின எதிரியை கதாநாயகராக வைத்து, சிங்களர்கள் 'எகலப்பொல நாடகம்' என்ற பெயரில் நாடகங்களை நடத்தி வருகின்றனர். கடந்த 2014 ல் 'எகலப்பொல குமாரிஹாமி' என்ற பெயரில் சிங்களத் திரைப்படம் ஒன்று வெளியாகி வெற்றிநடைபோட்டது. இப்படத்தில் கண்டி அரசர் ஸ்ரீவிக்கிரம ராஜ சிங்கனை, பௌத்த சிங்கள மக்களுக்கு எதிரியாகவும், கொடுங்கோலனாகவும் சித்தரித்துள்ளனர். சிங்கள இனவெறியையும், பௌத்த மதவெறியையும் நிலைத்து வைப்பதற்காக இப்படம் வெளியிடப்பட்டது.

நாயக்க மன்னர்களின் வாரிசுகள்தான் இன்றுவரை இலங்கையை ஆளும் அதிபர்கள் என்றால் நாயக்க மன்னர்களை எதிரிகளாகவும் - நாயக்கமன்னர்களுக்கு எதிராகப் போரிட்டவர்களைச் சிங்களத் தலைவர்களாகவும், சிங்கள மக்களுக்காக அவதாரம் எடுத்தவர்களாகவும், சிங்கள இன வீரத்தின் அடையாளச் சின்னங்களாகவும் இன்றும் மக்களிடையே பதிவு செய்து கொண்டிருக்க மாட்டார்கள். செய்யவும் முடியாது.

**நாடுகடத்தப்பட்ட கண்டி அரசரின் இரத்தச்சொந்தங்கள்**

1815 ஆண்டு மார்ச் 2 ஆம் நாள் கண்டி அரசர், சிங்கள மற்றும் ஆங்கிலேயப் படைகளால் கைது செய்யப்பட்டார். தமிழ்நாட்டுக்கு நாடு கடத்தப்பட்டார். ஆங்கிலேய அரசுக்கும், கண்டி அரசுக்கும் 10.03. 1815 ல் ஒரு ஒப்பந்தம் கையெழுத்தானது. இலங்கை கவர்னர் இராபர்ட் பிரௌன்ரிக் மற்றும் 'எகலப்பொல மகா நிலம' இருவரிடையே இந்த ஒப்பந்தம் நடந்தது.

அந்த ஒப்பந்தப்படி கண்டி அரசர் ஸ்ரீ விக்கிரம ராஜ சிங்கனும், அவரது குடும்பத்தினரும் கண்டி அரச எல்லையிலிருந்து உடனடியாக வெளியேற வேண்டும். ஸ்ரீ விக்கிரம ராஜ சிங்கனின் உறவினர்களோ, இரத்தச் சொந்தங்களோ எவரும் கண்டி எல்லைக்குள் இருக்கக்கூடாது. அந்த எல்லைக்குள் எப்போதும் வரக்கூடாது எனத் திட்டவட்டமாக அறிவிக்கப்பட்டு அனைவரும் ஒட்டு மொத்தமாக இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட்டனர். எனவே கண்டி நாயக்க அரசரின் வாரிசுகள்தான் இன்றைய இலங்கை அதிபர்களும், பிரதமர்களும் என்பது மிகவும் அப்பட்டமான வரலாற்றுப் புரட்டு.

**கி.மு விலேயே தொடங்கிய இன - மத படுகொலைகள்**

சிங்களரைக் காப்பாற்றுவதற்காக, நாம் தமிழர் வெளியிட்ட ஆவணப்படத்தின் முக்கியமான அடுத்த சில குற்றச்சாட்டுகளையும் அவற்றுக்கான மறுப்புகளையும் பார்ப்போம்.

> "இந்த நாயக்க அரசர்கள் இலங்கைக்கு வந்த காலமான 1739 க்குப் பிறகுதான், இலங்கையில் மதச் சண்டைகள் நடந்தன. போர்க்குற்றங்களும், இனப்படுகொலைகளும், போர் அழிவுகளும் நாயக்கர் காலத்திற்குப் பிறகு தான் நடந்தேறின. அதற்கு முன்னர் தமிழர்களும், சிங்களர்களும் ஒற்றுமையாகவே வாழ்ந்தனர். இரு தரப்புக்கும் போர் நடந்தாலும் அது அரச அதிகாரத்தைப் பிடிக்கும் போர் என்ற அளவில்தான் நடந்தன. தமிழர்களோ, சிங்களர்களோ அதனால் பாதிக்கப்பட வில்லை. மத அடிப்படையிலோ, இன அடிப்படை யிலோ போர்கள் நடைபெற வில்லை. தமிழர்களின் துயரத்திற்குக் காரணம் சிங்களர்கள் அல்ல; தெலுங்கர்களே"

என நிறுவுகின்றனர். வரலாற்றுச் சான்றுகளின் அடிப்படையில் இந்த மோசடிக் கருத்துக்களை முற்றிலும் மறுக்கிறோம். தமிழர் இனப்படுகொலைகளும், பௌத்த மதவெறியும் கி.மு விலேயே தொடங்கியவை என்பதற்கான சாறுகளைப் பார்ப்போம்.

**எல்லாளனைக் கொன்ற புத்த மதவெறி**

அநுராதபுரத்தைத் தலைநகராகக்கொண்டு கி.மு 145 முதல் கி.மு 101 வரை சிறப்பாக ஆட்சி நடத்தியவர் தமிழ் மன்னர் எல்லாளன். கி.மு 205 முதல் கி.மு 161 வரை என்றும் ஒரு வரலாற்றுத் தகவல் உள்ளது. சிங்கள இளவரசன் துட்டகாமினி என்பவர் எல்லாளன் மீது பலமுறை போர் தொடுத்தார். எனினும் எல்லாளனை வெல்ல இயலவில்லை. கி.மு. 101 ல் துட்டகாமினியால் சூழ்ச்சி செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டார் எல்லாள மன்னர்.

எல்லாளனை எதிர்த்து, துட்டகாமினி முதன் முதலாகப் போர்தொடுத்த போது, ஆயிரக்கணக் கான படைவீரர்களும், துட்டகாமினியின் தாயார் விகாரைமாதேவியும் உடன்சென்றனர். இவர்களுடன் திசகமராமை விகாரையைச் சேர்ந்த 500 க்கும் மேற்பட்ட புத்த பிக்குகளும் எல்லாளனை அழிக்க, அநுராதபுரத்தை நோக்கிச் சென்றனர். ஆயிரக் கணக்கான தமிழர்கள் இப்போரில் அழிக்கப்பட்டார்கள். அந்தப் போருக்காகத் துட்டகாமினி ஒரு அறிவிப்பு வெளியிடுகிறார்.

> "நான் அரச போகங்களுக்காக இந்த யுத்தத்தில் இறங்கவில்லை. பௌத்த சாசனத்தின் உன்னதத் திற்காகவே போர் தொடுக்கிறேன்" (8)

என்கிறார். புத்தபிக்குகள் ஒரு போரில் தொடர்புபடும் நிகழ்வு வரலாற்றில் அப்போதுதான் முதல்முறையாக நடந்தது. கி.மு.101 லேயே தமிழர்களுக்கு எதிராக, இன ரீதியாகவும், மதரீதியாகப் போர்க்குற்றங்களும் வன்முறைகளும் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளன. எல்லாள மன்னரும் மரபுவழிப் போரில் வெல்லப்படவில்லை. சூழ்ச்சியால், போர்க்குற்ற நடவடிக்கையால் கொல்லப்பட்டார். ஆயிரக்கணக்கான தமிழர்கள் போரில் அழிக்கப்பட்டனர்.

இந்தப்போரின் முடிவில் துட்டகாமினி புத்த தேரர்களிடம், ஆயிரக்கணக்கானவர்களை அழித்துவிட்டேன் என வருந்துகிறான். இந்துமதத்தில் கீதா உபதேசத்தைப் போல, புத்த தேரர்கள், துட்டகாமினியிடம் கூறுகிறார்கள்,

> "பௌத்தத்தை நம்பாதவர்கள் விலங்குகளைப் போன்றவர்கள். பௌத்தத்தை நம்பாத தமிழர்களை

அழிப்பது குற்றமாகாது. அதனால் எந்தப் பாவமும் வந்து சேராது''(9)

என உபதேசம் செய்துள்ளனர்.

கி.மு 3 ஆம் நூற்றாண்டிலேயே ஈழத்தமிழர்களுக்கு எதிராக இனவெறியும், மதவெறியும் கட்டவிழ்த்து விடப்பட்டதற்கு மயிலை சீனி வேங்கடசாமி அவர்களும் சான்றுகளைத் தருகிறார்.

''துட்டகாமினி, எல்லாளனுக்கு எதிரான போரில், ஐந்நூறு பௌத்தப் பிக்குகளின் சேனையையும் அழைத்துக்கொண்டு வந்தான். ஐந்நூறு பௌத்தப் பிக்குகள் போர் செய்வதற்காக அல்லர்; ஐந்தாம் படை வேலை செய்வதற்காக; குடிமக்களிடத்தில் போய் அவர்களுக்கு மதவெறியையூட்டி ஏலேல மன்னனுக்குஎதிராக அவர்களைக் கிளப்பிவிடுவது அவர்கள் வேலையாக இருந்தது. சேனைகளோடு பிக்குகளை ஐந்தாம்படை வேலை செய்ய அழைத்துக் கொண்டது மல்லாமல், துட்டகமுனு தன்னுடைய தாயாகிய விகாரமகா தேவியையும் போர்க்களத்துக்கு அழைத்து வந்தான்.'' (10)

### தமிழர் - சிங்களர் இனப்போர்

இலங்கையில் மகாவம்சம் போலவே மேலும் சில நூல்கள் முக்கிய வரலாற்றுக் களஞ்சியம் போலக் கருதப்படுகின்றன. அவை, இராஜவலிய, பூஜாவலிய, சூளவம்சம், நிக்காய சங்கிரஹய, யாழ்ப்பாண வைபவமாலை, மட்டக்களப்பு மான்மியம், கைலாயமாலை போன்றவை ஆகும்.

கி.பி. 2 ஆம் நூற்றாண்டில் சோழநாட்டை ஆண்ட கரிகாலன் இலங்கை மீது நடத்திய போர் பற்றி 'இராஜவலிய' கூறும் வரலாற்றுச்செய்தியைப் பார்ப்போம்.

''கரிகாலன் இலங்கையின்மீது படை யெடுத்துச் சென்று 12 ஆயிரம் இலங்கை மக்களைச் சிறை செய்து தன் நாட்டுக்குக் கொண்டு வந்தானாம். அவர்களைக் கொண்டு தன்னாட்டில் பாயும் காவிரி ஆற்றுக்கு இரண்டு பக்கமும் கரைகள் அமைத்தானாம். இவ்வாறு கூறும் அந்த வரலாறு மேலும் சிலவற்றைக் கூறுகிறது. முதலாம் கயவாகு என்னும் இலங்கை அரசன் சோழநாட்டுக்கு வந்து தன்னாட்டுக் கைதிகளை மீட்டுக் கொண்டு சென்றதோடு தமிழ்நாட்டிலிருந்து மேலும் 12 ஆயிரம் பேர்களைக் கைதுசெய்து தன்னாட்டுக்கு அழைத்துச் சென்றானாம். இவ்வாறு கூறப்படும் வரலாறுகளில் வரும் கைதிகளின் எண்ணிக்கை உயர்வுநவிற்சியாக இருக்கக் கூடும். ஆனால், நிகழ்ச்சியில் ஓரளவேனும் உண்மை இருக்கத்தான் செய்யும்.''(11).

### இராஜராஜசோழனால் அழிந்த அநுராதபுரம்

பிற்காலச்சோழர்களின் முக்கிய அரசர் இராஜராஜ சோழன். இவர் கி.பி.993 ல் இலங்கை மீது படையெடுத்தார். அப்போது இலங்கையில் ஐந்தாம் மகிந்தன் ஆட்சியில் இருந்திருக்கிறார். அநுராதபுரம்தான் அப்போது இலங்கையின் தலைநகரம். இராஜராஜன் படை, ஐந்தாம் மகிந்தனை அநுராதபுரத்திலிருந்து விரட்டி அடித்தது. ஆயிரக்கணக்கான வீரர்களையும், அப்பாவி மக்களையும் ஈவு இரக்கமின்றிப் படுகொலை செய்தது. மகிந்தனின் தலைநகரான அநுராதபுரம் முற்றிலும் அழிக்கப்பட்டது. எல்லாள மன்னர் காலத்திலிருந்து தலைநகராகத் திகழ்ந்த அநுராதபுரத்தை அழித்து விட்டு, பொலனருவை என்ற நகரைச் சோழர்களின் தலைநகராக உருவாக்கினார்கள்.

இராஜராஜனின் படைவீரர்கள், பொலனருவையில் இருந்த ஐந்தாம் மகிந்தனின் அரசகுடும்பப் பெண்கள் மீது பாலியல் வன்கொடுமை நடத்தி, அவர்களது மூக்கையும் அறுத்து, பிறகு படுகொலை செய்திருக் கிறார்கள். (12)

போரில் பின்வாங்கிய மகிந்தன் மீண்டும் அடிக்கடி சோழர் ஆட்சிக்கு எதிராகப் போர் தொடுத்தான். எனவே கி.பி.1020 ல் இராஜராஜனின் மகன் இராஜேந்திரசோழன் மகிந்தன் மீது படையெடுத்து அவனை வென்றார். வென்றது மட்டுமல்ல; மகிந்தனின் மனைவியைச் சிறைபிடித்து தமிழ்நாட்டுக்குக் கொண்டு வந்து சிறைவைத்து தமிழ்நாட்டிலேயே கொல்கிறார்.

அதன் பிறகு இராஜேந்திரசோழனின் மகன் இராஜாதிராஜன் காலத்திலும் சோழப் படையெடுப்பு ஒன்று நடந்துள்ளது. அந்தப்போரில் தோற்ற சிங்களத் தளபதிகளின் தலைகளை வெட்டிக் கொண்டுபோய், தமது அரண்மனையில் தோரணமாகத் தொங்க விட்டுள்ளர் இராஜதி ராஜசோழன்.(13)

### மாகோன் - குளக்கோட்டன் படைஎடுப்பு

கி.பி.1215 ல் கலிங்க மாகன் என்ற மன்னர் இலங்கையின் தலைநகராக பொலனருவை மேல் படையெடுத்தார். இவர் கலிங்க நாட்டின் மன்னனாவார். அப்போது இலங்கையை முதலாம் பராக்கிரம பாகு ஆண்டுவந்தார். இலங்கையில் கலிங்கர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் களைவதற்காக கலிங்கர்களின் மன்னர் படையெடுத்தார். இந்தப் படையெடுப்பில் அவருக்கு இணையாக குளக்கோட்டன் என்ற தமிழ் மன்னனும் படையெடுக்கிறார். கலிங்க மன்னனும், தமிழ்மன்னனும் இணைந்து சிங்கள மன்னரை எதிர்த்துப் படை நடத்தினர். இப்படையில் முழுவதும் பாண்டிய, சேர நாட்டுப் படைவீரர்களேஇருந்துள்ளனர். இந்தப் படையெடுப்புப் பற்றி 'இராஜதரங்கணி' என்ற பாலி நூல் கூறுவதைப் பார்ப்போம்.

### பௌத்த மத அழிப்பு

'' கலிங்க மகானின் மதவெறி இந்து மதத்தின் சகிப்புத் தன்மைக்கு மாறானது. அவன் ஆலயங்களின் செல்வங்களைப் படைகொண்டு கொள்ளையடிக்கச் செய்தது, இந்தியாவில் ஹர்ஷ மன்னன் செய்த அட்டூழியங்களைப் போன்றது. ஹர்ஷன் தெய்வ விக்கிரகங்களை உடைத்தான். தெய்வச் சிலைகள் மீது மலசலங்களை ஊற்றச் செய்தான். ஹர்ஷனின் மனிதாபிமானமற்ற செயல்களைப் போன்றதே மாகனுடைய செயல்களும்.

ஹர்ஷனைப் போலவே மாகனும் பிராமணர்களை வேலை வாங்கினான். பெண்களையும், கலைஞர்களையும் வேலை வாங்கினான். கொலைகளைச் செய்து, கொல்லப்பட்டவர்களின் தலைகளை முன்வாயில் தோரணங்களில் தொங்கவிட்டான். மாகனும், ஹர்ஷனும் செய்த சமயக் கொடுமைகள் ஒரே மாதிரியானவை.'' (14)

இதன் தொடர்ச்சி 21 ஆம் பக்கம்

பல்லடம் நாராயணமூர்த்தி,
தீபா,
வடிவேல்

# சில்லென்று ஒரு வாழ்க்கை

## ஜாதி கடந்த வாழ்விணையர்களின் நேர்காணல்

டாக்டர். பெரியார் செல்வி,
பொறியாளர். அ.ப.சிவா



**இந்துப் பண்பாட்டைக் காலம் காலமாகப் பின்பற்றி ஒரே ஜாதிக்குள்ளேயே தொடர்ந்து திருமணம் செய்து வருவதன் விளைவாக நீரிழிவு, இரத்த அழுத்தம் போன்ற நோய்களும், மரபணுக்கள் வழியாக 3000 வகையிலான நிரந்தர ஊனங்களும் வருவதாக உலக சுகாதார நிறுவனம் அறிவித்தது குறிப்பிடத்தக்கது. இந்த வாழ்வியல் முறையை நமக்குத் திணித்தது எதுவென்று பார்த்தால் மனு சாஸ்திரத்திலிருந்தே தொடங்குகிறது.**

> “துவிஜர்கள் (பிராமணர், சத்திரியர்) முக்கியமாகத் திருமணம் செய்யும் போது தன் ஜாதியிலேயே செய்துகொள்ளவேண்டும்.”

> “சூத்திரன் தன் ஜாதியில் மட்டுமே திருமணம் செய்து கொள்ள வேண்டும்”

> “பிராமணர்களும்,ஷத்திரியர்களும் தன் ஜாதியில் பெண் கிடைக்காத ஆபத்துக் காலத்திலும் சூத்திரப்பெண்ணைத் திருமணம் செய்யக்கூடாது.”

என்று மனுசாஸ்திரம் கூறிவருகிறது. இவை இன்றும் நடைமுறையில் உள்ளன.

*இன்றைய மனித சமூகத்தில் சமத்துவம் ஏற்படுத்துவதற்கு ஜாதி மறுப்புத் திருமணமே சரியானது என்று ஜாதி கடந்த திருமணம் செய்து வாழ்ந்துவரும் பல்லடம் டாக்டர்.பெரியார் செல்வி, பொறியாளர்.அ.ப.சிவா அவர்களுடன் நேர்காணல்:*

**சிவாவிடம்**

**உங்களை அறிமுகப்படுத்திக்கொள்ளுங்கள்?**

*பதில்: என்னுடைய பெயர் அ.ப.சிவா கோவை மாவட்டம் அரசூர் கிராமத்தில் பிறந்தேன் அம்மா பெயர் சுப்பாத்தாள். அப்பா அருணாசலம். அங்கேயே அரசுப் பள்ளியில் படித்தேன். பிறகு கோவையில் டிப்ளமோ இஞ்சினியரிங் முடித்தேன். தற்போது பிரமிட் பில்டர்ஸ் என்ற பெயரில் கட்டுமான நிறுவனம் நடத்தி வருகிறேன்.*

**பெரியாரியல் இயக்கத்துல எப்படி ஈடுபாடு ஏற்பட்டுச்சு?**

*என்னுடைய 22 வயது வரைக்கும் இந்த இயக்கத்தை பத்தி எனக்கு ஏதுவும் தெரியாது. என்னுடைய 23-வயதுல மகாராஜா கலை அறிவியல் கல்லூரியில கட்டிட மேற்பார்வையாளராக சேர்ந்தேன். அப்ப*

என்னுடைய தோழர்கள் சசிக்குமார், திரு நாவுக்கரசர் இவங்க 2 பேரும் ஏற்கனவே பெரியார் இயக்கத்துல தொடர்பு உடையவங்க. அவங்க 2 பேருனாலதான் எனக்கு பெரியார் இயக்கத்து மேல ஈடுபாடு வந்துச்சு.

**நீங்க ஜாதி மறுப்பு திருமணம் செய்ய வேண்டும் என்ற சிந்தனை எப்படி வந்தது?**

ஜாதி மறுப்புத் திருமணம் செய்யனும்னு எனக்கு ஆர்வம் ஏற்பட்டதற்குக் காரணமா இருந்தவர் சூலூரில் வசிக்கும் மின்பொறியாளர் தோழர். பன்னீர் செல்வம் தான். அவருடைய வாழக்கை முறையைப் பார்த்து தான் எனக்கு இந்த எண்ணம் ஏற்பட்டது.



ஆரம்பத்தில் தந்தை பெரியார் திராவிடர் கழகத்தில் இருந்தபோது தோழர் கொளத்தூர் மணி அவர்களுடைய பல்லடம் நாத்திகர் விழா பேச்சும், தோழர் தாமரைக்கண்ணன் அவர்களுடைய 'ஆரிய வாழ்வியலை இனியும் கடை பிடிக்கலாமா?' என்ற கட்டுரைதான் ஜாதி கடந்த திருமணத்திற்கும், பெரியாரிய வாழ்வியலுக்கும் என்னைத் தூண்டியது.

குறிப்பாக இந்தக் கட்டுரையில் சொன்ன செய்திகள் சில அதிர்வுகளை ஏற்படுத்தியது. கருப்புச் சட்டையைப் போட்டுக்கொண்டு வெளியில் நிகழ்ச்சிகளுக்குப் போவேன். திரும்ப வீட்டுக்கு வந்ததும் வீட்டில் ஒரு வழக்கம் இருக்கும். அதே மாதிரி தான் நிறைய பேர் இருக்காங்க. பெரியாரியல் என்பது கருப்புச் சட்டை போட்டுட்டு நிகழ்ச்சிக்குப் போறது மட்டும் இல்லை, ஜாதி ஒழிப்புல தான் இருக்கு. அதனால் தான் ஜாதி மறுப்புத் திருமணம் பண்ணணும்னு முடிவு எடுத்தேன்.

**ஜாதி மறுப்புத் திருமணம் பண்ணனும்னு உங்க வீட்டிலும், உங்க உறவினர்கள் கிட்டையும் எதாவது ஆலோசனை கேட்டீங்களா? அவர்களுடைய எதிர்பார்ப்பு எப்படி இருந்தது?**

ஜாதி மறுப்புத் திருமணம் தான் என்று சொல்லவில்லை. பெரியார் கொள்கைகளை ஏற்றுக் கொண்டுள்ள பெண் பாருங்கள். சடங்கு, சம்பிரதாயம் இல்லாமல் திருமணம் செய்ய விருப்பம் என்று சொன்னேன். இதை ஏத்துக்கிறமாதிரி உங்க ஜாதியில பொண்ணு இருந்தா பாருங்க அப்படின்னு சொன்னேன். எனக்கு தெரியும் இந்தச் சமூகத்தில் அப்படி யாரும் பெண் கொடுக்க மாட்டார்கள் என்று. எங்க வீட்டுல ஒரே ஜாதிக்குள்ள பொண்ணு தேடினாங்க. அதைய எதிர்க்கிறதே ஒரு பெரிய விசயமா இருந்தது. அதுக்கு என்னுடைய நண்பன் யுவராஜ் உதவி செஞ்சாரு. பொண்ணுப் பார்க்கற வீட்டுல ஜெயிலுக்குப் போயிட்டு வந்தவனுக்குப் பொண்ணுக் குடுக்குறீங்கனு கேட்டாலே போதும் அந்த வீட்டுல யோசிக்க ஆரம்பிச்சுடுவாங்க.

நான் மே 2009 ல நடந்த இயக்க நிகழ்வுல 60 நாட்கள் சிறையில இருந்தேன். இந்த ஒரு நிகழ்வே என்னோட வாழ்க்கைக்கு ரொம்ப உதவியாக இருந்தது. அப்ப தோழர்களாக இருந்தவங்க நெருங்கிய நண்பர் களானாங்க. நான் ஜாதி மறுப்புத் திருமணம் தான் பண்ணுவேன்னு சொன்னப்ப நண்பர் சசிகுமார், அது எல்லாம் சாத்தியம் ஆகுமான்னு சொன்னாரு. நண்பர் திருநாவுக்கரசர் சொன்னாரு நான்தான் ஜாதி மறுப்புத் திருமணம் செய்யல, நீயாவது செய்யுன்னு சொன்னார்.

**பெரியார் செல்வியை உங்களுக்கு முதன் முதலில் அறிமுகப்படுத்தியது யார்?**

நான் தினத்தந்தியில மணப்பந்தல்ல விளம்பரம் கொடுத்திருந்தேன். அதைப் பார்த்துதான் அவங்க போன் பண்ணுனாங்க. அப்புறம் நான், நண்பர், அக்கா, மைத்துனர், அப்பா, அம்மா எல்லோரும் பெரியார் செல்வி வீட்டிற்குச் சென்றோம்.

அம்மாவுக்குக் கொஞ்சம் கோபம் இருந்தது. அப்பா இயல்பானவர் அவருக்குக் கடவுள் நம்பிக்கை இருந்தாலும் அவர்கிட்ட பார்ப்பன எதிர்ப்புக் கொஞ்சம் இருக்கு. அவர் பேசிய பல சின்னச்சின்ன விசயங்கள் என்னைப் பெரியாரியல் நோக்கி இழுத்துட்டு வந்ததுன்னு கூடச் சொல்லலாம். அதனால, பொண்ணுப் பார்க்க வந்துட்டாரு நாங்க எல்லாரும் போய் பார்த்தோம்.

வழக்கமா ஒரே ஜாதிக்குள்ள பொண்ணுப் பார்க்க போறப்ப, மாப்பிள்ளை மட்டும் போவாங்க ஆனால் மாப்பிள்ளை வீடு பார்க்கறப்ப மட்டும் பொண்ண மட்டும் விட்டுட்டு வந்திடுவாங்க . அது மிகப்பெரிய அயோக்கியத்தனம். நாங்க போய் செல்வி வீட்டுல எல்லோரையும் பார்த்தோம். அப்புறம் எங்க வீட்டுக்கு வரும்போது கண்டிப்பா நீங்க செல்வியைக் கூட்டிட்டு வாங்கன்னு சொன்னோம். வீடு பார்க்கறதுன்னா வசதி வாய்ப்புகள் தோட்டம், கதவு, ஜன்னல் அந்த மாதிரி இல்லை. அதாவது அங்க இருக்கிறவங்க, அந்த அமைப்புமுறை, சூழல் அதுதான். நான் அப்படி சொன்னதும் எங்க வீட்டுல அதை ஒத்துகிட்டாங்க. அதுதான் பெரிய ஆச்சரியமாக இருந்தது. அவங்களும் எங்க வீட்டுக்கு வந்தாங்க. இந்தச் சூழல் அவங்களுக்கும் புடுச்சு இருந்தது. அதனால எங்களுடைய திருமணம் இயல்பா நடந்தது.

**திருமணத்துக்கு கடைசி நேரத்திலயாவது சடங்கு பண்ணனும் அப்படின்னு யாராவது உங்ககிட்ட வற்புறுத்தினார்களா?**

கடைசி நேரம் வரைக்கும் இந்தப் பிரச்சனை இருந்தது. அதைவிட எங்க உறவினர்கள் எல்லாரும் வந்து, இவங்க என்ன ஜாதின்னு தெரிஞ்சுக்கிறதுல ரொம்ப ஆர்வமா இருந்தாங்க. எங்கிட்ட வந்து இவங்க என்ன ஜாதின்னு யாராவது கேட்டா, அதைத் தெரிஞ்சு நீங்க என்ன பண்ணப் போறிங்கன்னு கேட்பேன்.

ஒரு சிலர் கேட்கறதுக்குப் பயந்துட்டு இருப்பாங்க. ஏன்னா நான் வந்து ஏதாவது சொல்லிடுவேன்னு திருமணத்துக்கு முன்னத்த நாள் இரவு எங்க அக்கா வந்து நீங்க என்ன வேனாலும் பண்ணிக்கோங்க ஆனா தாலி மட்டும் கட்டிக்கலாம் அப்படின்னு செல்வியோட அம்மா கிட்ட சொல்லியிருக்காங்க. அதுக்கு அவங்க அம்மாவுக்கு கடைசி நேரத்துல என்ன சொல்றதுன்னு தெரியலை. நீங்க மாப்பிள்ளை கிட்ட கேட்டுக்கோங்க மாப்பிள்ளை சொன்னாருன்னா சரிதான் அப்படிங்கற மாதிரி சொல்லிட்டாங்க. அப்புறம் எங்க அக்கா வந்து அவங்க எல்லாரும் சரின்னு சொல்லிட்டாங்க நீ இப்ப சரின்னு சொல்லு மாங்கல்யம் எடுத்துட்டு வந்தர்றேன்னு சொன்னாங்க.

அதுக்கு நான் சொன்னேன் தாலி கட்டித்தான் கல்யாணம் பண்ணனும்னா நான் வேனா இந்த மண்டபத்தை விட்டு போயிடுறேன். இந்த மண்டபத்துல தாலிகட்டி கல்யாணம் பண்றதுக்கு நிறைய பேர் இருப்பாங்க. அதுல ஒரு நல்ல பையனாப் பார்த்து இந்தப் பொண்ணுக்கு நீயே கல்யாணம் பண்ணி வைச்சிரு. அந்தப் பொறுப்ப நீயே ஏத்துக்கோன்னு சொன்னேன். அது எங்க அக்காவுக்கு பெரிய அதிர்ச்சியா இருந்தது. இந்த மாதிரி கடைசி வரைக்கும் பிரச்சனை இருந்தது.

ஜாதி அடையாளமும் பெண் அடிமைத்தனம் அடையாளம் எதுவும் இல்லாம சிம்பிளா நான் ஒரு செயின் போட்டேன். அவங்க எனக்கு ஒரு செயின் போட்டாங்க. அதுல ஒரு டாலர் P.S. ன்னு என்னுடைய முழுபெயர் பரமசிவம், பெரியார்செல்வி எங்க ரெண்டு பேரோட இன்சியல் மட்டும் போட்டு ஒரு டாலர் அது மட்டும் தான். எங்களுடைய திருமணம் செம்டம்பர் 5. 2010ல் நடந்தது. எங்களுடைய திருமணம் தோழர் கொளத்தூர் மணி அவர்களின் தலைமையில் நடந்தது. அப்ப எழுத்தாளர் பாமரன், கோவை இராமகிருஷ்ணன், சூலூர் சு.ர.தங்கவேலு அய்யா இவங்க எல்லாரும் திருமணத்துல கலந்துகிட்டாங்க.

**உங்களுடைய திருமணம் முடிச்சதுக்கு அப்புறம் உங்க உறவினர்கள் வீட்டு நிகழ்ச்சிகளுக்குப் போறதுக்கு ஏதாவது பிரச்சனை இருந்ததா?**

என்னுடைய நெருங்கிய உறவினர் வீட்டுக்கு அதாவது பங்காளிகளோட வீட்டுக்கு என்னுடைய தொழில் சூழல் காரணமாக நானே அதிகமாகப் போக மாட்டேன். செல்வியும் திருமணத்திற்குப் பிறகு அவங்க மருத்துவராக இருந்ததாலே தொடர்ச்சியாகப் பணிக்கு வந்ததால எந்தச் சிக்கலும் இல்லை மற்றபடி எங்க அம்மாவோட அக்கா, தங்கச்சி எங்க அப்பா வோட அக்கா, தங்கச்சி அவங்க இயல்பா எங்க வீட்டுக்கு வந்திட்டுதான் இருக்காங்க. நாங்களும் போயிட்டுதான் இருக்கோம்.

முக்கியமாக எங்க அக்காவோட கணவர் அவர் வந்து ஆரம்பத்திலிருந்தே பொதுவுடமை இயக்கத்துல இருந்ததால அவருக்குச் சில விஷயங்கள் தெரிஞ்சதாலேயும் என்னுடைய திருமணத்துக்கு பெரிய எதிர்ப்பு இல்லை. ஏன்னா எங்க அக்கா வீட்டுல இருந்துதான் வந்திருக்கும். ஏன்னா வேற ஜாதியில கல்யாணம் பண்ணுனா எங்க புள்ளைக்கு மரியாதை இருக்காதுன்னு சொல்லுவாங்க. ஆனா அந்த மாதிரி எதுவும் நடக்கல. அவுங்க மனநிறைவோட அங்க அக்காவோட மாமனார், மாமியார் எல்லாரும் என்னோட திருமணத்துக்கு வந்தாங்க.

அதே மாதிரி செல்வியோட வீட்டுக்கு வர்றதும், அவங்க வீட்டு நிகழ்ச்சிகள்ல பங்கேற்கிறதுன்னு இயல்பா இருக்குது. ஜாதி மறுப்புல பெரிய புரட்சி ஏற்பட்டுதுன்னு சொல்லுவோம். ஆனா குடும்ப உறவுங்கிறப்ப அது சாதாரணமா போயிடுது. நம்மளுடைய பங்களிப்பு என்னென்ன நம்ம வாழ்க்கை முறையை பொருளாதார ரீதியாகச் சரியா அமைக்கணும். யாருடைய கையையும் எதிர்பார்க்காம எந்த உதவியையும் எதிர்பார்க்காம இருந்தாலே போதுமானது.

**உங்க நண்பர்கள் மத்தியில் நீங்க ஜாதிமறுப்புத் திருமணம் செஞ்சதப்பத்தி என்ன சொன்னாங்க? இந்தத் திருமணத்துனால உங்களுடைய தொழில் ரீதியாக ஏதாவது பாதிப்பு ஏற்பட்டுச்சா?**

என்னுடைய நண்பர்கள் எப்பவும் போலதான் என்கிட்ட பழகுவாங்க. ஜாதிமறுப்புங்கறது அவருடைய கொள்கை. அப்படிதான் சொல்லுவாங்க. நானும் இயல்பாகத்தான் இருப்பேன். என்னுடைய கொள்கைகளை அவங்களுக்கு திணிச்சதில்லை.

ஜாதிமறுப்புத் திருமணம் பண்ணுனதால என்னுடைய தொழில் எதுவும் பாதிப்பு இல்லை. சில பேருக்குத் தெரியாது. நான் பெரியாரிஸ்ட்டுனு சிலருக்கு பழகி பழகி பார்த்ததற்கு பிறகுதான் தெரியும்.நான் என்னுடைய நண்பர்களோட நிறுவனங்களைத்தான் கட்டிட்டு இருக்கேன். அவங்களுக்கு நல்லாவே தெரியும் அதனால பெருசா பாதிப்பு ஏதும் இல்லை.

செல்வி கிளினிக் வச்சாங்க. அப்ப அங்க இருந்தவங்க இந்த கிளினிக்குக்குப் போக கூடாது அப்படின்னு சொன்னாங்களாம். ஏன்னா அது என்ன ஜாதின்னு தெரியாது அப்படின்னு சொன்னாங்களாம். ஆனால் அது உண்மையா பொய்யான்னு தெரியாது. இந்த மாதிரியான தொழில் முறையில் மட்டும் கொஞ்சம் பிரச்சனை இருந்தது.

**ஜாதி மறுப்புத் திருமணம் பண்ணனும்னு நினைக்கிற தோழர்களுக்கு நீங்க என்ன சொல்ல நினைக்கிறீங்க?**

நான் அப்ப இருந்த மனநிலையில வந்து எங்க வீட்டுக்கு பத்து பேர் வரணும். வந்து நான் ஜாதி, தாலி, சடங்கு எல்லாம் மறுத்து திருமணம் பண்றேன்னு சொல்லி இந்தாங்க பத்திரிக்கைனு எனக்கு குடுக்கனும். அதைப்பர்த்து இந்த மாதிரி இவன் மட்டுமில்ல. இவன மாதிரி பத்துபேர் இருக்காங்க அதைய பைத்திய காரன்னு சொன்னாலும் கூட பரவாயில்லை. அது எங்க அப்பா, அம்மாவுக்குத் தெரியனும் அப்படின்னு நினைப்பேன். அதாவது ஜாதி மறுப்புத் திருமணங் களை சமூகத்தில் இயல்பான போக்காக மாற்றிக் காட்ட வேண்டும்.

அதனால, ஜாதிமறுப்புத் திருமணம் பண்ணனும் அப்படின்னு உறுதியா இருக்கிற தோழர்கள் யாரா இருந்தாலும் அவங்க உறவினர், நண்பர் வீடுகளுக்குத் திருமண அழைப்பிதழ் எடுத்துட்டுப்போய் அவங்க அப்பா, அம்மா கையில கொடுத்து நான் ஜாதி, தாலி, சடங்கு மறுத்து திருமணம் பண்றேன். நீங்க எல்லாரும் திருமணத்துக்கு வாங்கன்னு சொல்லி குடுத்துட்டு வாங்க. அதுதான் அடுத்து வர்ற தோழர்களுக்கு நீங்க பண்ற சரியான பணியா இருக்கும்.

## பெரியார் செல்வி

**உங்களுடைய பெயர் என்ன? நீங்க எந்த ஊர்? என்ன படிச்சிருக்கீங்க?**

பதில்: என்னோட பெயர் பெரியார் செல்வி அப்பா ஜோதிவேலு அம்மா கௌரி அப்பா சின்ன வயசுல இருந்தே பெரியார் தொண்டர். அரசு போக்குவரத்து கழகத்துல பணிபுரிந்தார். அம்மா கௌரி திருச்சியில பெரியார் நடத்துன நாகம்மையார் இல்லத்துல வளர்ந்தவங்க. இவங்க ரெண்டு பேரும் ஜாதிமறுப்பு திருமணம் செஞ்சவங்க. நான் பிறந்தது நாகை மாவட்டம் பொறையாறு கிராமம் நான் படிச்சது அங்குதான் *(B.N.Y.S.Natureopathy)* இயற்கை மற்றும் யோகா மருத்துவம் படிச்சிருக்கேன்.

**உங்களுக்குப் பெரியார்செல்வின்னு பேர் வைச்சதால ஏதாவது பிரச்சனை அதாவது நீங்க படிக்கிற கால கட்டத்துல இருந்ததா?**

என்னோட பெயர் பெரியார் செல்வி. எனக்கு இரண்டு தங்கைகள். திராவிடராணி, அன்புமணி நாங்க எந்த ஒரு நிகழ்ச்சிக்கு போனாலும் எங்க பேரே சொல்லிக் குடுத்திடும் நாங்க பெரியாரியல் வாதிகள் அப்படின்னு. ஸ்கூல்ல இந்த மாதிரி பேர் இருந்ததாலே நிறைய பிரச்சனைகளை நான் சந்திச்சு இருக்கேன். ஏன்னா நான் படிச்சது கிறிஸ்டியன் ஸ்கூல. அப்ப அங்க ஜெபம் பண்ண சொல்லுவாங்க ரொம்பவும் மோசமா பேசுவாங்க. அப்ப எல்லாம் எங்க அம்மா தான் எனக்கு நிறைய உதவி பண்ணி இருக்காங்க. எனக்காக வந்து ஸ்கூல்-ல பேசுவாங்க.

மாநில அளவில நடந்த பேச்சுப் போட்டியில் எனக்கு முதலிடம் வர்றதா இருந்தது. ஆனா இந்தப் பேர் இருந்ததால அது கிடைக்காம போயிருச்சு. அப்ப அங்க இருந்த ஒரு ஜட்ஜ் வந்து சொன்னாரு, “உனக்கு பெரியார் செல்வின்னு பேர் குடுக்காம செல்வின்னு மட்டும் பேர் குடுத்திருந்தா இந்தப் பரிசு உனக்குதான் கிடைச்சு இருக்கும்” அப்படின்னு சொன்னாரு.

அதுக்கு எங்க அம்மா சொன்னாங்க நான் பெரியார் வளர்த்த பொண்ணு. என்னோட பொண்ணுக்கு இந்த பெரியார்செல்வின்னு பேர் இருந்தால கிடைக்கலங்கறவிட அது கிடைக்காம இருந்ததே நல்லதுன்னு சொன்னாங்க . அப்பதான் என்னோட பெயரோட முழுமையை நான் உணர்ந்தேன். அதுக்கு அப்புறம் அதை ஒரு பெரிய விஷியமாக நான் எடுத்துக்கில.

**நீங்க எந்த மாதிரி திருமணம் பண்ணனுன்னு நினைச்சீங்க?உங்க திருமணம் எப்படி நடந்தது?**

நான் ஜாதிமறுப்பு, சடங்கு மறுப்புத் திருமணம் பண்ணனுன்னு நினைச்சேன். நாங்க தினத்தந்தியி-ல தான் விளம்பரம் தேடிட்டு இருந்தோம் அப்படிக் கிடைச்சவருதான் அரசூர் சிவா. அப்பா தான் முதல்ல அவர்கிட்ட பேசியிருக்காரு. அப்பா விசாரிச்சவரைக்கும் நல்ல பையனாதான் இருக்காருன்னு சொன்னாங்க. சிவா என்னை முதல்ல பார்த்தது எங்க வீட்டுக்குப் பொண்ணு பாக்கவந்தப்பதான். அப்ப நாங்க வந்து கலந்து பேசினோம். அப்புறம் நான் மாப்பிள்ளை வீடு பார்த்து எனக்கு பிடிச்சிருந்தாதான் திருமணத்துக்கு சரின்னு சொல்லுவேன்னு சொல்லியே அம்மாகூட நான் போனேன். அப்போ சிவா வீட்டுலேயும் எல்லாரையும் எனக்குப் பிடிச்சு இருந்தது. அப்புறம் அங்கேயே எங்க கல்யாணத் தேதியை முடிவு பண்ணீட்டாங்க. எங்களுக்கு ஜாதி, தாலி, சடங்கு மறுப்புத் திருமணம் தான் நடந்தது.

**திருமணத்துக்கு முன்னாடி உங்க ரெண்டு பேருக்குள்ள ஏதாவது ஒப்பந்தம் போட்டு இருக்கீங்களா?**

இல்லை திருமண தேதி முடிவு ஆனதுக்கு அப்புறமாகத்தான் நான் சிவா கிட்ட பேசினேன்.

திருமணத்திற்குப் பிறகு எங்கிட்ட மாற்றம் ஏதும் இருக்காதுன்னு சொன்னேன். ஆனால் திருமணத்திற்கு பிறகு நான் மருத்துவரா இருக்கிறதால தொடர்ந்து அந்தப் பணியை செய்யணும்னு நினைக்கிறேன்னு சொன்னேன். அப்புறம் என்னோட வளர்ப்புமுறை வேறு, உங்க வீட்டுல எப்படின்னு எனக்குத் தெரியலைன்னு சொன்னேன். அதுக்கு சிவா சொன்னாரு கல்யாணத்துக்கு அப்புறமும் நீ நீயா இரு நான் நானா இருக்கிறேன்னு சொன்னாரு. இப்ப வரைக்கும் நாங்க அப்படித்தான் இருக்கோம்.

**பெரியாரியல்வாதிகளாக இருக்குறவங்க ரொம்ப அழுத்தமானவங்களா இருப்பாங்கன்னு சொல்லுவாங்க சிவா எந்த மாதிரி இருப்பாருன்னு எதிர்பாத்தீங்க?**

அந்த விஷியத்துல எனக்கு கொஞ்சம் பயம் இருந்தது. ஏன்னா எங்க அப்பா சினிமாவே பார்த்தது கிடையாது. ஆனால் நான் நிறையா சினிமா பார்த்து இருக்கேன். நான் சிவா கிட்ட நீங்க எந்த மாதிரின்னு கேட்டப்பதான் அவர் சொன்னாரு, நான் அந்த மாதிரியெல்லாம் இல்லை. இயல்பாத்தான் இருப்பேன். நான் சினிமாவுக்கு போவேன்னு சொன்னாரு.

அழுத்தமான பெரியாரிஸ்ட்டுன்னா அந்தப் பகுதியில இருக்கிற பெரியாரியல்வாதிகள் பொது இடத்துக்கு, பொது கூட்டத்திற்குப் போனாக் கூட மனைவிகளையோ,குழந்தைகளையோ அழைச்சிட்டு போக மாட்டாங்க. அவங்க தனியாத்தான் போவாங்க வருவாங்க. குடும்பத்துல ஒரு மாற்றத்தைக் கொண்டுவர முடியாம, எந்த மாற்றத்தையும் நாம் வெளியில கொண்டு வர முடியாது.

**திருமணத்திற்குப் பிறகு உங்களுக்கு வளைகாப்பு அந்த மாதிரி ஏதாவது சீர் செஞ்சாங்களா?**

அந்த மாதிரி எதுவும் நடக்கல. தீபாவளி, பொங்கல் வந்தப்பக் கூட அவங்க வீட்டுல எதுவும் எதிர்பாக்கல. அங்க வீட்டுலையும் எதுவும் செய்யலை. பாப்பா நறுமுகைக்கு மொட்டை அடிக்கிறதுக்கு மட்டும் அவுங்க வீட்டுல சொன்னது குலதெய்வ கோவிலுக்குப் போய் மொட்டை அடிச்சு, காது குத்தணும்னு சொன்னாங்க. ஆனா நாங்க ரெண்டு பேரும் ஒரே முடிவா மறுத்துவிட்டோம்.

**ஆடை, அணிகலன், தோற்றம் போன்றவைகள்ள உங்களுடைய குழந்தைகளை நீங்க எப்படி வளர்ப்பீங்க? நீங்க எப்படி இருந்தீங்க?**

நான் வளர்ந்த சூழ்நிலையில் வந்து நான் அதிகமா நகை ஏதும் போட்டுக்க மாட்டேன். நாங்க இப்ப வரைக்கும் நறுமுகைக்கு HAIR Cut பண்ணிட்டுதான் இருக்கோம். உடைங்கிறப்ப, ஆணுக்கும் பெண்ணுக்கும் சம்மாக இருக்கணும். உடையில கூட வித்தியாசம் வரக்கூடாது அப்படிங்கிறதுல நாங்க ரெண்டு பேரும் முடிவா இருக்கோம். அப்படித்தான் நறுமுகையும் வருவா. ஆண், பெண் டிரஸ்சுல மட்டும் இல்லை, எல்லாத்துலேயும் வேறுபாடு இருக்கக்கூடாதுன்னு நாங்க நினைக்கிறோம். படிப்பு, தற்காப்புக் கலை, பேச்சுத்திறமை அந்த மாதிரி எல்லாத்துலேயும் சமமாக இருக்கணும்னு நினைக்கிறோம். ஏன்னா எங்க அப்பா அம்மா என்னை அப்படித்தான் வளர்த்தாங்க.

**பெண் விடுதலை பற்றி நீங்க என்ன நினைக்கிறீங்க?அடுத்த கட்டமாக வர்றவங்களுக்கு எந்த மாதிரியான செய்தியை சொல்லலாம்னு நினைக்கிறீங்க?**

இப்ப நிறைய பெண்கள் டிசர்ட், ஜீன்ஸ், சர்ட் எல்லாமும் போடறாங்க . அது இயல்பு ஆயிருச்சு. அந்தப் பொண்ணுங்க கிச்சனுக்குப் போகாம இருக்காங்களா? அந்த மாறுதலைக் கொண்டு வரணும். அப்பத்தான் பெண் விடுதலை அடைய முடியும். பெண்கள் உடையில மட்டும் மாறுதல் அடைந்தால் போதுமா? சமையல்ல இருந்து எல்லாத்துக்குமேயும் மாற்றம் வேணும்.

பெண் விடுதலைன்னு சொன்னா பெரியாரியல்வாதிகள் கூட பேச்சளவிலதான் அந்த மாதிரி இருக்காங்க. இப்ப எல்லா வீட்டுலையும் வேலைக்குப் போற பெண்கள், வேலைக்கும் போயிட்டு வீட்டு வேலைகளையும் கண்டிப்பாகப் பார்த்துதான் ஆகணும் அப்படிங்கற நிலைமை இருக்கு. அந்த நிலை மாறணும்னு நினைக்கிறேன்.

பெண்களுக்குச் சுதந்திரம் சுதந்திரம் அப்படின்னு வாயளவில மட்டும் பேசிட்டு இருக்கோம். காலையில எழுந்து செய்யற வேலைகளைப் பகிர்ந்து செய்யணும். அதுக்குப் பெரியாரியல்வாதி பையன்களை நாம் வேலை கத்துக்கொடுக்கறதுக்கு முயற்சி பண்ணனும். அந்த மாற்றம் வரணும். பையன்களுக்கு இன்னும் ஆண் ஆதிக்கச் சிந்தனை இருக்கு. முதல்ல அது மாறணும். வீட்டுல மாற்றம் வரணும்னு சொன்னா, பெரியர் சொன்ன மாதிரி "சமையல் அறையில் இருந்து விடுதலை இல்லாமல் ஒரு பெண் விடுதலை அடைய முடியாது" சம்பாதிக்கிறதுல எப்படி சரிசமமாக இருக்கிறோமோ அந்த மாதிரி வேலை செய்யறதிலையும் சரிசமமாக எடுத்து செய்யணும் அப்படி செய்யாம பெண்ணிய விடுதலை வராது.

**இந்த மாதிரி ஜாதிமறுப்பு திருமணம் பண்ணுனதால உங்களுடைய வாழ்க்கை முறை உங்களுக்கு நிறைவா இருக்குதா?**

எனக்கு முழு நிறைவா இருக்கு. இந்த மாதிரியான ஒரு திருமணம் தான் பண்ணனும் அப்படின்னு நினைச்சேன் இதுல எந்த ஒரு சிக்கலும் இல்லை. ஒரே ஜாதிக்குள்ள திருமணம் பண்ணியிருந்தாக்கூட இந்த அளவுக்கு அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்குமான்னு தெரியலை. எங்க ரெண்டு வீட்டுலையும் எந்தப் பிரச்சனையும் இல்லை ரொம்ப சந்தோஷமா இருக்கோம்.

15 ஆம் பக்க தொடர்ச்சி

### வீரசைவ மதமாற்றம் - தமிழர் குடியேற்றம்

இதே படையெடுப்பிற்குப் பிறகு மாகன் குளக்கோட்டன் ஆட்சியில் பௌத்த மதத்தினர் பட்ட கொடுமைகளை 'இராஜவலிய' என்ற இலங்கை வரலாற்று நூல் விளக்குகிறது.

"வடக்கிலே, ஊரான்தோட்டை, வலிகாமம், தெமளப் பட்டிணம், இலுப்பைக்கடவை; கிழக்கிலே கொட்டியாரம், திருகோணமலை, கந்தளாய்; மேற்கிலே குருந்தன்குளம், மன்னார், மாந்தை; மத்தியில் பொலனருவை, பதவிய, கொலன்னருவ முதலிய இடங்களில் மாகன், தமிழரைக் குடியேற்றினான். தமிழர் குடியேற்றங்களை உருவாக்கினான். மேலும் இவன் மக்களை தவறான சமயத்திற்கு மதம் மாற்றினான். புத்த குருமார்களின் வதிவிடங்களைக் கொள்ளையடித்தும், சங்க உறுப்பினர்களைக் கொடுமைப் படுத்தியும், செல்வந்தர்களைக் கொடுமைப் படுத்தியும் அமைதியின்மையை ஏற்படுத்தினான்."(15)

கலிங்க மாகன் - குளக்கோட்டன் இருவரது காலத்தில் இலங்கையில் வீர சைவம் செழித்தோங்கி யுள்ளது. கிழக்கு இலங்கையில் உள்ள திருக்கேதீசுவரம் (மாதோட்டம்), திரிகோணமலை, சிலாபம், கீரிமலை, தண்டேசுவரம் (மாதோட்டம்) ஆகிய பகுதிகளில் சிவலிங்கங்கங்களை மூலவர் சிலைகளாக நிறுவியுள்ளனர். இவர்களது ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் சைவ ஆயலயங்களை நிர்மாணித்து - பௌத்த மடங்களை அழித்துள்ளனர்.

இலங்கையின் வரலாற்று நூற்களாக நாம் ஏற்கனவே கூறியுள்ள அனைத்து நூல்களும் கலிங்க மாகன் - குளக்கோட்டன் படையெடுப்பு பற்றியும் அவர்களது ஆட்சி பற்றியும் எதிராகவே எழுதியுள்ளன. அந்த வரலாறுகளின்படி இவர்கள் இருவரும் மிகப்பெரும் போர்க்குற்றவாளிகள் என்றே கருத வேண்டியுள்ளது.

இலங்கையில் முக்கிய வரலாற்று ஆய்வாளர்களான, பரணவிதான, வியன கமகே போன்றவர் களும் இந்த நூல்கள் கூறும் வரலாற்றில் ஓரளவு உண்மை உள்ளது என உறுதிப்படுத்து கின்றனர். இவர்களது படையெடுப்பிலும் - ஆட்சியிலும் சிங்களர்கள் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

### சிங்களருக்கு மரண தண்டனை

யாழ்ப்பாண 'ஆரியச் சக்கரவர்த்திகள்' என்ற தமிழ்நாட்டுப் பார்ப்பனக் கலப்பு அரசர்கள் வரிசையில் கி.பி.1279 முதல் 1302 வரை ஆட்சி நடத்தியர் விக்கிரம சிங்கை ஆரியர் ஆவார். இவரது ஆட்சிக்காலத்தில் தமிழருக்கும் சிங்களருக்கும் மிகப்பெரும் மோதல் உண்டானது. இந்த மோதலில் பலர் படுகொலை செய்யப்பட்டனர். மோதலைத் தொடர்ந்து சிங்களர்கள் 17 பேருக்கு தமிழ் மன்னர் மரண தண்டனை அறிவித்தார். அதனால் மீண்டும் பெரும் இனப்போர் நடைபெற்றுள்ளது. இந்த இனமோதல் 'யாழ்ப்பான வைபவ மாலை' என்ற ஏட்டில் பதிவாகி உள்ளது.

### சப்புமல்குமரயவால் அழிந்த யாழ் நகரம்

கி.பி.1450 ல் சிங்கள 'கோட்டே' என்ற அரசின் தளபதி சப்புமல்குமரய என்பவர் யாழ்ப்பாணத் தமிழ் அரசு மீது படையெடுத்தார். அப்போது யாழ்ப்பாணத்தை ஆண்டவர் தமிழ்ப்பார்ப்பனர்களோடு கலந்த இனமான ஆரியச்சக்கரவர்த்திகளின் வம்சமான கனக சூரிய சிங்கை ஆரியன் ஆவார்.

தமிழர் படை சிங்களனின் படையிடம் தோற்றது. மன்னர் தன் இரண்டு மகள்களோடு தமிழ்நாட்டுக்குத் தப்பிஓடிவிட்டார். சப்புமல்குமரயவின் படைகள் மதங்கொண்ட யானைகள் போல யாழ்ப்பாண நகருக்குள் நுழைந்து கண்ணில் பட்டவர்களையெல்லாம் வெட்டிச் சாய்த்தன. யாழ்ப்பாணம் இரத்தக்காடாகியது. அனைத்துக் கட்டிடங்களும், வீடுகளும், மாளிகைகளும் தரைமட்டமாக்கப்பட்டன. கி.பி.1248 ல் கட்டப்பட்ட நல்லூர் கந்தசாமி கோவில் முற்றிலும் தகர்க்கப்பட்டது.(16)

இவை, தமிழ் மன்னர்கள் அல்லது சிங்கள மன்னர்களைப் பெருமைப்படுத்தவோ, சிறுமைப் படுத்தவோ பட்டியலிப்பட்டவை அல்ல. எல்லாளன் - துட்டகாமினியின் போர் இன்னும் முடிவடையவில்லைதமிழர் - சிங்களர் இனப்பகை, மதப்பகை என்பவை இன்று நேற்றல்ல; நாயக்கர் காலத்துக்குப் பிறகு அல்ல; கி.மு. 3 ஆம் நூற்றாண்டிலேயே தொடங்கி விட்டது என்பதை உறுதிப்படுத்தவே எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. இவை போல, இலங்கையின் வரலாற்றிலிருந்து இன்னும் ஏராளமான சான்றுகளைத் திரட்டித்தர முடியும்.

நாயக்கர்களின் வாரிசுகள் தான் சிங்களர்கள் என்றும் - நாயக்கர்களின் ஆட்சிக்குப் பிறகு தான் சிங்களர்கள் போர்க்குற்றங்களையும், இனப்படுகொலைகளையும், மதப்படுகொலை களையும் செய்தனர் என்றும் நாம் தமிழர் கட்சி கூறியுள்ள தவறான வரலாறுகள் உடைத்தெறியப்பட்டுள்ளன.

- தொடரும்

சான்றுகள்:

1,3,10,11. மயிலை. சீனி.வேங்கடசாமி மயிலை. சீனி.வேங்கடசாமி பண்டைத் தமிழக வரலாறு - கொங்குநாடு பாண்டியர் - பல்லவர் - இலங்கை வரலாறு

2. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவர் கலாநிதி சி.க.சிற்றம்பலம் எழுதிய 'ஈழத்தமிழர் வரலாறு - கி.பி 1000 வரை'

4. தோழர் பெரியார் - விடுதலை 06.10.1948

5. தமிழீழக் கல்விக் கழகம் வெளியிட்ட வரலாறு சொல்லும் பாடம் நூல், பக்கம் 9, 10

6,7. கலாபூஷணம் சாரல்நாடன் எழுதிய, ' கண்டிராசன் கதை' நூல்

8,9.செங்கை ஆழியான் எழுதிய 'ஈழவரலாறு: கி.மு அய்ந்தாம் நூற்றாண்லிருந்து கி.பி.1621 வரை' - ஈழநாடு 06.06.1997 , ஈழநாடு 13.06.1997

12,13. க.ப.அறவாணனின் 'ஈழம்: தமிழரின் தாயகம்' நூல், ராஜ்கவுதமனின்'தமிழ்ச்சமூகத்தில் அறமும் ஆற்றலும்'

14,15. மட்டக்களப்பு தொல்லியல் ஆய்வாளர் தங்கேஸ்வரி எழுதிய 'மாகோன் வரலாறு' நூல்

16. 'யாழ்ப்பாணம் பாரீர்' நூல், மற்றும் ஈழநாடு28.08.1997

பெரியார் நம்பி

# கந்து வட்டி

ஏனுங்க என்ர மவென் பத்தாங்கௌாசு படிச்சிகிட்டிருக்கானுங்க. முழுப்பரிச்ச எழுதுனதும் உங்க வட்டிக் கடக்கிக் கூட்டியிட்டுப்போனீங்கின்னா, வுங்களுக்குப் புண்ணியமாப்போகும். மேல படிக்கவெச்சு என்ன செய்ய அரசாங்க வேலக்கிப் போனாக்கூட சீக்கிரமா நாலு காசு பாக்க முடியாதுங்க அதனால செத்தக் கூட்டிட்டுப் போங்களேன்.

கூட்டியிட்டுப்போறதுல ஒன்னிலீங்க பய பொடிப்பயலா இருக்கானுங்க. கொஞ்ச வெவர வரவரக்கும் துணிமணி தொவக்க, சோறு கொழம்பாக்த்தான் போடுவோமுங்க. அப்பறம் காத்தால நாலு மணிக்கெல்லா எந்திரிக்கோனுமுங்க ஜனங்க வேலவெட்டிக்குப் போறதுக்குள்ள லயனுக்குப் போயாகனுங்க. மதியானத்துல செத்த நேரம் தூங்கிக்கலாமுங்க. பொறவு சாயங்காலம் நாலு மணிக்கு லயனுக்கு கெளம்பினா ராத்திரிக்கி எட்டொம்போது மணியாயிடுமுங்கோ. இதுகெல்லா சம்மதமுன்ன அனுப்புங்க. கூட்டியிட்டுப்போறேன். ஒரு நாளஞ்சு வருசத்துக்கு ஒழுங்கா இருந்தானாக்கும், மொத கால்கூட்டு அப்புற ரெண்டொரு வருசங்கழிச்சு நீங்களு கொஞ்ச பணம் போட்டிங்கின்னா அரைக்கூட்டுன்னு அரம்பிச்சு பொறவு தனியா லயன் போட்டுக் கொடுத்துடுவோமுங்க. அதுவரக்கும் எங்ககிட்ட சம்பளம் அது திதுன்னு எதையும் நீங்க எதிர்பார்க் கூடாதுங்க.

சரிங்க எப்பிடியோ அவன ஒரு மனுசனாக்கி வுடுங்க அதுபோதும்

ஏலே சதீசு என்னடா இங்க வந்து மாச ஆறாவுது இன்னு இழுத்திப்போத்தி தூங்குற? ஒனரு இன்னிக்கி உன்ன லயனுக்கு கூட்டியிட்டுப் போகச் சொல்லிரக்கார்ரா மணி காத்தால மூன்றையாவுது எந்துருச்சு பல்லை வெலக்குடா வந்து குளிச்சுக்கலா நாளஞ்சு வாரமா இழுத்தடிக்கிற நிப்பு புள்ளிகள இன்னிக்கிப் பாத்தாவுனும்

இந்த சைக்கிள் கடயில வாடக்கைகிச் சைக்கிள் எடுத்துக்கோனும். வாடகய மொத்தமா மாச ஒருக்கா ஓனர் கொடுத்துடுவாரு. இந்தத் தொழிலப் பொருத்த வரைக்கும் காலனிக்காரங்களக் குறி வைச்சச் செய்யற தொழிலு மொதல்ல நூறு எரநூரூவா மட்டுந்தான் கொடுக்கோனும். ஒவ்வொருவாட்டி காசு கோடுக்குரப்போ நூத்துக்கு அஞ்சூரூவா எழுத்திக் கூலி எடுத்துட்டு தொண்ணூத்தஞ்சூரூவாதா கொடுக்குணும். நூத்துக்கு வாரம் பன்னென்டாறர ரூவா மேனிக்கா பத்து வாரத்துல கட்டோணும். ஒருவாரம் ரெண்டுவாரம் எச்சாப்போலாம். அதுக்குமேல எச்சாப் போனா அது நிப்புக் கணக்கு. நிப்புக் கணக்கு எச்சாப்போனா, பத்து வருசமானாலும் ஓனர் கூட்டுப்போட்டுத் தரமாட்டாரு. எவ்ளோ நல்ல புள்ளியா இருந்தாலும் ஆயிரன்ரூவாக்கி மேல நாம கொடுக்கக் கூடாது அதுக்குமேல எச்சாக் கொடுத்தாயிருந்தா ஓனர் வந்துதா தருவாரு. இப்படிப் பத்தாண்டுகளுக்கு முன்பு தொடங்கியததுான் சதீசின் கந்து வட்டி வாழ்க்கை.

அப்பிச்சி நல்லாரிக்கிங்லா எங்க மாமனக் காணாம் அம்மாயி எங்க போச்சு

ஆரது ஒண்ணும் துப்பு வெலங்கலியே என்று கையை நெற்றிக்கி நடுவே குறுக்கே வைத்து கண்களை மேல் நோக்கிப் பார்த்து விசாரித்தார் வேம்பண கவுண்டர்

நாதானுங்க வுங்க அண்ணே பேரன் ராமாத்தா மவன். பூவரசம்பாளயத்துலிருந்து வந்திருக்கேன்.

அடடே நம்ம சதீசா வாடா பேராண்டி. வூட்ல அப்பனாத்தால்லா நல்லாரிங்காங்களா எம்புட்டு நாளாச்சு வுன்னப் பாத்து வுங்க அம்மாயி அந்த எருமக்கன்ன வரப்புல மாத்திக்கட்டியிட்டு வர்ரேன்னு போயிருக்கா. இங்க மழமாரி இல்லாததால வெவசாயமே ஒண்ணும் வெலங்கல இருக்குறத நம்ம பண்ணயித்து மாதாரிக்கி குத்தகக்கி உட்டுட்டு கந்துக் கடக்கிச் சேவயாவுது போலாண்ணு மாமே கேரளாவுக்கு லைன் பாக்க

போயிருக்கான். அவனுக்கு வயிசு நாப்பதாவுதுல்ல நாளக்கி ஒரு கண்ணாலங் காச்சி கட்டோனுமுல்லோ. இந்த வெவசாயத்தயே நம்பி ஒரு புரோசனமில்லயே என்றார் வேம்பணக்கவுண்டர்.

அப்பனாத்தா நல்லாருக்காங்க. அப்பிச்சி வர்ர வெசாழக்கெழமன்னிக்கி நம்ம மாம்பாற முனியப்பெ கோயல்ல கெடாவெட்டு வெச்சிருக்கேன். அந்தக் கோயலுக்கு பொம்பளங்க வரப்படாது அதால அம்மாய உட்டுட்டு நீங்க வந்துடுங்க அதுக்குள்ள மாமே வந்ததுன்னா அதையும் கூட்டியிட்டு வந்திடுங்க பிராந்தி பாட்டுலுக்கு ஏற்பாடு செஞ்சிருக்கேன். பஸ்சு கெடக்காட்டின்னா ஒரு போனப் போடுங்க. கார அனுப்புரேன் மறக்காம வந்துடுங்க அப்பிச்சி என்றான் சதீஷ்.

கந்துக்கட பரவால்லீயாக்கும்? கெடா வெட்டெல்லா வெச்சிருக்க

பரவால்லீங்க அப்பிச்சி இருக்குற நாலுகுழிக் காட்ட குத்தகிக்கி உட்டுட்டு மொதவாட்டி சம்பளத்துக்குதா போனேனுங்க. அப்புற காக்கூட்டு அரக்கூட்டுன்னு ஆரம்பிச்சு இப்போ ஆறு நா லயனு நாமட்டுந் தனியாதா பாக்குறேன். இப்பப் பராவால்லீங்க ஏதோ நாலு காசு கைலிருங்குங்க இந்தக் காசு பாவஞ்செஞ்சு சம்பாரிச்சதுங்கப்பிச்சி. அதான் அந்தப் பாவத்தக் கலுப்புக் கலிக்கக் கெடாவெட்டு வெச்சிருக்கேனுங்க.

சந்தோசமுடா பேராண்டி வுங்க மாமனு இப்பிடி எப்ப வரது? ஏங்கவல தீர்ரதுன்னு? தெரியலடா அவசியம் வந்துடுரேண்டா பேராண்டி தோட்டத்த குத்தக்கி விட்டுடேன்னு சொன்னியே ஆருக்கு உட்டுரிக்கே

எம்பட தோட்டத்தில பண்ணக்கிருந்தானுல்ல குப்ப மாதாரி அவெ மவனுக்குதா உட்டுருக்கேனுங்க அப்பிச்சி

அப்ப அந்த மாதாரியு கெடாவெட்டுக்கு கூப்புட்டிருக்கியாக்கும்?

ஆமாங்கப்பிச்சி நாமென்ன அவனுக்கு சேரு டேபுளா போட்டு சோறு போடப்போறோம் கோயல்ல பாறயில சோத்த போட்டா மாதாரி தின்னுட்டு போறான். மாம்பாற கோயல்ல தாந்த ஜாதிகாரனுங்குன்னு தனியா பாறயிருக்குல்ல.

ஏனுங்கா ஏ வூட்டுக்கரர்ரு இருந்தா செத்த கூப்புடுங்க நான் கட் பண்ணியிட்டு கூப்புடுரேனுங்க.

ஆரு முத்தியா சொல்லுடி நான்தான் பேசரேன்

ஏனங்க மாமா நீங்கதானாக்கும். ஏங்கொரல கண்டுபுடுச்சுடீங்களே அது ஒன்னிலிங்க மாமா நேத்து ராத்திரி நம்மூருக்கு சாமக்கோடாங்கி வந்திருந்தானாக்கு காத்தால நம்மூட்டுக்கு வந்து இந்தூட்ல மூனு பொட்டய பொறந்திருக்கு இந்தூட்டுக்குன்னு ஆம்பள ஒரு வாரிசு கெடயாது அதுக்கு ஒரு பரிகாரஞ்செஞ்சு நாப்பெத்துட்டு நாலக்கி வெரதமிருந்து சபரி மலக்கி மாலயேபாட்டுப் போயாந்தா எண்ணிப் பத்து மாசத்துல அந்த மணிகண்டனே மவனா வந்து பொறப்பான்னு சத்தியம் பண்ணி சொன்னானுங்க, நானும் எதுத்தூட்டு காளியக்காட்ட ஆயின்ரூவா கடவாங்கி பரிகாரம் பண்ணி தாயித்து வாங்கி வச்சிருக்கே இந்த வாரம் நீ வந்து இந்த தாயித்தக் கட்டியிட்டு வர்ர காத்திமாச ஒன்னாந்தேதி மாலயப்போட்டுட்டு மலக்கி போயாந்துரு இல்லாட்டி சாமிகுத்த மாயிடப்போவுது.

ஏண்டி... என்னப்படாபடுத்துற... ரெண்டாவுது புள்ள பொறந்தப்பவே போதுன்டி ஆப்ரேச பண்ணிக்கோ இதுகள நல்ல வளத்து பெரிய படிப்பெல்லா படிக்க வைக்கலான்னு சொன்னேன். எங்கப்பனாத்தா ஆம்பள புள்ள வேணுமுன்னு சொன்னாங்கின்னு பழனியாண்டவனுக்குப் பங்குனி மாசம் மாலயப்போட்டு வெரதமிருந்து பால்காவிடி எடுத்தா அந்த பழனியாண்டவனே வந்து பொறப்பான்னு சொல்லி அஞ்சாயிண்ருவா கந்து வட்டிகெடுத்து பால்காவிடி எடுத்தே. மூணாவுது பொட்டையாவே பொறந்துடுச்சு. அந்தக் கடனே இன்னுங்கட்டிமுடியல அதுக்கே திருப்பூருல கூலி கூடத்தர்ராகன்னு ராப்பகலா தங்கல் வேல பாக்குரேன். புள்ளங்க மொகத்தக்கூட வாரத்துக் கொருவாட்டி வந்து பாத்துகுட்டிருக்கேன். இந்த வாரம் கொண்டார சம்பளக் காசுல நாங்கந்து கட்ரதா காளியக்காட்ட நீ வாங்குன கடனக்கட்டறதா?

மாமா, கந்துக்காரருகிட்ட நாங்கேட்டுட்டேன். இன்னும் நாலுவாரந்தான் கட்டவேண்டியிருக்காம். ஏழாயின்ரூவா கணக்கா மாத்திப்போட்டு நாம கட்டவேண்டிய கழுச்சது போக நாலாயின்ரூவா தர்ராராம். நாம வாரம் எட்னூத்தி அம்புரூவா கட்டுனாப் போதுமாமா.

ஏண்டி... நாவாங்குறதே வாரம் ரெண்டாயிரத்து நானூரூவா. ஏஞ்சாப்பாட்டுசெலவு ரூம்வாடக போக வாரம் ஆயிரத்தெரனூரோ, முன்னூரோதா மிஞ்சுது அதுல எட்ணூத்தம்பதுரூவா கந்து கட்டியிட்டா... நீயி, எங்கப்பனாத்தா, புள்ளகுட்டிய வாரமுச்சுடு சோத்துக்கென்னா பண்றதாம்? நல்லதுகெட்டது எப்பிடி பாக்கறது? வேணான்டி நமக்கு பொம்பளப் புள்ளங்களே போதும்.

உனக்கென்னா கண்ணுக்கு மறவா இருக்குற. இங்க நான் படுறபாடு எனக்குத்தான் தெரியும். வெறும் பொட்டயாப் பெத்துப்போட்டிருக்கா மூதேவின்னு முன்னாடிவுட்டு பின்னாடி பேசறாங்க அப்பிடியே கொலயே பத்திகிட்டு எரியுது என மூக்கைச் சீந்தினாள் முத்தம்மாள்

சரி சரி அழுவாத சபரிமலக்கி மாலயப் போடுறேன்.

சரி மாமா தீவாளிவேற வருது எல்லா வூட்டுலயும் புதுத் துணி பலகார பட்டாசெல்லாம் வெடிப்பாங்க . கறிபுளி வேற காச்சுவாங்க. நம்மூட்டு புள்ளங்க பக்கதூட்ட வேடிக்கியா பாக்குறது அதுக்குச் சேத்து சனிக்கெழம கந்துகாருகிட்ட ஒரு ஆயின்ரூவாவது வாங்கிட்டா, அத ரெண்டு

வாரத்துகொருக்கா கட்டியிட்டா போவுது. வார நூத்திருவத்தஞ்சு ரூவாதானே?

சரி வாங்கித் தொல. என சளித்துக்கொண்ட சங்கரன் காாத்திகை மாதம் ஒன்னாந் தேதி சபரிமலைக்கு மாலையைப்போட்டு நாற்பத்தெட்டு நாள் விரதமிருந்து அய்யபன் கோவிலுக்குப் போய்வந்தான். தீபாவளிக்கும் சபரி மலைக்கும் வாங்கிய கந்தைக் கட்ட திருப்பூரில் இரண்டு இரண்டு சிப்டாகப் இரவு பகலாக வேலைபார்த்தான். வாரவாரம் வீட்டுக்கு வந்து கொண்டிருந்தவன் இரண்டு வாரத்திற்கு ஒருமுறை வீட்டிற்கு வந்தான்.

யாரம்மா ஊட்ல ஏம்மா... முத்தி சீட்டுங்காசு கொண்டாமா என கந்து வட்டி சதீஷ் சத்தம் போட்டான்.

ஏனுங்க ஏ ஊட்டுக்கார்ரு இந்த வார வர்லீங்க அடுத்த வார வந்ததும் ரெண்டு வாரக் காச சேத்துக் கட்டிரேனுங்க.

ஊங்கூட பெரிய ரோதனயாப் போச்சும்மா இப்பிடியேதான் வாரவார சொல்ற. ஆனா ரெண்டு வாரத்கொருக்கா மூணுவாரத்துக்கொருக்கா ஒத்தவாரக் காச மட்டுந்தர்ற. காசு இல்லீன்னாலு வுடமாட்டேங்குற. நச்சரிச்சுக் காசு வாங்குற. இப்பிடியே செஞ்சா வூட்டுல இருக்குற பண்ட பாத்தரத்தையெல்லா அள்ளியிட்டுப் போயி காயிலாங்கடயில உத்துக் காசாக்கிடுவேணாக்கு என மிரட்டிவிட்டுச் சென்றான் சதீஷ்.

இரண்டு வாரம் கழித்து சனிக்கிழமை இரவு ஊருக்கு வந்த சங்கரன் கந்துக்குத் தனியாக வீட்டிற்கு சாப்பாட்டிற்குத் தனியாக காசு எடுத்து வைத்துவிட்டு, காலையில் மாட்டுக்கறி எடுக்கத் தனியாகக் காசை ஒதுக்கிவைத்துவிட்டு தூங்கினான்

ஆதிகாலையில் முத்தம்மாள் படுக்கையில் எழுந்து உட்காந்து தேம்பித் தேம்பி அழத் தொடங்கினாள் அழுகைச் சத்தம் கேட்டு பதறிப்போன சங்கரன், ஏ... முத்தி என்னடி ஆச்சு உனக்கு? ஏ இப்பிடி அழுற? ஏதாச்சு கடுச்சுருச்சா? இல்லாட்டி புள்ளங்களுக்கு ஏதாச்சு ஆயிடுச்சா? என்னாச்ச சொல்லுடி

யோவ் எனக்கு வெவரந்தெருஞ்ச நாள்லிருந்து எங்கப்பனாத்தா வூட்டிலிருந்த காலத்திலிருந்து வருசாவருசம் தைப்பூசத்துக்கு மாலப்போட்டுட்டு வெரதமிருந்து பழனியாண்டவனுக்குப் பாதயாத்திரப்போயி நேத்திக்கடஞ்செலுத்தி வந்துட்டேன். இந்த ரெண்டு வருஷ வுட்டுட்டதால தைமாசம் வந்தா தாறுமாறாக் கனவு வருதுயா உனக்கேதாச்சு ஆயிடுமோன்னு பயமாயிருக்குயா. இந்த வருசம் மட்டு மாலயப் போட்டு; தைபூசத்துக்கு பழனிக்கி பாதயதத்தர போயிட்டு வந்துடுரேய்யா. ரெம்பாவொண்ணும் செலாவாகாது. இதுக்கு வெசாழக்கெழமகார்ருகிட்ட கந்தெடுத்து எப்பிடியாச்சு நாங்கட்டிகிறேன். சரின்னு மட்டு சொல்லுயா எனச் சொல்லிக் கொண்டே தேம்பினாள்.

இதெல்லா... நல்லா சாமி கும்புடோனுந்தான். அதுக்காக இப்பிடியா மாசா மாசம் நோம்பு நொடின்னு ஒரே அடியா கந்து வாங்கியிட்டேயிருந்தா குடும்பங் கெட்டுப்போயிடும்டி என்று முத்தம் மாவைத் திட்டிக் கொண்டே படுக்கையை விட்டெழுந்து, தெருவில் நடந்தானேத் தவிர "உனக்கேதாச்சு ஆயிடுமோ" என்று சொன்ன வார்த்தை மட்டும் மனதில் உயிர் பயத்தை வரவழைத்தது அதையே நினைத்துக் கொண்டு தெருவில் நடந்தவன், எதிரில் வந்த மோட்டார் சைக்கிளைக் கவனிக்கவில்லை. மோட்டார் சைக்கிளில் வந்தவர் செல்போன் பேசிக் கொண்டே வந்ததால் சங்கரன் வருவதைக் கவனிக்காமல் லேசாக மோதி இருவரும் கீழே விழுந்துவிட்டனர்.

எம்மனசுல பட்டது சரியாப்போச்சு. இது சாமிகுத்தய வருஷாவருசம் பழனிமலைக்கி போயிட்டு இந்த ரெண்டு வருஷமட்டும் போவாதது சாமி குத்தமாயிடுச்சு. நல்லவேளக்கி நல்லவேள இதுவே எங்கனவுல வந்தமாதிரி ஏதாச்சு ஆயிருந்துச்சுன்னா?... மூனு பொட்டப்புள்ளங்கள வச்சுகிட்டு நானல்ல நடுத்தெருவுல நிக்கோனும். நீ என்ன சொன்னாலும் நாங்கேட்கறதாயில்ல. வெசாழக்கெழமகார்ருகிட்ட கந்தெடுத்து தை பூசத்துக்கு மால போட்றது போட்றதான் என தீர்க்கமாகச் சொல்லி பழனிக்குப் பாதயாத்திரை போய்வந்தாள் முத்தம்மாள்

ஊட்ல ஆரும்மா முத்தி முத்தி கொண்டாம்மா காச நேராவுது என்று அழைத்தான் சதீஷ்.

ஏனுங்க... இந்த வாரம் ஏ ஊட்டுக்கார்ருக்கு மேலுக்கு நல்லாம்மா வார முச்சூடும் வேலக்கிப்போகம ரூமுலேயே படுத்துகிட்டாறார். அதால இந்த வாரம் ஏ வூட்டுக்காரு வரலீங்க கண்டிப்பா அடுத்த வார சேத்திக் கோடுத்துடுரேனுங்க.

என்னம்மா சொல்ர நீ. இப்பிடியே வாரவாரம் பதில் சொல்லியிட்டேயிருந்தா ஏம்பொழப்பு கிழுஞ்சுபோயிருமுல்ல. அதெல்லாம் எனக்குத் தெரியாதும்மா எனக்கு காசு வேணும். இல்லாட்டி புள்ள குட்டிய வுட்டுட்டு நீ ஏங்கூட வா. காசக் கொடுத்துட்டு உம்புருசெ உன்னக் கூட்டியாறட்டும் கௌம்பு.

என்னபேச்சு பேசுறீங்க நீங்க. ஏது வுட்டா ஏங்கூட வந்துபடுன்னு சொல்லுவீங்க போலீருக்கா. காசு வேணுமுன்னா காச மட்டுந்தா கேக்கோணும். அதவுட்டுட்டு வாயிக்கு வந்தபடிப் பேசாதீங்கோ.

இம்புட்டு ரோசப்படுறில்ல... வாராவார ஒழுங்காக் காசு கட்டோனுமுல்ல. காடுதொட்டத்த யெல்லாம் வித்து, நாங்க காசு கொடுப்போம். அத வாங்கியிட்டு நீங்க இழுத்தடிப்பீங்க. நாங்க வேடிக்க பாக்கோணுமாக்கும். அடுத்த வாரம் வருவேனாக்கு, எதாச்சு பதில் சொன்னியாக்கு நாரிப்போயிடுமாக்கு என்று மிரட்டினான் சதீஷ்.

யோவ் மாமா, அந்தக் கந்துகாரப் பய வந்து தாறுமாறப்பேசி மெரட்டியிட்டுப்போரான்யா. எனக்கு அவமானமாப்போச்சுய்யா. அத்தனபேருக்கு முன்னாடி நீ ஏங்கூட வா. காசக் கொடுத்துட்டு உம்புருஷன் கூட்டியாறட்டுமுன்னு பேசுரான்யா. நாண்டுக்குட்டுச் செத்துடலான்னு போச்சுயா.

அதுக்குத்தா நா அப்பவே சொன்னேன். இந்தக் கந்தெல்லாம் வேண்டாமுன்னு. கேட்டியா? சாமி குத்தம் வந்துடுமுன்னு சொன்ன. நீ அசிங்கப்பட்டு நின்னப்போ எந்தச் சாமியும் வருலியே?

சாமியப் பத்தித் தப்பாப் பேசாதயா. புள்ளைங்கலக் கூட்டியிட்டு நானு வுங்கூட வர்ரேயா. ரெண்டுபேருமா சேந்து பாடுபட்டு இந்தக் கடனக் கட்டுவோம் அங்கிருக்குற பள்ளிகோடத்துல புள்ளங்கள சேத்தியிடலாம்.

நீ என்னடி கூறுகெட்டவளாயிருக்க. திருப்பூரென்ன மெட்ராஸ் மாதிரி நெனச்சியாக்கும்? இங்க தாந்த ஜாதின்னு தெரிஞ்சா வேல தரமாட்டாங்க. குடிக்கத் தண்ணி தரமாட்டாங்க. குடியிருக்க வூடு தாமாட்டாங்க. நானே ஜாதிய மாத்திச் சொல்லி வேல செய்யுரேன் அதலயு மண்ணப்போடப் பாக்குருயாக்கும்.

எனக்குஞ்சேத்தி ஜாதி மாத்திச் சொல்லுயா. குடும்பத்தோட இருந்தா, நீ கலப்பக் கடயில திங்க வேண்டியதில்ல. ஒடம்பு நல்லாருக்கும் நாலு காசு மிச்சமாகும். கடெங்கப்பு கட்டியிட்டுப் புள்ளகுட்டிகளக் காப்பாத்திக் கரசேத்தலாம். பொட்டப் புள்ளங்களுக்குக் கழுத்து நெறய நக போடுலின்னாலு காதுல, மூக்குலுயாவுது எதயாச்சும் போட்டு அனுப்பலாமுல்ல எனப் பேசினாள். முத்தம்மாள் பேசியதை வழி மொழிந்த சங்கரன் தன் குடும்பத்தோடு திருப்பூருக்குப் குடிபெயர்ந்தான். கந்துகடக்காரனுக்குப் பயந்துகொண்டு சங்கரன் குடும்பத்தோடு ஊரைவிட்டு ஓடிவிட்டான் என ஊர் முழுவதும் ஒரே பேச்சானது.

# திருவிழாவில் நாற்காலியில் அமர்ந்த தலித்துகள் மீது தாக்குதல்! தட்டிக்கேட்ட தோழர் பெரியார் நம்பி மீது கொலைமுயற்சி!!

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் அருகே உள்ள சாலைப்புதூர் என்ற கிராமத்தில் 23.06.16 அன்று கோவில் திருவிழா நடைபெற்றுள்ளது. அதன் ஒரு கட்டமாக அன்று இரவு ஆடல் பாடல் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. அந்த நிகழ்ச்சியைக் காண கிராமத்திலுள்ள அனைத்து ஜாதியினரும் சென்றுள்ளனர். கலைநிகழ்ச்சியைப் பார்க்க வரும் மக்கள் அமர்வதற்காக நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. அவற்றில் சாலைப்புதூர் கிராமத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட அருந்ததியர் சமுதாய இளைஞர்கள் உட்கார்ந்திருக்கின்றனர். உடனே, அந்தப் பகுதியில் உள்ள பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த சிலர் நாற்காலியில் அமர்ந்த இளைஞர்களிடம், “சக்கிலியனுக்கு நாற்காலி கேட்குதா?” என்று கடுமையாகவும், கேவலமாகவும் திட்டி அவர்களை விரட்டி அடித்துள்ளனர். ஆடல் பாடலைப் பார்த்துக்கொண்டிருந்த அனைத்துப் பொதுமக்கள் முன்னிலையில் தலித் இளைஞர்கள் அவமானப்படுத்தப் பட்டுள்ளனர்.

இந்தச் செயல் காட்டாறு குழு தோழர் பெரியார்நம்பிக்கு எட்டியிருக்கிறது. தலித் இளைஞர்களை அவமானப்படுத்தித் தாக்கிய, பிற்படுத்தப்பட்ட சமுதாய இளைஞர்களிடம் சென்று, அவர்களைக் கண்டித்துவிட்டு வந்துள்ளார் பெரியார்நம்பி. அந்தப் பகுதியில் இரட்டைக்குவளை, இரட்டை இருக்கை, பொதுத்தெருவில் செருப்புப் போட்டு நடக்க முடியாமை போன்ற பல்வேறு தீண்டாமை வடிவங்கள் நடைமுறையில் இருந்தன. தோழர் பெரியார் நம்பி அனைத்துக்கும் எதிராகத் தொடர்ச்சியாகப் போராடி வருகிறார். தாழ்த்தப்பட்டோர் பிற் படுத்தப்பட்டோர் காதல் இணைகளின் ஜாதி மறுப்புத் திருமணங்களையும் நடத்தி வைத்துள்ளார். தொடர்ந்து இவரது ஜாதிஒழிப்புச் செயல்பாடுகளைக்கவனித்து வந்த பிற்படுத்தப் பட்ட ஜாதியினருக்கு இந்தத் திருவிழாச் சம்பவத்திலும் அவர் தலையிட்டது கடும் ஆத்திரத்தை உண்டாக்கியுள்ளது.

24.06.16 அதிகாலை 3 மணியளவில் நாற்காலியில் உட்கார்ந்த தலித் இளைஞர்களின் வீடுகளில் நுழைந்து தாக்குவதற்காகக் கொடும் ஆயுதங்களோடு காலனிக்குள் நுழைந்தனர். அந்த நேரத்தில் யாரும் அவர்களிடம் கிடைக்கவில்லை. எனவே, பெரியார்நம்பியின் வீட்டுக்குள் புகுந்து அவரை இரும்புக் கம்பியாலும், கத்தியாலும் தாக்கிவிட்டுத் தப்பியுள்ளனர். பலத்த காயங்களுடன் ஒட்டன்சத்திரம் கிறிஸ்டியன் மருத்துவமனையில் பெரியார்நம்பி அனுமதிக்கப்பட்டார்.

அந்தப் பகுதி காப்பிலியக்கவுண்டர், பள்ளர், பறையர், அருந்ததியினர், பிள்ளைமார், இஸ்லாமியர்கள் சமுதாய மக்கள் வசிக்கும் பகுதி. பிள்ளைமார் ஜாதியினர் மிகவும் குறைவு. ஆனால் அந்தப் பிள்ளைமார் ஜாதியைச் சேர்ந்தவர்கள்தான் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர். பிற பிற்படுத்தப்பட்ட ஜாதியினர் இதில் தலையிடவில்லை.

தோழர் பெரியார்நம்பியின் தம்பியும், தி.மு.க வழக்கறிஞர் அணிப் பொறுப்பாளருமான தோழர் க.ஜெயராஜ் உடனடியாக காவல்துறையை அணுகி SC / ST / Prevention of Atrocites Amendment Ordanance 2014 ன் படி 3(2) Va விலும், ஐபிசி செக்சன் 147, 148, 307, 3(1) ஆகிய பிரிவுகளிலும் வழக்குப் பதிய வைத்தார். காட்டாறு குழு தோழர்கள் ஒட்டன்சத்திரம் பிரபு, சுரேஸ் தமிழ்ப்புலிகள் அமைப்பின் மாநிலப்பொறுப்பாளர் பெரியார்மணி மற்றும் சாலைப்புதூர் கிராம மக்கள் ஏராளமானோர் காவல்நிலையத்திற்கும், மருத்துவமனைக்கும் சென்று வந்தவண்ணம் உள்ளனர். காட்டாறு பொள்ளாச்சி சி விஜயராகவன், சி.இராவணன், திருப்பூர் மணிகண்டன், பிரசாத், பல்லடம் வடிவேல், தி.தாமரைக்கண்ணன் ஆகியோர் நேரில் சென்றுள்ளனர். அந்தப் பகுதியைப் பற்றியும், இந்தத் தீண்டாமை வன்கொடுமை பற்றியும் அடுத்த இதழில் விரிவான தகவல்கள் வரும்.

ஆர்.எஸ்.பிரபு




# டுபாக்கூர் இயற்கை அங்காடிகளின் ஸ்தல புராணம்

ஊரெங்கும் ஆர்கானிக் கடைகள், இயற்கை அங்காடிகள் வந்தவண்ணம் இருப்பதால் முதலில் எவையெல்லாம் ஆர்கானிக், எவையெல்லாம் டுபாக்கூர், உண்மையில் இந்தச் சந்தை நெறிப்படுத்தப் பட்டிருக்கிறதா என்று பார்ப்போம்.

மத்திய அரசு, NPOP எனப்படும் National programme for Organic Production பரிந்துரைகள் மூலம் APEDA வாயிலாக (Agricultural & Processed Food Products Export Development Authority) ஆர்கானிக் சான்றிதழ் வழங்கும் முகவாண்மை அமைப்புகளுக்கு (Certifying agencies) அனுமதி அளிக்கிறது. இது உலகளாவிய தரத்தில் இருப்பதால் ஐரோப்பிய யூனியன் மற்றும் சுவிட்சர் லாந்தில் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. அமெரிக்கா வுக்கான தரம் அவர்களது USDA (United States Dept of Agriculture) வாயிலாக NOP (National Organic Program) மூலம் தரப்படும் பரிந்துரைகளின்படி நிர்ணயிக்கப்படுகிறது.

இந்தியாவில் ECOCERT, INDOCERT, India Organic, Bureau Veritas, OneCert, SGS Organic, ISCOP, Aditi, IMO Control, Control Union, Vedic Organic, FoodCert, NOCA, InterTek, Lacon Quality போன்ற பல சான்றிதழ்களும் தமிழக அரசின் TNOCD (TN Organic Certification Dept.) மூலமும், மேலும் அந்தந்த மாநில அரசுகளின் துறைகள் மூலமும் Accreditation வழங்கப் படுகிறது.

முற்றிலும் இயற்கை முறையில் விளைவிக்க வேண்டும் என்று விரும்புபவர்கள் மேற்கண்டவற்றில் ஏதோ ஒரு சான்றளிப்பு நிறுவனத்தில் பதிவு செய்து மூன்று ஆண்டுகள் எந்தவொரு இரசாயன இடு பொருட்களையும் பயன்படுத்தாமல் இருந்து அதன் பின்னர் மேற்கொள்ளப்படும் மண், நீர் மற்றும் விளை பொருட்களின் ஆய்வுகளில் இரசாயனங்கள், MRL எனப்படும் Maximum Residue Limits- க்கு கீழ் இருக்கும் பட்சத்தில் மட்டுமே சான்றிதழ் கிடைக்கும். இல்லா விடில் மேலும் ஒன்றிரண்டு ஆண்டுகள் காத்திருக்க வேண்டும்.

இவ்வாறு சான்றளிக்கப்பட்ட ஆர்கானிக் பண்ணையில் பயிரிடப்படும் பயிர்களை அந்தந்த சான்றளிப்பு முகவாண்மை மூலமாக APEDA-வின் TraceNet-இல் பதிவு செய்துகொள்வதோடு உள்ளூர் கிராம நிர்வாக அதிகாரியின் சிட்டா அடங்கலிலும் ஏற்றப்பட்டிருக்க வேண்டும். பதிவு செய்யப்பட்ட நிலத்தின் சர்வே என்னுடன் GPS Coordinates-ம் ஏற்றப்பட்டு ஒரு உத்தேச மகசூல் நிர்ணயிக்கப்படும். அதாவது ஒரு ஏக்கர் ஆர்கானிக் வாழை பயிரிட பதிவு செய்துகொண்டால் நடவு செய்த தேதி முதல் தோராய அறுவடைக் காலம் மற்றும் மகசூல் TraceNet-இல் குறிக்கப்படும்.

அந்தப் பண்ணையிலிருந்து இந்தப் பயிரை அறுவடை செய்து இன்னாருக்கு, இத்தனை டன், இன்ன வாகனம் மூலம் அனுப்பப் பட்டது என்ற Transfer Certificate (TC) வாங்கிச்செல்லும் நபர்/நிறுவனம் மீது தரப்பட்டால் மட்டுமே அது ஒரு ஆர்கானிக் விளைபொருளாக ஏற்றுக்கொள்ளப்படும். அதனால் ஒரு ஏக்கருக்கு சான்றிதழை வைத்துக்கொண்டு, ஐநூறு டன் விளைபொருளை விற்று ஏமாற்ற முடியாது.

உங்களுக்கு விற்கப்படும் பொருள், ஆர்கானிக் என்று பிரீமியம் விலை கோரும் பட்சத்தில் TraceNet

வாயிலாக அதன் நம்பகத்தன்மையை உறுதிசெய்துகொள்ள TC இருக்கிறதா என்று கேட்டு உண்மையை அறிக. மேலே குறிப்பிடப்பட்டுள்ள சான்றளிப்பு நிறுவனங்களின் வணிக இலச்சினை பொறிக்கப்பட்டதா என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்க.

பல கடுமையான சோதனைகளைத் தாண்டிச் சந்தைக்கு வரும் ஆர்கானிக் பொருட்கள் மிக அதிக பிரீமியம் விலைக்குத்தான் விற்கப்படுகின்றன. IMO Control சான்றிதழ் கொண்ட ஆர்கானிக் தேயிலை 50 கிராம் இன்று சந்தையில் 450 - 500 ரூபாய்க்குக் கிடைக்கிறது. சாதாரண த்ரீ ரோசஸ் தேயிலை 50 கிராம் எவ்வளவு என்று உங்களுக்கே தெரியும். அதிலும் ஒரு பச்சைநிறத் தவளையின் படத்தை வணிக இலச்சினையாகக் கொண்ட Rainforest Alliance சான்றளிப்புப் பெற்ற பொருட்களின் விலையைத் தேடி பார்க்கவும்.

சும்மா ஏசி அறைக்குள் ஒரு கீற்றுக் கொட்டகையைப் போட்டு, 'நாங்கள் செயற்கை உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகளைப் பயன்படுத்து வதில்லை அதனால் இதெல்லாம் ஆர்கானிக்'' என்பதெல்லாம் எந்த வகையில் வரும் என்று தெரியவில்லை. ஆர்கானிக் இறைச்சிக்காக வளர்க்கப் படும் பறவைகள், விலங்குகள் free-range ஆக இருக்கவேண்டும் என்பதோடு Adequate facilities for expressing behavior in accordance with the biological and ethological needs of the species என்பது கட்டாயம். ஆனால் இன்று நாட்டுக்கோழி, நாட்டுக்கோழி என்று மக்களை அரைமெண்டலாக்கி விற்கப்படும் நாட்டுக்கோழிகள் பண்ணையில் வளர்க்கப்படுபவையே.

உதாரணமாக ECOCERT சான்றளிப்பு வாங்க மூன்றாண்டுகள் காத்திருப்பதோடு ஆண்டுக்கு ஏக்கருக்கு 7000 ரூபாய் கட்டணம் செலுத்தி, சான்றிதழை உயிர்ப்புடன் வைத்திருந்தால்தான் சந்தையில் பிரீமியம் விலை கிடைக்கும். எத்தனை சராசரி விவசாயிகள் இதை செய்யக்கூடும்? இன்று சந்தையில் கிடைக்கும் 99 சதவீதப் பொருட்கள் ஆர்கானிக் என்ற வறட்டு நம்பிக்கையில் உற்பத்தி செய்யப்படுபவை, அல்லது வாடிக்கையாளர்களின் ஈகோவை நிரப்பப் போலியாக விற்கப்படுபவை. வேண்டுமானால் ஓர் ஆர்கானிக் கடையில் சென்று எத்தகைய சான்றிதழ் இருக்கிறது, எங்கே உற்பத்தி செய்யப்படுகிறது, TC இருக்கிறதா விசாரித்துப் பாருங்கள்.

அரிதிலும் அரிதாகச் சான்றிதழ் வைத்திருப் பவர்கள் எந்தக் கூச்சலும் இல்லாமல் அவர்களுக்கான வாடிக்கையாளர்களுடன் போய்க்கொண்டே இருப்பார்கள். இன்று இயற்கை விவசாயம் என்பது பாதுகாப்பான வங்கிச்சேமிப்பு வைத்திருப்பவர் களுக்கு, வீடுகள் கடைகள் கட்டி வாடகைக்கு விட்டிருப்பவர்களுக்கு, பைனான்ஸ் அதிபர்களுக்கு ஒரு Status Quo மட்டுமே. கொஞ்சம் அப்பாவி விவசாயிகள் பெண்களுக்கு சொத்தில் சம உரிமை கொடுக்கப்பட்டதாலும், தங்களுடைய ஆண்ட பரம்பரை அதிகாரம் கண் முன்னே சிதைந்து வருவதாலும் என்ன செய்வதென்றே தெரியாத கையறு நிலையில் நாட்டுமாடு, A2 பால், இயற்கை விவசாயம் என்ற காலங்கடந்த சித்தாந்தங்களைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு போவோர் வருவோரையெல்லாம் திட்டிக்கொண்டு உள்ளனர்.

உரங்களாகட்டும், பூச்சிக்கொல்லி மருந்துகளா கட்டும் ஒவ்வொன்றும் பலதரப்பட்ட ஆய்வுகளைக் கடந்துதான் சந்தையில் விற்கப்படுகிறது. இடையிலும் பல சோதனைகளும், பயனாளிகளின் கருத்துகளும் உள்வாங்கப்பட்டு மறு ஆய்வுக்கு உட்படுத்தப் படுகிறது. சில நேரங்களில் மறு ஆய்வு முடிவுகளின்படி தடை செய்யப்பட்டுவிடுகிறது. அப்படியெனில் இத்தனை நாளாக விற்றதை என்ன செய்வது ஆர்வலர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

அறிவியல் ஆய்வுகள் ஒரு துறையில் சமகால உச்சகட்ட மனிதப் புரிதல்களின்படி செய்யப் படுகிறது. பின்னாளில் அதன் புரிதல் அதிகரிக்கும் போதுதான் சில கண்டுபிடிப்புகளின் பலவீனங்கள் தெரியவரும். அத்தகைய சூழலில்தான் தடைகள் நடைமுறைக்கு வருகின்றன. உதாரணமாக மகிழ்வுந்துகளில் Takata நிறுவன Airbags வெடிக்கும்போது இரும்புத்தூள்களை மிக அதிக வேகத்தில் வீசியெறிவதால் உயிரிழப்பு ஏற்பட்டதாக தொடுக்கப்பட்ட வழக்கில் 'இன்றைய அறிவியல் புரிதல்களின் உச்சபட்ச கருத்தாக்கங்களை வைத்து தான் இதை வடிவமைத்திருக்கிறோம், இனிமேல்தான் நீங்கள் கேட்கும் கோணத்தில் ஆய்வு செய்து ஏர்பேக்-களை வடிவமைக்க வேண்டும்' என்று சொல்லி விட்டது. சிறு தவறுகள் இருக்கிறது என்பதற்காக அதை முற்றிலும் ஒதுக்க முடியாது. அப்படிப் பார்த்தால் தமிழகத்தில் அதிகச் சாவுகளை உண்டாக்கும் ஆட்டோமொபைல் முழுவதையும் தடைதான் செய்யவேண்டும்!

ஆக, இன்று காளான்போல் முளைத்திருக்கும் திடீர் குபீர் இயற்கை அங்காடிகள், ஆர்கானிக் விவசாய வல்லுனர்கள் ஏதோ ஒரு நம்பிக்கையில், தங்களின் சமூகத்தின் மீதான தார்மீகக் கோபத்தைப் பலவாறு வெளிப்படுத்தி வருகின்றனர். அவர்களிடம் சென்று நீங்கள் இந்த சான்றிதழ் மேட்டரைக் கேட்டுக் கிளறிவிட்டால் என்ன நடக்கும்? இந்த அரசுகள் பன்னாட்டு கம்பெனிகளின் ஆதிக்கத்தால் இயற்கை விவசாயம் செய்பவர்களை நசுக்க சான்றளிப்பு என்ற பெயரில் லைசென்ஸ் ராஜ் கால அரசைப்போலவே நடந்துகொள்கின்றன. இடையில் மானே தேனே பொன்மானே என அமெரிக்க ஏகாதிபத்தியம், தரகு முதலாளிகள், பன்னாட்டு நிறுவன அடிமைகள், மூளைச்சலவை செய்யப்பட்ட முட்டாள்கள் என ஒரு சிறப்பான லெக்சர் கிடைக்கும்.

எந்தவொரு பரப்புரைக்கும் மயங்காமல் இதையெல்லாம் தாண்டினால் அது நிச்சயம் ஜென் நிலையே!

# ஆந்திரர் தமிழர்

ஜஸ்டிஸ் கட்சியிலிருந்து நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் காரணமாய் வெளியேறி விட்ட தோழர் குமாரராஜா அவர்களுக்காக குமாரராஜா அவர்களை ஆதரிக்க ஆசைப்பட்டவர் களோ அல்லது அவரிடம் கூலி பெற்றவர்களோ ஜஸ்டிஸ் கட்சியைத் தாக்க இதுசமயம் தங்களுக்கு வேறு எவ்வித கதியும் இல்லாமல் நிற்கதியா யிருப்பதை முன்னிட்டு மிக இழிவான மார்க் கத்தைக் கைக்கொள்ளத் துணிந்து விட்டார்கள். "பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்" என்கின்ற பழமொழிப்படி ஏதாவது ஒரு விஷயத்தில் பசி ஏற்பட்டு விட்டால் மானம், குலம், கல்வி, அறிவு ஆகியவைகளை அவர்களில் பலர் வந்த விலைக்கு விற்று விட்டு மிக இழிவான காரியங்களில் சிலர் இறங்கி விட்டதானது மிகவும் வெறுக்கத்தக்கதும், பரிதாபப்படத் தக்கதுமான விஷயமாக ஆகி விட்டது.

தோழர் குமாரராஜா அவர்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதற்கு ஆதாரமான பிரஸ்தாப விஷயம் தோழர் ஆர்.கே.ஷண்முகம் அவர்களுடைய இந்திய சட்டசபைத் தேர்தலில் செட்டிநாடு ராஜா சர்.அண்ணாமலையார் அவர்களும், அவர்களது குமாரரான முத்தையா அவர்களும் நம்பிக்கைக் குறைவாய் நடந்து கொண்டார்கள் என்பது காரணமாகும். இவ்விஷயம் ஒரு சாதாரணமான விஷயமா என்றால் பார்ப்பனர்களைத் தவிர அவர்களது கூலிகளைத் தவிர வேறு எந்தத் தமிழ் மக்களும் ஆம் என்று சொல்லத் துணிய மாட்டார்.

தோழர் ஷண்முகம் அவர்கள் வியாபாரி களுடைய தொகுதியில் நிற்பதற்கு காரணம் செட்டிநாடு ராஜா சர், அவர்களுடைய வாக்குறுதியே தவிர வேறொன்றும் அவ்வளவு பிரதானமாய் இருக்கவில்லை. அந்த வாக்குறுதியானது செட்டிநாடு ராஜா குமாரராஜா அவர்களால் தோழர் ஷண்முகத்துக்கு மாத்திரமல்லாமல் கட்சித் தலைவரான பொப்பிலி ராஜா அவர்களுக்கும், மற்றும் கட்சிப் பிரமுகர்கள் பலருக்கும் நிபந்தனை இல்லாமல் கொடுத்ததொரு வாக்குறுதியாகும். அது மாத்திரமல்லாமல் அவ்வாக்குறுதியானது தோழர் ஷண்முகம் அவர்களை உறுதியாக நம்பிக்கை கொள்ளச் செய்ததுடன் செட்டிமார் சமூகத்தைப் பொருத்தவரை ஓட்டுக்கு வேறு எவ்வித பிரயத்தனமோ முயற்சியோ எடுத்துக் கொள்வதற்கு இல்லாமலும், சந்தேகமோ கவலையோ படுவதற்கு இல்லாமலும் செய்து விட்டது என்பதில் சிறிதும் விவகாரத்திற்கு இடமில்லை.



**"தமிழ் மக்கள் என்று தங்களை சொல்லிக் கொள்கிறவர்கள் இம்மாதிரியான பயனற்றதும் விஷமத்தனமானதுமான ஆந்திரர் தமிழர் என்ற தேசாபிமானப் புரட்டின் மேல் தங்கள் வெற்றிக்கு வழி தேடி அவமானமடையாமல் பார்ப்பனர் அல்லாதார் என்கின்ற விஷயத்திலேயே கண்ணும் கருத்துமாய் இருந்து அதில் வெற்றி பெற உழைக்க வேண்டுமென்று எச்சரிக்கை செய்கின்றோம்."**

ஆனால் தோழர் சர். ஷண்முகம் அவர்கள் தேர்தல் தோற்றுப் போய் விட்டது என்பதும் செட்டிநாட்டைப் பொருத்தவரை பகுதிக்கும் குறைவான ஓட்டுகளே சர். ஷண்முகத்துக்குக் கிடைத்திருக்கிறது என்பதும் செட்டிநாட்டு ராஜாவும், அவரது குமாரரவர்களும் ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

இது ஒருபுறமிருக்க தேர்தலின் முக்கிய சமயத்தில் குமாரராஜா அவர்கள் சென்னையிலேயே இருந்து விட்டதும் ராஜா சர் அவர்கள் தேவ கோட்டையிலேயே யிருந்து விட்டதும் அவர்களே ஒப்புக்கொள்ளக்கூடிய காரியங்களாகும்.

இந்நிலையில் செட்டிநாடு ராஜா அவர்கள் தேர்தலுக்காக அவர்கள் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற எடுத்துக் கொண்ட முயற்சிகளுக்கு அனுகூலமாய் ருஜுவிடும் விஷயம் இரண்டு அதாவது

சர்.ஷண்முகம் தேர்தலுக்கு செட்டி நாட்டைப் பொருத்தவரை ஏற்பட்ட செலவை தான் ஏற்றுக் கொண்டிருப்பதாகவும் தனது மறுமகனார் அவர்களை ஓட்டுச் சேகரிக்க அனுப்பினதாகவும் சொல்லப்படும் விஷயங்களேயாகும்.

மூன்றாவதோ தோழர் சர். ஷண்முகம் அவர்கள் செட்டி நாடு ராஜா சர் அவர்களுக்கும், அவரது மருமகனாருக்கும் எழுதிய நன்றியறிதல் கடிதங்களாகும்.

இவற்றைத் தவிர வேறு வழியில் தங்களது வாக்குறுதியை நிறைவேற்றியிருப்பதற்கு எவ்வித சாதகமான சமாதானத்தையும் சொல்லவேயில்லை. சொன்னதாக தெரியவும் இல்லை. ஆதலால் சர் ஷண்முகம் அவர்களும் கட்சித் தலைவர்களும் மற்ற பிரமுகர்களும் கொண்டுள்ள "வாக்குறுதிப்படி நடந்து கொள்ளாததால் மேலால் நம்புவதற்கு முடியாமல் இருக்கின்றது" என்ற எண்ணம் ஏற்பட்டிருப்பதை மாற்றிக்கொள்ள முடியவில்லை.

இதற்காக ஏதாவது ஒரு வழியில் பொது ஜனங்களை உத்தேசித்தாவது சமாதானம் சொல்ல முயர்ச்சிக்காமல் ஆந்திரர் தமிழர் என்கின்ற அடிப்படையின் மேல் கட்சி கட்ட ஆரம்பித்தால் அது யோக்கியமான காரியமாகுமா? என்பதையும், அது வெற்றி பெருமா என்பதையும் குமாரராஜா அவர்களும் ராஜா சர் அவர்களும் ஆழ்ந்த யோசனை செய்து அதை கைவிட்டு வேறு முயற்சியில் ஈடுபட வேண்டுமாய் வேண்டிக் கொள்ளுகிறோம்.

ராஜா சர் அவர்கள் கட்சிக்காக பணம் கொடுத்திருப்பதை அப்படியே ஒப்புக் கொள்ளுவோம் என்றாலும் தோழர் ராமசாமி முதலியார் அவர்கள் தேர்தலில் பொப்பிலி ராஜாவுக்கு தன் கையில் இருந்து 10000 ரூபாயுக்கு மேற்பட்ட செலவு ஏற்பட்டிருக்க குமாரராஜா அவர்கள் 2500 ரூபாய் தான் கொடுத்திருக்கிறார்கள். இது அவரது அறிக்கையிலேயே விளங்குகின்றது. இந்த 2500 ரூ ராஜா சர் அவர்களும் குமாரராஜா அவர்களும் இந்தக் கட்சிக்காக இந்த பெரிய முக்கிய பிரச்சினைக்கு உதவியது மாபெரும் காரியம் என்றே வைத்துக் கொண்டாலும் இந்த 2500 விட எத்தனையோ பங்கு அதிகமான தொகையை தோழர் ராமசாமி முதலியாரின் எதிர் அபேட்சகர் விஷயத்திலும் மனமுவந்து ராஜா சர் உதவி இருப்பதாக சொல்லப்படுவதும் அதனால் பொப்பிலி ராஜா அவர்கள் கொடுத்த 10000 ரூபாயும் வேறு சிலர் கொடுத்த ரூபாயும் அனேகர் உழைப்பும் வீணாய் போய் விட்டது என்று பஹிரங்கமாக சிறு குழந்தைகள் முதல் சென்னையில் சொல்லிக் கொள்ளப்பட்டு வரும் விஷயத்திற்கு என்ன சமாதானம் என்று தெரிய மக்கள் ஆசைப்படமாட்டார்களா என்று கேட்கின்றோம்.

மொத்தத்தில் ராஜா சர் அண்ணாமலையார் குடும்பம் பார்ப்பனரல்லாதார் இயக்கத்துக்காகவோ அல்லது நன்மைக்காகவோ என்று இதுவரை எவ்வளவு ரூபாய் உதவி இருக்கிறார்கள் என்று அவர்கள் சொல்லுவதை அப்படியே ஒப்புக் கொண்டாலும் அதை விட. எத்தறுான 10 மடங்கு அதிகமாய் கட்சிக்கு விறோதமானவர்கள் வஞ்சகமானவர்கள் என்னப்பட்ட எதிரிகளான பார்ப்பனர்களுக்கும் அவர்களது சமூகத்துக்கும் அவர்களது இயக்கங்களுக்கும் கொடுத்திருக் கிறார்கள் கொடுத்து வந்து இருக்கிறார்கள் கொடுத்தும் வருகிறார்கள் என்பதை யோசித்துப் பார்க்கும்படி வேண்டிக் கொள்ளுகின்றோம்.

பார்ப்பனர்கள் பார்ப்பனர் அல்லாதார்கள் என்கின்ற பிரிவுகளையே மிக இழிவானது வெறுக்கத் தக்கது என்று சொல்லி வந்த பார்ப்பனர்கள் இன்று ஜஸ்டிஸ் கட்சியை ஒழிப்பதற்காக வெட்டி புதைப்பதற்கு ஆக தைரியமாய் ஆந்திரர்கள்தமிழர்கள் என்கின்ற பிரிவினையை ஏற்படுத்தி விட்டு அந்த சாக்கில் பார்ப்பனரல்லாதார் உணர்ச்சியும், முயற்சியும் அழிக்கப் பார்க்கின்றார்கள் என்றால் அது அச்சமூகத்துக்கு எவ்வளவு இழிவானதும் துணிச்சலானதுமான காரியம் என்று யோசிக்கும்படி வேண்டுகின்றோம்.

ஜஸ்டிஸ் கட்சி ஏற்பட்டபிறகு தமிழர்களை விட ஆந்திரர்கள் ஒன்றும் அதிகமாக சாதித்துக் கொண்டதாகச் சொல்லிவிட முடியாது.

உதாரணமாக ஆந்திரர் என்கின்ற முறையில் பனகால் ராஜாவுக்கு பரம்பரை ராஜா பட்டம் கிடைத்திருந்தால் தமிழர் என்கிற முறையில் செட்டிநாட்டு ராஜாவுக்கு பரம்பரை ராஜா பட்டம் கிடைத்திருக்கிறது. ஒரு ஆந்திர பனகால் முதல் மந்திரி ஆனால் ஒரு தமிழர் டாக்டர் சுப்பராயன் முதல் மந்திரி ஆனார்.

மந்திரிகளில் ஆந்திராவைச் சேர்ந்த 1. ஒரு பனகால், 2. ஒரு சர்.பாத்ரோ, 3. ஒரு சர்.கே.வி.ரெட்டி, 4. ஒரு முனிசாமி நாயுடு, 5. ஒரு பொப்பிலி ஆகிய ஐந்து பேர் மந்திரி ஆகியிருந்தால் தமிழர்களில் 1.

ஒரு சுப்பராயலு ரெட்டியார், 2. ஒரு சர்.சிவஞானம் பிள்ளை, 3. ஒரு டாக்டர் சுப்பராயன், 4. ஒரு முத்தைய முதலியார், 5. ஒரு சேதுரத்தினம் ஐயர், 6.ஒரு பி.டி.ராஜன் 7. ஒரு குமாரசாமி ரெட்டியார் ஆகிய ஏழு பேர்கள் மந்திரிகளாகி இருக்கிறார்கள்.

ஜஸ்டிஸ் கட்சி ஏற்பட்ட பிறகு நிர்வாக சபை கவுன்சில் மெம்பர்களில் கூட ஆந்திரர் என்கின்ற முறையில் ஒரு சர்.கே.வி. ரெட்டியார் லா மெம்பராயிருந்தால் தமிழர்களில் 1. ஒரு கே. சீனிவாசய்யங்கார், 2. ஒரு சர். உஸ்மான், 3. ஒரு சர்.சி.பி.ராமசாமி ஐயர், 4. ஒரு கே.ஆர். வெங்கிட்டராம சாஸ்திரி, 5.ஒரு கிருணணநாயர், 6.ஒரு பன்னீர்செல்வம் ஆக 6 பேர்கள் தமிழர்கள் நிர்வாக சபை மெம்பராயிருக்கிறார்கள்.

ஹைக்கோர்ட் ஜட்ஜிகளை எடுத்துக் கொண்டாலும் சரி சர்விஸ் கமிஷனை எடுத்துக் கொண்டாலும் சரி மற்றும் சர்க்காரால் நியமிக்கப் பட்ட சகல பதவிகள் உத்தியோகங்கள் ஆகியவற்றில் தமிழர்களை எந்தத் துறையிலும் ஆந்திரக்காரர்கள் மிஞ்சிவிட வில்லை என்பதை எவ்வளவு மூடனும் சுலபமாய் உணர முடியும்.

அன்றியும் ஜஸ்டிஸ் கட்சியின் சார்பாய் இதுவரை ஒரு ஆந்திரர் கூட கார்பரேஷன் பிரசிடெண்டாகவோ மேயராகவோ ஆனதில்லை. மேலும் இன்று எந்த தமிழனாவது மனம் துணிந்து தைரியமாய் தோழர் பொப்பிலிராஜா அவர்கள் ஆந்திராக்காரர் என்றாலும் இந்த மந்திரி பதவியினால் பணம் சம்பாதிக்கவோ, அல்லது தனது குடும்பத்துக் கோ, எஸ்டேட்டுக்கோ, தனது சொந்தத்துக்கோ, ஏதாவது அனுகூலமோ நன்மையோ செய்து கொள்ளவோ வந்திருக்கிறார் என்று சொல்லக்கூடுமா என்று கேட்கின்றோம்.

சுயமரியாதைக் கொள்கையைப் பொருத்த வரையில் கூட டாக்டர் சுப்பராயன் அவர்கள் ஒன்று ராஜா பொப்பிலி இரண்டு ஆகிய இரண்டு மந்திரிகள் தான் அவ்வியக்கத்தில் கலந்து கொண்டதை தெரிவிக்கவோ அல்லது சில கொள்கைகளையாவது ஒப்புக் கொள்ளுகின்றோம் என்று சொல்லவோ தைரியமாய் முன்வந்தார்களே ஒழிய மற்ற எந்த மந்திரியாவது ராஜாவாவது வாயினால் உச்சரிக்கவாவது இணங்கினார்களா என்று கேட்கின்றோம்.

கடப்பாரையை விழுங்கி விட்டு அதை ஜீரணம் செய்ய சுக்குக் கஷாயம் சாப்பிடுவது போல் மகத்தான கெடுதியும், துரோகமும் ஏற்பட்டு விட்டது என்று குற்றம் சாட்ட வந்தால் அதற்கு சரியான சமாதானம் சொல்லுவதை விட்டுவிட்டு ஆந்திரர் தமிழர் என்கின்ற கலகத்தையுண்டாக்கி விட்டு அதை அடக்கி விடலாம் என்று பார்ப்பது காட்டு வெள்ளத்தைத் தடுப்பதற்கு முரத்தை ஏந்திக்கொண்டு எதிரே நின்றதுபோல ஆகுமே தவிர வேறு ஒன்றும் இல்லை.

இதற்கு முன் கூட ஒன்று இரண்டு தடவை இந்த முயற்சி பார்ப்பனர்களால் கிளப்பி விடப்பட்டு கடைசியாக பார்ப்பனர்கள் முழுத் தோல்வி அடைந்தார்கள்.

அதாவது குருகுல போராட்டம் என்பதில் சேரமாதேவி ஆச்சிரமத்தில் பார்ப்பனப் பிள்ளைகளுக்கு உள்ளே சாப்பாடும் பார்ப்பனரல்லாதார் பிள்ளைகளுக்கு வெளியே வைத்துச் சாப்பாடும் போட்டு பொதுப் பணத்தில் நடத்தி வந்த குரு குல ஆச்சிரமத்தைப் பற்றி தோழர்கள் வரதராஜுலுவும், ஈ.வெ.ராமசாமியும் கிளர்ச்சி செய்து வந்த காலத்தில் "தமிழ் நாட்டு விஷயத்தைப் பற்றி ஆந்திர தேசத்தாரான ஒரு நாயுடுவும், கர்நாடக தேசத்தாரான ஒரு நாயக்கரும் கிளர்ச்சி செய்வது நமக்கு வெட்கமாக இல்லையா? ஆதலால் அவர்களது கிளர்ச்சியை ஆதரிக்கக் கூடாது" என்று காலஞ்சென்ற தேச பக்தர் வி.வி.எஸ்.அய்யர் அவர்களே கிளப்பி விட்டார்கள்.

காங்கிரஸ் தொண்டர்கள் சிலர் இக்கிளர்ச்சிக்கு உதவியும் செய்தார்கள். இவ்விஷயம் தோழர் திரு.வி. கல்யாணசுந்திர முதலியார் அவர்களுக்கு நன்றாய்த் தெரியும் அப்படி இருந்தும் குருகுலம் அடியோடு அழிந்ததே தவிர ஆந்திரர் தமிழர் பிரச்னை சிறிது கூட பயன்படவில்லை. அது போலவே மற்றொரு சமயமும் காங்கிரஸ் கமிட்டியில் கிளப்பப்பட்டு தோழர் திரு.வி. கல்யாணசுந்திர முதலியார் அவர்களே அதைக் கண்டித்து வெற்றி பெற்றார்.

ஆகையால் தமிழ் மக்கள் என்று தங்களை சொல்லிக் கொள்கிறவர்கள் இம்மாதிரியான பயனற்றதும் விஷமத்தனமானதுமான ஆந்திரர் தமிழர் என்ற தேசாபிமானப் புரட்டின் மேல் தங்கள் வெற்றிக்கு வழி தேடி அவமானமடையாமல் பார்ப்பனர் அல்லாதார் என்கின்ற விஷயத்திலேயே கண்ணும் கருத்துமாய் இருந்து அதில் வெற்றி பெற உழைக்க வேண்டுமென்று எச்சரிக்கை செய்கின்றோம்.

தோழர் பெரியார், பகுத்தறிவு - கட்டுரை 16.12.1934





பொள்ளாச்சி சி. விஜயராகவன்

# பெரியாரியல் சமூகம் நோக்கிய ஒரு பெரும்பயணம்!

## ஜாதி ஒழிப்புப் பயணத்தில் கா.சு.நாகராசனும், கா.க புதூரும்

சாதிய வன்முறைகளும், சாதி ஆணவப் படுகொலைகளும் சாதாரண நிகழ்வாகிப் போனது மட்டுமின்றி, இதை வெளிப்படையாகவே ஆதரித்துக் குரல் எழுப்புகிற அளவிற்குப் பார்ப்பனீயம் வலிமை பெற்றிருக்கிற பகுதி தமிழ்நாட்டின் மேற்கு மண்டலம் ஆகும். இந்தப் பகுதியில் இருவேறு சாதிகளைச் சேர்ந்த இரு குடும்பங்கள் சம்பந்தம் பேசி, சாதி சடங்கு, சம்பிரதாய நம்பிக்கை கொண்ட பொதுமக்கள் ஒன்று கூடி ஒரு முழுமையான சுயமரியாதை (தாலி, சடங்கு, சாதிமறுப்பு) திருமணத்தை நடத்தியிருக்கிறார்கள் என்பது கேட்பதற்கே வியப்பாகத்தானிருக்கும்.

இந்த வியப்பற்குரிய நிகழ்வு நடந்தது ஒரு சின்னஞ்சிறு கிராமத்தில். இதை முன்னின்று நடத்தியவர்கள் பெரியார் தொண்டர்கள். கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் இருந்து 15 கி.மீ தூரத்தில் கேரள மாநில எல்லையோரத்தில் இருக்கிறது கா.க.புதூர் கிராமம்.

ஆழியாற்றுப் பாசனத்தில் செழிப்பாய், இயற்கை அழகு கொஞ்சும் கிராமம். இந்த கிராமத்தைச் சேர்ந்த முருகேசுவரி - ஆறுமுகம் இணையரின் மகள் கிருத்திகா கோவை - வடவள்ளியைச் சேர்ந்த வரலட்சுமி - அழகேசன் இணையர் மகன் ஸ்டாலின் ஆகிய இருவரும் வேறு வேறு சாதிகளைச் சேர்ந்தவர்கள்.

பெரியார் தொண்டர்களாய், சாதிமறுப்புத் திருமணம்தான் செய்து கொள்ளவேண்டும் என்கிற உறுதியோடு இணை தேடிக்கொண்டிருந்த இருவருக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்தி, இருவரின் வீட்டாரிடம் சாதி, தாலி சடங்கு மறுப்புத்திருமணம் குறித்து எடுத்துக்கூறி, சம்மதம் பெற்று திருமணத்தை உறுதிப்படுத்தி திட்டமிட்டபடி 29.05.2016 ஞாயிற்றுக்கிழமை அன்று வெகு சிறப்பாக இவ்விழாவை நடத்தி முடித்திருக்கிறார்கள் கா.க.புதூர் பெரியார் திராவிடர்கழகத் தோழர்கள்.

29.05.2016 பகல் 12 மணிக்கு கா.க.புதூரில் உள்ள சாதிஒழிப்பு மாவீரர்கள் நினைவுத் தூண் முன்பு, சட்டஎரிப்புப் போராளி ஆனைமலை ஆறுமுகம் தலைமையில் நூற்றுக்கணக்கான பெரியார் தொண்டர்கள் சூழ மணமக்கள் கிருத்திகாவும் ஸ்டாலினும் சாதி ஒழிப்பு மாவீரர்களுக்கு மலர்தூவி மரியாதை செலுத்தினர் பின். திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி திராவிடர் வாழ்வியல் உறுதிமொழியை வாசிக்க, மணமக்களும் கூடியிருந்தவர்களும் உறுதிமொழியை வழிமொழிந்தனர்.

தொடர்ந்து கிருத்திகா வீட்டின் முன்பு அமைக்கப்பட்டிருந்த பந்தலில் சுயமரியாதைத் திருமண நிகழ்ச்சிகள் தொடங்கின. பெரியார் தொண்டர்கள், ஊர்ப்பொதுமக்கள் என பெண்களும் இளைஞர் களுமாய் அய்நூறுபேர் கூடியிருந்தார்கள். சாதிமறுப்புதிருமணம் செய்துகொண்ட தோழர்களின் வாழ்த்துரைகளைத் தொடர்ந்து, தோழர் கொளத்தூர் மணி வாழ்க்கைதுணை ஏற்பு ஒப்பந்த உறுதிமொழியைக் கூறித் திருமணத்தை நடத்திவைத்தார்.

பெரியார் காலத்தில் தொடங்கி திட்டமிட்டு நடத்தப்பட்ட இத்தகையை சாதி, தாலி, சடங்கு மறுப்புத்திருமணங்கள் காலப்போக்கில் காதலிப்போர் எண்ணிக்கை பெருகி அன்றாட நிகழ்வுகளாகிப் போய்விட்டன என்றாலும், பகுத்தறிவும் சுயமரியாதைச் சிந்தனைமற்ற வெறும் காதலர்கள் பாதுகாப்புக்கருதி பெரியார் இயக்கங்களை நாடி வருகிறார்களே தவிர அதன் பின் அவர்கள் எந்த ஒரு இடத்திலும் பெரியாரிஸ்டுகளாகவோ, பெரியாரியல் ஆதரவாளர் களாகவோ கூட நிற்பதில்லை.

வழக்கமான சராசரி சாதீய வாதிகளாக, பார்ப்பனீய மூடத்தனத்தில் மூழ்கிப் போய் விடுகின்றனர். இதனால், இத்தகைய திருமணங்களால் சமுதாயம் அடைந்த முன்னேற்றம் என்ன? என்று சிந்திப்பது நம் போன்றோரின் கடமை என்றே கருதுகிறோம்.

மாறாக சாதிமறுப்போடு தாலி, சடங்கு மறுப்பும் செய்து அதன் பின்னர் வாழ்நாள் முழுவதும் சமூகநலனில் அக்கறைகொண்ட பகுத்தறிவாளர்களாக அவர்கள் வாழ்வதிலேயே சுயமரியாதைத் திருமணங்களின் வெற்றி இருக்கிறது. அத்தகைய இணையர்களைத் தொடர்ந்து இயக்கப் பணியிலும் பங்கேற்கச் செய்து ஒரு சுயமரியாதைச் சமூகமாக மாற்றுவதும் அதன்மூலம் பெரியார் விரும்பிய சமூகத்தைக் கட்டமைப்பதுமான பெரும்பணி பெரியார் தொண்டர்களின் தோள்மீது கிடக்கிறது என்பதை கா.க.புதூர் கிருத்திகா - ஸ்டாலின் திருமண நிகழ்வு நமக்கு உணர்த்தியது. ஆம் இங்கு 20க்கும் மேற்பட்ட குடும்பங்கள் இப்படி இருக்கின்றன.

சாதி ஆதிக்கமும், பெண்ணடிமைத்தனமும், பிற்போக்கும் நிறைந்த சராசரி இந்திய கிராமங்களில் ஒன்றாயிருந்த கா.க.புதூர் கிராமத்தின் இந்த மாறுதல்களுக்கு யார் காரணம்? கா.க.புதூர் கிராமத்து இளைஞர்கள் மாணவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் சுட்டிக்காட்டுவது தோழர்.கா.சு.நாகராசன் குடும்பத்தைத்தான்.

தோழர் கா.சு.நாகராசன் மாணவப் பருவத்திலிருந்து பெரியார் தொண்டர் சாதாரண ஒடுக்கப்பட்ட சமூகத்தில் பிறந்து, சமூக மாற்றத் திற்காக உழைக்கத் தொடங்கியதன் விளைவாய் அவரும் அவர் குடும்பத்தினரும் அடைந்த பொருள், மன நிம்மதி இழுப்புகள் ஏராளம் !.

**ஒரு சிறிய கிராமத்தில் எப்படி உங்களால் இதுபோன்ற பணிகளில் தொடர்ந்து ஈடுபடமுடிகிறது? இது உங்களுக்கு சுமையாக இல்லையா?**

என்று அவரிடம் கேட்டபோது.

பெரியாரின் பேருழைப்பிற்கு முன்னால் இதெல்லாம் சர்வ சாதாரணம்ங்க. காட்டுமிராண்டித் தனம் புரையோடிப் போயிருந்த காலத்தில் பெரியார் நடத்திய சமூகப்புரட்சியின் பயனாய்தானே என் போன்றவர்கள் எழுந்து நிற்கிறோம். பெரியார் சந்திக்காத எதிர்ப்பா? பெரியார் எதிர்கொள்ளாத இழிவா? பெரியாருக்கு நேராத பொருள்,மன இழுப்பா? அய்யா சாலை அமைத்துக் கொடுத்துச் சென்றுள்ளார். இதில் பலபேர் தங்கள் பயணத்தை மட்டும் சுகமாய் கருதி பயணிக்கிறார்கள் சிலபேர் தங்களோடு மற்றவர்களையும் பயணிக்கச் செய்ய கொஞ்சம் சுமைகளைத் தாங்குகிறார்கள். அந்த சிலபேரில் ஒருவனாக இருக்கிற நானும் எனது காலத்தில் இயன்றளவு இந்த சிறு முயற்சியை செய்து கொண்டிருக்கிறேன் அவ்வளவுதான் என்று சொன்னவரிடம்,

**சரி இந்த சிறிய மாற்றத்திற்கு நீங்கள் எத்தகைய முயற்சிகளை மேற்கொண்டீர்கள்?**

எனக் கேட்டோம்

நான் பள்ளிப் பருவத்திலிருந்தே பெரியார் கொள்கையின் பால் பற்றுக்கொண்டு பெரியார் தொண்டனாகவே இயங்கி வருகிறவன். 1986 என்று நினைக்கிறேன் தோழர் கோவை இராமகிருட்டிணன் திராவிடர்கழகத்தில் இருந்து நீக்கப்பட்டபின் அடுத்து என்ன செய்வது? என்பதற்கான ஆலோசனைக் கூட்டம் தோழர் ஆறுச்சாமி தலைமையில் பொள்ளாச்சியில் நடைபெற்றது. தோழர்.இரா.மனோகரன் அழைத்தன் பேரில் முதன்முதலாக கருப்புச்சட்டை போட்டுக் கொண்டு அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டதுமுதல்.

கடந்த பிப்ரவரி மாதம் என்னைக் கட்சியிலிருந்து நீக்குவதாக தோழர் கோவை இராமக்கிருட்டினன் கடிதம் அனுப்புகிற வரை நான் திராவிடர் கழகம், தமிழ்நாடு திராவிடர்கழகம், தந்தை பெரியார் திராவிடர் கழகம், பெரியார் திராவிடர் கழகம் மீண்டும் தந்தை பெரியார் திராவிடர் கழகம் என முப்பது ஆண்டுகள் இயக்கம் சார்ந்த பணியாகவே இருந்து வருகிறேன்.

இந்த முப்பது ஆண்டுகளில் பெரியாரியல் என்னை பல நிலைகளிலே பக்குவப்படுத்தியருக்கிறது. குறிப்பாக தந்தை பெரியார் காலத்தில் பத்தாயிரம், இலட்சம் என மக்களைக் கூட்டி மாநாடுகள் நடத்தியிருக்கிறார். மூன்றாண்டு சிறை என்ற பிறகும் பத்தாயிரத்திற்கும் மேற்பட்வர்கள் சட்டத்தை எரித்திருக்கிறார்கள். நூற்றுக்கணக்கில் ஆயிரக் கணக்கில் பார்ப்பனியப் பண்பாட்டு எதிர்ப்புத் திருமணங்களை நடத்தியிருக்கிறார்.

பெரியார் பேசினால் எழுதினால் இந்த நாட்டு சட்டங்களே திருத்தப்பட்டிருக்கின்றன. பெரியார் வெகுண்டேழுந்தால் சக்கவரத்தித் திருமகன்களின் மணி மகுடங்கள் கழண்டு விழுந்திருக்கின்றன. இராண்டாயிரம் ஆண்டுகளாய் அதிகாரம் செலுத்திய பார்ப்பன வர்ணாஸ்ரம தர்மத்தின் ஆதிக்க பீடத்திற்கு சிம்ம சொப்பனமாய் விளங்கிய பெரியார் 1925 ல் சுயமரியாதை இயக்கம் தொடங்கி கிட்டத்தட்ட அரை நூற்றாண்டு காலம் தாமே முன்னின்று இயக்கம் நடத்தி தமது கொள்கையிலும் கொள்கை வழி இயக்கப் பணியிலும் குறிப்பிடத்தக்க வெற்றியை ஈட்டினார்.

இன்றைக்கிருக்கிற அறிவியல், தகவல் தொடர்பு, போக்குவரத்து என எந்த வசதி வாய்ப்பும் இல்லாத அந்தக்காலத்தில் பெரியாரின் பேருழைப்பால் எட்டிய உயரம் வியப்புக்குரியது புரட்சிகரமானது.

இன்றைக்குப் பெரியார் மறைந்து ஓர் அம்பது ஆண்டுகள் கூட ஆகவில்லை. அதற்குள் பெரியாரியலுக்கு எதிராக எவ்வளவு பிரமாண்டமான வளர்ச்சியைப் பார்ப்பனீயம் பெற்றிருக்கிறது சகலதுறைகளிலும்!.

காலத்திற்கேற்ற மாறுதல்களோடு பெரியாரியலை முன்னெடுத்துப் போக வேண்டும். பிரச்சார முறைகளில் இயக்க நடவடிக்கைகளில் மாறுதல் தேவைப்படுகிறது பெரியாருக்குப் பிந்தைய இயக்கப் பணிகள் பெரிதும் நிர்வாக முரண்களில் சிக்குண்டு கொண்டே செல்கிறது.

பிற்போக்கை, காட்டுமிராண்டித் தனத்தைப் பரப்புகிளவர்கள் அறிவியலை, நவீன வழிமுறைகளைப் பின்பற்றி வருகிற இந்தக்கால சூழலில், முற்போக்கையும், மாற்றத்தையும் வலியுறுத்துகிற பகுத்தறிவு இயக்கப் பணிகள் அப்படிப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் அதுதான் இன்றைய பின்னடைவுகளுக்குத் தீர்வாக இருக்கும் என்ற எண்ணம் என்னுள் பல ஆண்டுகளாகவே இருந்து வந்தது, வருகிறது.

அமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்டவுடன் எனது எண்ணப்படியான முயற்சிகளில் தீவிரம் காட்டி வருகிறேன். கருப்புச்சட்டை, கடவுள் மறுப்பு, சாதி ஒழிப்பு, பெண்விடுதலை, பார்ப்பன எதிர்ப்பு என்கிற அய்ந்தும் பெரியாரிலின் அடையாளங்கள் இவற்றை வெறும் பேச்சளவில் மட்டுமல்லாது எனது சொந்த வாழ்வில் முழுமையாய் கடைப்பிடித்து வருகிறேன்.

சாதீய நம்பிக்கையம் பிற்போக்குத் தனமுமாய் இருந்த எனது பெற்றோரையும், எனது சகோதர்கள் குடும்பத்தையும் கூட முழுமையான பெரியாரியல் தொண்டர்களாக மாற்றியிருக்கிறேன். வீட்டுற்குள் எனது முயற்சிகளுக்குக் கிடைத்த வெற்றி என்பது 76 வயதில் முடிவெய்திய எனது தந்தையின் உடலை எவ்வித சடங்குகளுக்கும் ஆட்படுத்தாமல் அப்படியே மருத்துவக் கல்லூரிக்கு எடுத்துக் கொடுக்க முடிந்தது. பத்தாண்டுகளுக்கும் முன்பு எனது வீட்டு வாசலில் ஊரைக் கூட்டிநானும் எனது வாழ்வியல் தோழர் சாந்தியும் சாதி, தாலி, சடங்கு மறுப்பு சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்டோம்.

கடந்த 20 ஆண்டுகளாக எனது குடும்பத்தில் எவ்வித சடங்குகளோ, மூடப்பண்டிகைகளோ எதவும் கொண்டாடப்பட்டதில்லை. எனது தந்தை எனக்களித்த வீட்டின் மூன்றில் இரண்டு பாகத்தை கிராமத்துப் பிள்ளைகளின் பாடசாலையாகப் பயன்படுத்தி வருகிறேன். எனது வாழ்க்கைத் துணைவர் சாந்தியின் மேற்பார்வையில் தனிப்பயற்சி வகுப்பாக செயல்பட்டு வருகிறது பூஞ்சோலை.

ஒன்றாம் வகுப்பிலிருந்து கல்லூரிக் கல்விவரை படிக்கிற இருபாலரும் எந்நேரமும் பூஞ்சோலையைப் பயன்படுத்தி வருகிறார்கள். 500 க்கும் மேற்பட்ட திராவிட இயக்க நூல்களைக் கொண்ட பெரியார் படிப்பகம் பூஞ்சோலையில் செயல்பட்டு வருகிறது.

கிராமக்கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கும் பூஞ்சோலை மூலமாக நகரங்களில் நடக்கும் பெரிய கல்விக் கண்காட்சி போன்று அறிஞர்கள் பேராசியர்களின் துணையோடு கல்விக் கருத்தரங்குகள் நடத்தி மாணவர்களின் உயர்கல்விக்கு வேலை வாய்ப்புக்கும் வழிகாட்டி வருகிறோம்.

பிற அரசியல் கட்சி நண்பர்கள், சமூக ஆர்வலர்களை ஒருங்கிணைத்து தமிழர் கலை இலக்கிய மன்றம் என்ற பெயரில் ஆண்டு தோறும் பொங்கல் விழாவை இந்துமத அடையாள மின்றி சிறப்போடு மூன்று நாட்கள் நடத்தி பெரியாரியல் கருத்துகளை மக்களிடம் கொண்டு சேர்க்கிறோம்.

தனியார் மருத்துவமனைகளின் துணையோடு பொது மருத்துவ முகாம் நடத்துவது. அரசு மருத்துவமனையின் துணையோடு குருதிக்கொடை முகாம் நடத்துவது போன்ற பணிகளை செய்து வருகிறோம்.

மாணவர்களைத் திரட்டி தமிழ்நாடு மாணவர் மன்றம் என்ற பெயரில் வளரும் மாணவர்களை பெரியாரியல் கருத்தில் வளர்ப்பது, சமூகச் சிக்கல்களில் மாணவர்களின் போரட்டங்களின் முனைப்படுத்துவது என்று பலதளங்களிலும் எங்கள் பணிகளை விரிவுபடுத்தி செயலாற்றி வருகிறோம்.

கிராமத்தின் சாமான்ய உழைக்கும் மக்கள் வீட்டு விழாக்களில் இருந்து குடும்பச்சண்டை வரை






மக்களோடு கலந்து பேசிவருகிறோம். இப்படி சொல்லும் செயலும் ஒன்றாக இருப்பதால் மக்கள் நமது கருத்துகளுக்குத் துணை நிற்கிறார்கள் ஆதரவளிக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

பெரியரியல் கொள்கையை தம் வாழ்வில் கடைப்படித்துக் கொண்டு மக்களிடையே பரப்புகிற பணியையும் செய்கிற சுமார் 20 க்கும் மேற்பட்ட தோழர்களின் குடும்பங்கள் இங்கு இருப்பதால் கா.க.புதூர் கிராமத்தின் ஒரு ஓரத்தில் பெரியாரியல் சமூகம் ஒன்று முளைவிடத் தொடங்கியுள்ளது.

எனது காலத்தில் இந்த கட்டைவிரல் பிரதேசத் திற்குள்ளாவது இந்தச்சமூகத்தை பெரியாரியல் நோக்கி ஓர் அங்குலமாவது நகர்த்துவது என்கிற சிறிய இலக்கோடு எனது முயற்சிகள் தொடருகின்றன. நிச்சியம் எனது இலக்கில் வெற்றி பெறுவேன்.

என்ற நாகராசனிடம் கடைசியாக ஒரு கேள்வி

**இந்த முயற்சிகளுக்கு எதிர்ப்புகள் இல்லையா?**

என்று கேட்டோம் ஒருகணத்த அமைதி ஒரு பெரு மூச்சுக்கு பிறகு,

“மூன்றுமுறை எனது குடும்பம் ‘ஊர்விலக்கு’ செய்யப்பட்டது. எனது தந்தையின் தொழில் முடக்கப்பட்டது. நாங்கள் செய்து வந்த வணிகம் முடக்கப்பட்டது. நாங்கள் நடத்தி வந்த தாய்த்தமிழ் பள்ளி தீவைத்து எரிக்கப்பட்டது. தோழர்களின் தொழில்கள் முடக்கப்பட்டன தோழர்களின் குடும்பத்தினர் மிரட்டப்பட்டனர். எல்லாவற்றிற்கும் மேலாக, கொலை மிரட்டல்கள். நேரடி மோதல்கள், பொய்வழக்குகள் என்று தொடர்ந்தன. பெரியாரின் கொள்கை உறுதியில் அனைத்தையும் எதிர் கொண்டு வருகிறோம்.

எங்கள் கிராமத்துக் கோவில்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் திரண்டுபோய் தங்களது வழிபாட்டு உரிமையை நிலை நாட்டினர். சாதீய ஒடுக்குமுறையும், பெண்ணடிமைத்தனமும் இல்லாத புதிய தலைமுறை வளர்ந்து வருகிறது. இந்தப் புரட்சிக்கு முன்னாள் எங்கள் வலிகள் இழப்புகள் மறைந்துவிட்டன. இதன் தொடர்ச்சிதான் கிருத்திகா - ஸ்டாலின் திருமணம் எங்கள் முயற்சிகள் தொடரும்” என்று கூறி முடித்தார் தோழர் கா.சு.நகராசன்.

முயற்சிகள் தொடரும்....

Owner and Publisher by : S.Vijayaragavan 99762 56821
Editor: C.Ragavan
# 103/104, Nethaji Road, M.C.Complex, Pollachi. 642 001
Kaattaaru2014@gmail.com